# தமிழில் மருத்துவ இதழ்கள்



முனைவர் சு. நரேந்திரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தமிழில் மருத்துவ இதழ்கள்

முனைவர் சு. நரேந்திரன்
பேராசிரியர் (ஓய்வு)
தஞ்சை மருத்துவக்கல்லூரி

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார்)
வரிசை எண் : 4 நாள்: 16.07.2003

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Thamizhil Maruthuva Ithazhgal |
| Author | : | Dr. S. Narendran<br>Professor (Rtd.)<br>Medical College, Thanjavur. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai-600 113<br>Ph: 22542992 |
| General Editor | : | Dr. S.Krishnamoorthy |
| Publication No. | : | 452 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2003 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | x + 110 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 35/- (Rupees Thirty Five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004 |
| Subject | : | Tamil Journalism |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. நோயின்றி இருப்பவரே நிறைந்த செல்வம் படைத்தவர் என்பதும், நோயுடன் இருப்பவர் நிறைந்த செல்வம் பெற்றிருந்தும் பயனில்லை என்பதும் இத்தொடரின் பொருளாகும். ஆயின் மனித உயிர் தோன்றிய காலந் தொட்டு நோயும் உடன் தோன்றியது என்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர். எகிப்தியப் பிரமிடுகளிலிருந்து கிடைத்த "மம்மீஸ்" எனப்படும் பதப்படுத்தப்பட்ட உடல்களிலும், ஆதி மனிதனின் உறை படிமங்களிலும் நோயின் அறிகுறிகள் காணப்படுவதை அன்னார் சான்றுகளாகக் காட்டுகின்றனர்.

நோய்தீர்க்கும் மருந்துகளும் மருத்துவமும், மருத்துவ மனைகளும் பண்டு தொட்டே இருந்து வந்ததை இலக்கியங்களும் கல்வெட்டுச் சான்றுகளும் புலப்படுத்துகின்றன.

**"மீன்றேர் கொட்பின் பனிக்கய மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்"**

என்ற பதிற்றுப்பத்துப்பாடல் வரிகள் (42,2-4) மூலம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் அறுவை மருத்துவத்தில் கைதேர்ந்திருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. சோழர்கள் காலத்தில் மருத்துவர்களுடன் ஓராண்டுக்குத் தேவையான மருந்துகளைக் கொண்டு மருத்துவமனைகள் செயல்பட்டதைத் திருமுக்கூடல் கல்வெட்டு (கி.பி. 1062-1067) தெரியப்படுத்துகின்றது.

அந்தந்த நாட்டின் இயற்கைச் சூழலுக்கும் கிடைக்கும் மருந்துப் பொருட்களுக்கும் தக, மருத்துவமுறைகள் சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யூனானி, அலோபதி என வேறுபட்டிருக்கின்றன. ஆயின் அனைத்தும் "நோய்தீர்த்தல்" என்ற இலக்கை நோக்கியே பயணப்பட்டு வருகின்றன. இதழியல் வளர்ச்சியைத் தொடர்ந்து மருத்துவ இதழ்கள் வெளிவரத் துவங்கின. தமிழில் மலர்ந்த முதல் மருத்துவ இதழாக 'அகத்திய வர்த்தமானி' அமைந்தது. இது சென்னையிலிருந்து

வெளியிடப்பட்டது. இற்றைக்குச் சுமார் 140 ஆண்டுகள் வரலாறுடையனவாக மருத்துவ இதழ்கள் திகழ்கின்றன.

மருத்துவர் சு.நரேந்திரன் அவர்கள் சிறந்த மருத்துவராகத் திகழ்வதுடன் தமிழ் ஈடுபாடும், தொண்டுள்ளமும் கொண்டவர் என்பதைக் 'குறள் நெறிச் செல்வர்', 'தமிழ்ப் பணிச்செம்மல்' என்று இவர் பெற்றுள்ள விருதுகளே பறைசாற்றும். 'தமிழில் மருத்துவ இதழ்கள்' என்ற இவருடைய இந்நூலில் மருத்துவ இதழ்கள் குறித்துச் செறிவான செய்திகளைத் தந்துள்ளார். மருத்துவ இதழ்களின் வடிவம், உள்ளடக்கம் குறித்த தலைப்புகள் இதழியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வார்க்குக் கருவூலமாகத் திகழ்வனவாகும். மருத்துவ இதழ்களின் கலைச் சொற்கள், உரைநடை நயம், சித்த மருத்துவத்தின் மேன்மை, சித்த மருத்துவம் தழைத்தோங்கத் தடையாக அமைந்த அலோபதி, ஆயுர்வேதம், மருத்துவ இதழ்களின் உத்திகள், மருத்துவ இதழ் ஆலோசனைக் குழுக்கள் குறித்த விளக்கங்கள் ஆகியன மருத்துவ இதழியல் துறையின் கலங்கரைவிளக்கம் இந்நூல் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

மருத்துவர் சு.நரேந்திரன் அவர்கள் இந்நூல் போன்ற பல அறிவியல் நூல்களைத் தமிழில் அழகுபட எழுதித் தமிழுக்கும் மருத்துவத்துக்கும் சிறந்த தொண்டாற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது; பாராட்டத்தக்கது. இவர்தம் அறிவியல் தமிழ்ப்பணி தொடர நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துகிறேன். இந்நூலுக்கு மெய்ப்புத் திருத்தம் செய்துதவிய சுவடிப்புல ஆய்வு உதவியாளர் திரு. த பூமிநாகநாதன் அவர்களுக்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலினை ஒளியச்சுக் கோப்புச் செய்த நிறுவனக் கணிப்பொறி உதவியாளர் திருமதி ந.லட்சுமிக்கும் இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை
**04-07-2003**

இயக்குநர்

# முகவுரை

தமிழ் வழி அறிவியலை முழுமையாகச் சொல்ல இயலும் என்ற செயல்பாட்டைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மருத்துவம் மற்றும் பொறியியல் நூல்களை முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்கள், துணைவேந்தராக இருந்த காலத்தில் செயல் வடிவத்திற்குக் கொண்டு வந்த காலந்தொட்டு மருத்துவ நூல்களை எழுதுவதில் நாட்டம் கொண்டு அதன் அடிப்படையில் பல நூல்களை மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் எழுதிய என்னை அறிந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்கள் என் மீது கொண்ட அன்பின் காரணமாக டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை சார்பாக **"தமிழில் மருத்துவ இதழ்கள்"** குறித்துப் பொழிவு நிகழ்த்த அழைத்தது என் வாழ்வில் மறக்க முடியாத ஒன்று. ஏனென்றால் தமிழில் நன்றாக ஆய்வுகள் செய்யத் தெரிந்தவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படும் இப்பொழிவுக்கு என்னைத் தேர்ந்தெடுத்தது எனக்கு ஓர் இன்ப அதிர்ச்சியே. இருப்பினும் நன்றியுணர்வோடு இயக்குநரின் அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

அழைப்பிற்கான அடுத்த நாளிலிருந்தே முனைவர் பாவேந்தன் துணையுடன் தேடுதல் வேட்டை ஆரம்பமானது. இதற்கு அன்புடன் ஒத்துழைக்க முன்வந்த நண்பர், சரஸ்வதி மஹால் நூலகர் திரு. பெருமாள் துணையுடன் ரோசாமுத்தையா நூலகம், தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம், அரசு ஆவணக் காப்பகம், மறைமலையடிகள் நூலகம், கா.சு. பிள்ளை (குளித்தலை) நூலகம், கன்னிமரா நூலகம், திரு. தி.சு. சரவணன் (திருச்சி) நூலகம் ஆகியவற்றில் உள்ள மருத்துவ இதழ்களைச் சேகரித்து என் பொழிவிற்கான செய்திகளைச் சேகரித்தேன்.

பொழிவுச் செய்திகளின் தொகுப்பான இப்புத்தகத்தின் ஆரம்பத்தில் தமிழர்களின் பெருமையை எடுத்துக்கூறும் விதமாகக் கல்வெட்டு, நிகண்டு, இலக்கியம் ஆகியவற்றில் காணப்படும்

மருத்துவக் குறிப்புகளைக் கூறியதற்குப் பிறகு, ஐரோப்பியர் வருகைக்குப் பின் ஓலைச்சுவடியிலிருந்து அச்சுக்கு மாறிய வரலாறும், அதன் பிறகு மறைபோதகர்களின் மருத்துவம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன.

வழக்கமாகப் பதிவு செய்ய வேண்டிய இதழ்களின் வகை, உருவம், அமைப்பு மற்றும் ஆசிரியர் குறிப்புகளுடன் உள்ளடக்கமும் விவாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 140 ஆண்டுகள் வரலாறுடைய மருத்துவ இதழியலின் உள்ளடக்கத்தை முழுமையாக மேற்கொள்வது இயலாத காரியம் என்று விட்டு விடாது, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் சித்த மருத்துவத்தின் வீழ்ச்சி, அலோபதி மருத்துவத்தின் எழுச்சி, மருத்துவர்களின் வேலைவாய்ப்பு, கலைச்சொல் மற்றும் உரைநடையில் காணப்படும் வடமொழித் தாக்கம் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

இவை தவிர, மருத்துவம் எவ்வாறு எம்முறையில் மக்களைச் சென்றடைந்தது, அதில் எம்முறையை மக்களால் எளிதில் கடைப்பிடிக்க முடிந்தது என்பதுடன், துப்புரவு சுகாதாரத்திற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளும், சட்டங்களும் கூறப்பட்டுள்ளன. மேலும் எந்தெந்த நோய்கள் அக்காலத்தில் அதிகமாகக் காணப்பட்டன, அந்நோய்களுக்கு மருத்துவம் கிடைத்ததா மருத்துவமே இல்லாதிருந்ததா என்பதைப் போன்ற செய்திக் குறிப்புகளும் சொல்லப்பட்டுள்ளன.

இப்பொழிவிற்கான நூலாக்க முயற்சிக்குப் பெரிதும் உதவியவர்களுள் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி மற்றும் நூலகர் பெருமாள் ஆகியோரைத் தவிர முனைவர் இராம சுந்தரம், முனைவர் விவேகானந்த கோபால், முனைவர் பி.எல். சுப்பிரமணியம், முனைவர் சுந்தர்ராஜன் ஆகியோர் அன்புடன் நினைவு கூரத்தக்கவர்கள். இவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

623, கீழவீதி
தஞ்சாவூர்

அன்புடன்
சு. நரேந்திரன்

# ஆசிரியரைப்பற்றி



மருத்துவர் முனைவர் சு. நரேந்திரன் புதுக்கோட்டையில் 9.11.42இல் பிறந்தவர். மருத்துவ இளநிலைக் கல்வியைத் தஞ்சாவூரிலும், முதுநிலைத் தகுதியைச் சென்னையிலும் நிறைவு செய்ததுடன், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கல்லீரல் நோய் குறித்த ஆய்வினை மேற்கொண்டு முனைவர் தகுதியைப் பெற்றார். தற்போது, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். பாடத்திட்டத்தின் கீழ் எழுதப்பட்ட தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடான 'பொது அறுவை மருத்துவம்' 1986ஆம் ஆண்டு தமிழக அரசு விருது வழங்கப் பெற்ற நூல். மருத்துவ ஆராய்ச்சி மற்றும் சமூக நல மேம்பாட்டுக்கான (தமிழ்நாடு பிரிவு) இந்திய மருத்துவக் கழகச் சிறப்பு விருது (1995) உள்ளிட்ட 12 விருதுகள் இவரது மருத்துவ அறிவியல் படைப்புகளுக்காகவே வழங்கப்பட்டுள்ளன. 19 மருத்துவ நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவை பொதுமக்களுக்கானவையாகும். 'நோயை வெல்வோம்', '16 வியாதிகளும் அவற்றின் வைத்தியமும்', 'புற்று நோயும் மருத்துவமும்' மருத்துவக் களஞ்சியம் தொகுதி 8 மற்றும் 10 போன்றவை இவற்றில் குறிக்கத்தக்கவையாகும். இரண்டு மருத்துவக் கட்டுரைகளைக் கொண்ட நூல்களுக்குத் தொகுப்பாசிரியராகப் பணியாற்றியுள்ளார். மைய, மாநில அரசுகளின் அறிவியல் ஆய்வுக் குழு மற்றும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பொறி மையத்துடன் இணைந்து 23க்கும் மேற்பட்ட மருத்துவ ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தளித்துள்ளார். 50க்கும் மேற்பட்ட மருத்துவ ஆய்வுச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். அவற்றில் தேசிய மருத்துவ அறிவியல் இதழ்களில் 8 கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அகில இந்திய வானொலி, வெரித்தாஸ்(மணிலா) தமிழ் ஒலி பரப்புகளில் 48 முறை உரை நிகழ்த்தியுள்ளார். தினமணி, தினகரன், மாலைமுரசு, தமிழ் முரசு (சிங்கப்பூர்) ஆகிய நாளிதழ்களிலும், கலைக்கதிர், நல்வழி, அறிக அறிவியல், களஞ்சியம், தாமரை, விஞ்ஞானச் சுடர், ராணி ஹெல்த் மற்றும் பியூட்டி ஆகிய இதழ்களிலும் 220க்கும் மேற்பட்ட மருத்துவ அறிவியல் கட்டுரைகளால் தமிழ் வாசகர்களிடையே அறிமுகமானவர். மூன்று முறை சென்னைத் தொலைக்காட்சியில் இவரது நேர்காணல் ஒளி பரப்பப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் திட்டக்குழு உறுப்பினர், தஞ்சை மாவட்ட மனிதவள மேம்பாட்டுக் கழகத் தலைவர், அகில இந்திய அறுவை மருத்துவர் கழகத் தமிழ் மாநிலப் பிரிவின் பொருளாளர், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத்தின் பொருளாளர் போன்ற *13* பொது அமைப்புகளில் சிறப்புப் பொறுப்பாளர். உலகத் தமிழ் (*6*வது, *8*வது) மாநாடுகளில் மொழியியல் ஆய்வுக் கட்டுரைகளும் அமெரிக்க நியூ ஜெர்சி மற்றும் வாஷிங்டன் தமிழ்ச் சங்கங்களில் நல வாழ்வு ஆய்வுக் கட்டுரைகளும் படித்தளிக்கப்பட்டுள்ளன. திங்கள் தோறும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமைகளில் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்கும் மேலாகப் பொதுமக்களுக்கான மருத்துவச் சொற்பொழிவுகளைத் தஞ்சையில் நிகழ்த்தியது குறிக்கத்தக்க பணியாகும். இவரது அரும்பணியைப் பாராட்டிக் **'குறள் நெறிச் செல்வர்'**, **'தமிழ்ப் பணிச் செம்மல்'** ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. பாமர மக்களுக்கு எளிய தமிழ்வழி மருத்துவ அறிவியல் அறிவைத் தூண்டுவதையும், வளர்ப்பதையும், அறிவியல் தமிழ்ப் பரப்பலையும் வாணாள் இலக்காகக் கொண்டு இன்றளவும் உழைத்துப் பயன் விளைத்து வரும் இவர் பணி மேலும் தமிழ் மக்களுக்குப் பயன் நல்கும்.

**– குப்பு. வீரமணி**

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மருத்துவ முறைகள் - அறிமுகம் | ... | 1 |
| 2. | தமிழரும் மருத்துவமும் | ... | 6 |
| 3. | மேலைநாட்டார் தமிழகம் வருகை | ... | 12 |
| 4. | தமிழில் மருத்துவ இதழியல் வரலாறு | ... | 18 |
| 5. | மருத்துவ இதழ்களின் வடிவம் | ... | 39 |
| 6. | மருத்துவ இதழ்களின் உள்ளடக்கம் | ... | 47 |

# மருத்துவ முறைகள் - அறிமுகம்

## மருத்துவம்

உயிர் எப்போதும் சூழ்நிலையோடு போராடி வருகிறது. போராட்டம் தோல்வியடையும்போது அது நோயில் முடியும்; வெற்றி உடல் நலமாகும்.

மனிதன் தோன்றிய நாள் முதல் அவனுக்கு நோய் தோன்றியதை ஆதி மனிதனுடைய உறை படிமங்களிலிருந்து அறியலாம். அழியாமல் பாதுகாக்கப்பட்ட பிரமிடுகளில் உள்ள ஆதி எகிப்திய உடல்களிலும் இக்காலத்தில் வழக்கில் உள்ள பல நோய்களின் அறிகுறிகள் இருப்பதைக் காணலாம்.

மனிதன் சூழ்நிலையின் ஓர் அம்சம். சூழ்நிலையில் வாழ்க்கைத் தரம் குலையவும் சீராகவும் செய்யும் என்பதை உணர்ந்து, இந்நாளில் மருத்துவத்தின் நோக்கம் நோயாளியின் சூழ்நிலைத் திருத்தத்திலும் கருத்துச் செலுத்தி வருகிறது. வாழ்க்கை வசதி, பொருளாதார நிலை, ஊட்டக்குறைவு, நோயாளியின் உறவினர் ஆகியோருடைய பழக்க வழக்கங்களையும் சிந்தித்துத் தக்க சீர்திருத்த முறைகளை வகுத்தும் மருத்துவம் செய்யப்படுகிறது.

ஆதி எகிப்திய நாகரிக காலம் முதல் ஹிப்பாகிரடீஸ் (கிமு. 460-357) காலம் வரை மாந்திரீகத்தோடும் சமய வழிபாட்டோடும் மருத்துவம் தொடர்புடையதாக இருந்தது.

பாபிலோனிய நாகரிகத்தில் நோயாளியைத் தெருவில் போகிறவர்களுடைய பார்வைக்கு வைத்து, அவர்கள் அனுபவங்களைத் தெரிவித்த பிறகு நோயாளிக்கு மருத்துவம் செய்யப்பட்டது.

பல நாளாக ஏஸ்க்ளிபயாடீஸ் (AESCLE PIADES) என்னும் குருக்கள் மட்டுமே அறிந்திருந்த மருத்துவத்தைத் திருத்தித் தனிக் கலையாக வகுத்தவர் ஹிப்பாகிரடீஸ். இவரே மருத்துவக் குறிப்புகளையெல்லாம் தொகுத்துப் பகுத்தறிவு முறையிலே வகுத்து நூல்களாக இயற்றினார்.

இவர் காலத்தில் தனி மனிதனுடைய நலத்திற்காகவும் பொதுமக்களுடைய நலத்திற்காகவும் தனி மனிதன் அனுசரிக்க வேண்டிய விதிகள் வகுக்கப்பட்டிருந்தன. இவ்விதிகளை ஒத்த சிந்தனைகளை நம் வேதங்களும் மனுஸ்மிருதியும் விளக்கியுள்ளன. ரோமானிய சாம்ராஜ்யம், நகர வாசிகளுக்குத் தூய்மையாகத் தண்ணீர் வழங்கும் முறையையும் சாக்கடை வசதியையும் செய்திருந்தது.

## இந்தியச் சூழலில் மருத்துவம்

கிரேக்க நாகரிகத்தைப் போலவே வரலாற்றுப் பெருமையுடையதாகக் கருதப்படுவது சிந்துவெளி நாகரிகம் எனப்படும் திராவிட நாகரிகமாகும். கிரேக்க மக்களைப்போலத் திராவிட மக்களும் சிந்துவெளிப் பகுதிகளில், மூடப்படும் கழிவுப் பாதைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதைச் சிந்துவெளி அகழாய்வுகள் வழி அறிகிறோம். சிந்துவெளி மக்களின் தொழில்நுட்ப அறிவியலை அறிவதைப் போல அவர்களின் மருத்துவ முறைகள் பற்றிய சான்றுகள் கிடைக்கவில்லை. சிந்துவெளி நாகரிகத்தின் தொடர்ச்சியாகத் திராவிட மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் மரபு சார்ந்த மருத்துவமுறைகள் வளரத் தொடங்கின. அது பிற்காலத்தில் சித்த மருத்துவமாக வளர்ந்தது. இதற்கு மாற்றாக வட இந்திய பகுதியில் வேதமரபின் தொடர்ச்சியாக ஆயுர்வேதம் வளர்ந்தது. சித்த மருத்துவமும் ஆயுர்வேதமும் வழக்கில் இருந்தன. முகமதியர் வருகையைத் தொடர்ந்து யூனானி மருத்துவமும், ஐரோப்பிய கிருத்துவச் சமயப் பணியாளர்கள் வருகையைத் தொடர்ந்து ஐரோப்பிய மருத்துவ முறையான அலோபதி மருத்துவமும் இந்தியாவிற்கு வந்தன.

## சித்த மருத்துவம்

உளநோயையும், உடல் நோயையும் நீக்கும் முறையைச் சித்தர்கள் தங்களுடைய ஞானக் கருத்தினால் தெரிந்து, இந்நோய்களைப் போக்குவதற்குக் கண்ட மருத்துவமே சித்த மருத்துவமாகும். சித்தர்கள் தாம் அனுபவித்து வந்த சித்த மருத்துவக் கலையைச் சீடர்கள் வாயிலாகக் கூறிவந்தனர்.

சித்த மருத்துவ நூல்வழி வாதம், யோகம், ஜாலம், மருத்துவம், மந்திரம், வர்மம், ஜோதிடம் முதலான பல துறைகளும் வளர்ந்துள்ளன. இத்துறை இவ்வுலக வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட அண்டமும், பிண்டமும் ஒன்றே என்ற

கொள்கையின் அடிப்படையில் அமைந்தது. இம்முறைகளை நம் முன்னோர்கள் மறைமொழியில் - பரிபாஷையில் ஓலைச் சுவடியில் எழுதி வைத்தனர். இச்சித்தமருத்துவத்தின் சித்தாந்தம் ஆயுர்வேதத்தைப் போலவே, திரிதோஷம் எனப்படும் வாதம், பித்தம், கபம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதிலேயே உடல் நலமோடு இயங்குவதாகக் கூறுவர்.

ஆக இவ்விரு மருத்துவமுறைகளும் ஒரே அஸ்திவாரத்தில் கட்டப்பட்டவை எனப் புலப்படுகிறது.

பழைய காலத்தில் மருத்துவர்கள் சீடர்களுக்குக் குணவாகடம் சொல்லிக் கொடுத்த பிறகு அவர்களைத் தங்களுடன் காட்டிற்கு இட்டுச் சென்று மூலிகைகளை நேரில் காட்டிக் குணத்தையும் சொல்லிக் கொடுத்து அவற்றிலிருந்து சத்துக்களை (Active Principles) எடுக்கும் விதத்தையும், அவற்றைப் பாதுகாக்கும் முறைகளையும் போதித்தனர். இத்துடன் புத்தகப் படிப்பும், நேரில் சவத்தை அறுத்துப் பார்த்த அனுபவமும் சேர்ந்து இருந்தால்தான் மருத்துவன் தன் தொழிலில் முழுமை படைத்தவனாகக் கருதப்படுவான். இக்கருத்துப்படி மருத்துவத்தைக் கற்ற நம் மருத்துவர்கள் மனித சவங்களை அறுத்துப் பார்க்கும் முறையைப் புத்தர் வெறுத்ததன் காரணமாக, கி.மு. 543ஆம் ஆண்டிலிருந்து நம்நாட்டில் அறுவை மருத்துவம் வளரவில்லை. இது வரலாறு.

## ஆயுர்வேதம்

இது அதர்வணவேதத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. இத்தொடர்பால் இதனை அதர்வணவேதத்தின் துணைவேதமென சரகர், ஸுசுருதர் முதலிய ஆயுர்வேத ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதனை ஆயுள்வேதம் என்றும் கூறுவர்.

அதர்வணவேதத்தில் பிணி, பிணியைப் போக்கும் மருந்துகள், மூலிகைகள், வாதம், பித்தம், சிலேத்துமம் எனப்படும் திரிதோஷ சித்தாந்தம், பிணிகளின் பெயர்கள், அவற்றின் உட்பிரிவுகள், அவற்றைப் போக்கும் மருந்துகள், உடல் உறுப்புகள் ஆகியவையுடன் ஆயுர்வேதத்திற்கே தனித் தன்மையாக விளங்கும் மருத்துவமுறை வெகுவாக விளக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, மூலிகை மருந்துகளால் பிணிகளைப் போக்கும் ஆயுர்வேத மருத்துவமுறை வேதகாலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது என்பதை நம்மால் உணரமுடிகின்றது. அதர்வணவேதத்தில் மட்டுமன்றி எல்லா வேதங்களிலும் ஆயுர்வேதத்தின் செல்வாக்கு மலிந்துள்ளது.

ஆயுர்வேதம் நமது நாட்டில் ஒரு மருத்துவ முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு ஆயுளைப் பற்றியும், நீண்ட பிணியற்ற ஆயுளைப் பற்றியும் விளக்குவதால் இதற்கு ஆயுள்வேதமெனப் பெயர் வந்தது. இது வேதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவான திருதோஷ தத்துவம் என்பது நீர், நெருப்பு, ஆகாயம், பூமி, வாயு என்னும் பஞ்சமா பூதங்களில் இருந்து உருவானது. ஆயுர்வேதம் ரசம், ரகதம், மாமிசம், மேதளம், அஸ்தி, மஜ்ஜா, சுக்லம் என்னும் சப்த தாதுக்களை உதவியாகக் கொண்டு அமைந்துள்ளது.

## யூனானி

முகமதியர்கள் இந்தியாவில் படையெடுத்த 10ஆவது நூற்றாண்டில் யூனானி மருத்துவம் அறிமுகமாகியது. படையெடுத்து வந்த முகமதிய அரசர்களுடன் வந்த முகமதிய மருத்துவர்கள் நடைமுறைப்படுத்திய அறிமுக மருத்துவமே யூனானி எனப்படுவது. இந்தியாவை முகமதியர் ஆண்ட காலத்தில் (கிபி. 1001 முதல் 1707 ஆண்டுகளில்) முதன்முதலில் இந்தியாவிற்கும், ஐரோப்பியாவிற்கும் உறவு உண்டாயிற்று. முகமதியர் காலத்திற்குப் பிறகு 1715 முதல் 1818 வரையில் பீஷ்வர்கள் என்ற ஜாதியினர் இந்தியாவை ஆண்டனர்.

இவர்களுக்குப் பிறகே ஆங்கிலேயரின் அதிகாரத்திற்கு இந்தியா வந்தது. இக்காலத்தில்தான் இந்நாட்டு மருத்துவத்திடம் மக்கள் நம்பிக்கையை இழந்தனர். அலோபதி மருத்துவத்தை நாடினர். இந்நிலையில்தான் மறைபோதகர்களால் அச்சு இயந்திரங்கள் நிறுவப்பட்டதன் காரணமாக மறைபோதனைக்கான புத்தகங்களுடன், அறிவியலும் ஓலைச் சுவடிகளிலிருந்து அச்சேறின.

## அலோபதி மருத்துவம்

மேல்நாட்டு மருத்துவம் அப்பலோ என்ற தெய்வத்திடமிருந்து வந்தது என்பது கிரேக்கர்களின் நம்பிக்கை. அதனிடமிருந்து "செயிரன்", "சென்டரோர்" ஆகியவர்களும் அதன்பின் "எஸ்குலப்பியஸ்" என்பவரும் அவருடைய புதல்வர்களும் மருத்துவத்தைக் கற்றதாகக் கருதுகிறார்கள். அவர்களுடைய தலைமையில் கோஸ் என்ற நகரில் மருத்துவக் கலாசாலை ஒன்று நடந்துவந்தது. இவ்வாறு தோன்றிய மேல்நாட்டு மருத்துவமுறையை கி.மு. 4ஆம் நூற்றாண்டில் ஹிப்போகிரட்டிஸ், அரிஸ்டாட்டில், கேலன் ஆகியோர் வளர்த்தார்கள். அரிஸ்டாட்டிலின் மறைவுக்குப் பிறகு கி.மு. 2ஆம் நூற்றாண்டில் அலெக்சாண்டிரியாவில்

மருத்துவக் கலாசாலை ஒன்றை ஹிப்போகிரடிஸ் நிறுவினார். இவருக்குப் பின் வெர்சாலின், ஃபேப்ரிசியஸ், ஹம்பர்டேன், வில்லியம் ஹார்னி, ஃபிளெமிங் போன்ற மருத்துவர்கள் பல விதங்களில் மேலைநாட்டு மருத்துவம் சிறக்க உதவினர். இதன் பிறகு கலிலியோ போன்றவர் கண்டுபிடிப்பான உஷ்ணமானி, நுண்நோக்கி மூலம் நுண்ணுயிரி கண்டுபிடிப்புப் பெருகி, மேலை மருத்துவத்தை மேலும் சிறப்படையச் செய்து வருகிறது. ஐரோப்பிய கிருத்துவச் சமயப் பணியாளர்கள் வருகையைத் தொடர்ந்து அலோபதி மருத்துவம் இந்தியாவில் அறிமுகமாகியது. கிருத்துவச் சமயப் பணியாளர்கள் வருகையைத் தொடர்ந்து அலோபதி மருத்துவம் இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்கள் தங்களுடைய கல்வி முறை பரவ முயற்சி மேற்கொண்டதைப் போலத் தங்களின் மருத்துவமுறைகள் பரவக் கல்கத்தா, சென்னை போன்ற இடங்களில் தங்களின் சொந்த தேவைக்கான மருத்துவ மனைகளையும், மருத்துவப் பயிற்சி நிறுவனங்களையும் தொடங்கினர். இதன் மூலம் இம்மருத்துவ முறை இந்தியாவெங்கும் பரவியது.

# தமிழரும் மருத்துவமும்

உலகிலேயே மூத்தகுடி என்று சொல்லுமளவிற்குக் கற்காலத் தமிழக வரலாறு 5 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இக்காலத்திற்கு முன்னரே பேச்சு மொழியை அறியாத நிலையில் சீழ்க்கை ஒலி, பறையறைவித்தல், புகை எழுப்புதல், தீயம்பு வானத்தில் எறிதல் ஆகியவற்றைக் கொண்டு ஓரிடத்தில் நடப்பதைச் சுற்று வட்டாரத்து மக்களுக்குத் தெரிவிக்கும் பழக்கம் ஏற்பட்டது. பேச்சுமொழி வளரவளர, வாய்வழியாக விரிவாகச் செய்திகளைப் பரப்ப முடிந்தது.

## கருத்துப் பதிவு

திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் குருகுல முறையில் ஆசிரியர்களிடத்திலுமாகக் கல்வி பயின்றவர்கள் பல நூல்களை மனப்பாடமாகவே பயின்றனர். மனப்பாடத்திலுள்ள அந்த நூல்களையும் எழுத்து வடிவில் பதிவு செய்துவைக்கும் பணியில் ஈடுபட்டபோது அவர்களுக்கு எழுதுபொருளும், எழுதப்படும் பொருளும், எழுது கருவிகளும் தேவைப்பட்டன.

சுருக்கிய கருத்துக்களையும், செய்திகளையும் களிமண், பலகை, கல், ஓடு, இலை, பூர்ஜப்பட்டை, மரப்பலகை, துணி, மூங்கில்பத்தை, உலோகத்தகடு போன்றவற்றில் எழுதி வைத்தார்கள்.

இவற்றைப் போலவே தமிழ் மொழியில் இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலியவை தொன்மைக்காலத்தில் பனையோலைகளில் எழுதப்பட்டன. ஆகவேதான் அறிவியலுடன் வரலாற்று உண்மைகளையும் இவ்வோலைச் சுவடிகளிலிருந்தே அறிந்து கொள்ள வேண்டியதாய் உள்ளது.

தமிழ்நாட்டை மூவேந்தர்களும், பிறரும் ஆட்சி புரிந்து வந்தபோது, கோவில் மதிற்சுவர்களிலும், செப்புத் தகடுகளிலும் தமது கட்டளைகளையும், ஆட்சி முறைகளையும், தாம் பெற்ற வெற்றி பற்றிய வரலாறுகளையும் பொறித்து வைத்தனர். பொது மக்கள் தமது எண்ணத்தை ஓலைச் சுவடிகளில் எழுத்தாணி

கொண்டு எழுதி வந்தனர். பனைஓலைச் சுவடிகளில் கூரான இரும்பு எழுத்தாணி கொண்டு எழுதியதால், ஓலை கிழியாமல் இருக்க வளைவுகளும், சுழிகளும் ஏற்பட்டன. ஆகவே நூல்களை எழுதி முடிக்க அதிகக் காலச் செலவும், உடலுழைப்பும், பொருட்செலவும் துன்பம் தருவனவாக இருந்தன.

செய்திகளை எல்லோரும் அறிந்துகொள்ளும் வகையில் பொது இடங்களில் அதிலும் குறிப்பாகக் கோவில்களில் கல்வெட்டு மூலம் செய்திகளும், ஆணைகளும் பொறிக்கப்பட்டன. இப்படிப் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் மூலம் அன்றைய மருத்துவ முறைகளையும் அறிய முடிகிறது.

## கல்வெட்டில் மருத்துவம்

திருமுக்கூடல் கல்வெட்டு மூலம் (கி.பி. 1062-1067) வீரசோழன் ஆதூரகர் சாலையில் மருத்துவப் பருவப்பள்ளியில் மருத்துவர், செவிலியர், அறுவைச் சிகிச்சை செய்பவர் மருத்துவம் பார்த்த செய்திகளுடன் அச்சாலையில் மருத்துவம் செய்யுமிடமும் ஓராண்டுக்கு வேண்டிய மருந்தும் இருந்ததாக அறிய முடிகிறது. இதுபோலவே கி.பி. 1015இல் மக்களுக்காகச் சுந்தர சோழ விண்ணாசூர ஆதூரகசாலை என்ற மருத்துவமனை பணியாற்றியமையையும் அறிய முடிகிறது.

கல்வெட்டைத் தொடர்ந்து சற்று விரிவாக மருத்துவச் செய்திகளை நிகண்டுகள் மூலம் அறிய முடிகிறது.

## இலக்கியங்களில் மருத்துவம்

சங்க காலத் தமிழ் இலக்கியங்களில், தமிழகத்தில் தனி மருத்துவ முறை ஒன்று வழக்கத்தில் இருந்தமைக்கான சான்றுகளை ஆங்காங்கே காணலாம்.

மருத்துவர்கள் நல்ல கொள்கைகளையும், தூய ஒழுக்கத்தையும் உடையவர்களாயிருந்தார்களென்பதை விளங்கிய கொள்கை "ஆயுள்வேந்தர்" என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

மருந்தால் நோய் தீருமென்பதையும், சில நோய்கள் தீராதென்பதையும் இன்ன நோய்க்கு இன்ன மருந்து பயனளிக்கும் என்பதையும் புறநானூறு தெளிவாகக் கூறுகிறது.

**"பசிப்பிணி மருத்துவ னில்லம்**
**அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே"** *(புறம். 173)*

"விறலிழை நெகிழ்ந்த வீவு அரும் கடும் நோய்"
*(குறிஞ்சிப்பாட்டு 3)*

உடலில் காயம்பட்டவருக்கு நெய்கிழி வைத்தல், எண்ணெய்ப்பத்தரில் கிடத்தல், ஒடிந்த எலும்புகளை அறுத்தெடுத்தல், புண்களுக்கு மருந்தை வைத்தல், எலி மயிர்க் கம்பளத்தால் போர்த்தல் முதலியன கையாளப்பட்டன என்பதை,

"நெய்கிழி வைக்கப் பட்டார் நெய்ப்பத்தற் கிடத்தப் பட்டார்
புக்குழி எஃகம் நாடி இரும்பினால் போழப்பட்டார்"
*(சிந்தாமணி 818)*

உடல் முற்றும் புண்பட்டவர்கட்கு,

"முது மரப்பொந்து போல, முழுமையும் புண்களுற்றார்க்கு
இது மருந்தென்ன நல்லார் இழுது சேர் கவளம் வைத்து"
"....நெய் கிழி பயிலச் சேர்த்தி
நுதிமயிர்த் துகில்குப் பாயம் புகு" *(சிந்தாமணி 819)*

என்ற பாக்களால் அறியலாம்.

புண்ணை ஆற்ற இசையும் பயன்பட்டன என்பதை,

"..மருப்பு யாழொடு பல்லியங் கறங்க
இசைமணி பொறிந்து காஞ்சி பாடி" *(புறம் 281)*

என்ற அடிகள் கூறுகின்றன.

புண்ணிற்குப் பஞ்சிட்டுக்கட்டும் பழக்கம் உள்ளதென்பதை,

"கதுவாய் போகிய துதிவாய் எஃகமொடு
பஞ்சியும் களையாப் பண்ணர்" *(புறம். 353)*

என்பர்.

அறுவைச் சிகிச்சையில் தமிழர்கள் மேம்பட்டிருந்ததை கொங்கு நாவிதச்சி வயிற்றை அறுத்துத் தாயையும், சேயையும் காப்பாற்றிய செய்தியைக் கொங்கு நாட்டுச் சதகம் வாயிலாகவும், அகஸ்தியர் நயனவிதி 500இல் 26 வகை அறுவைச் சிகிச்சைக்கான கருவிகள் சுட்டப்பட்டுள்ளதன் மூலமும் அறிய முடிகிறது.

## நிகண்டுகள்

திவாகர நிகண்டு (7ஆம் நூ.), பிங்கல நிகண்டு (10ஆம் நூ.), நாமதீப நிகண்டு (18ஆம் நூ.) ஆகியவற்றுள் மருத்துவம் தொடர்பான பல செய்திகள் காணக் கிடைக்கின்றன. திவாகர நிகண்டில் மனிதனின் உடற்கூறுபாடு அக்குள், இடை, மார்பு, வயிறு, முலை முதலிய உடற்கூறு பற்றிய பெயர்ச் சொற்களுடன், விலங்கினப் பெயர்த் தொகுதி நான்கு வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளது என்பது நம் முன்னோர்களின் விலங்கியல் மருத்துவத்தை எடுத்தியம்புவதைக் காட்டுகிறது.

## தமிழ் மருத்துவம், பனை ஓலையில்

சித்த மருத்துவம் என்று சொல்லப்படும் தமிழ் மருத்துவம் நோய்களைக் குணமாக்கும் முறைகளைப் பரிபாஷையில் செய்யுள் வடிவத்தில் மனப்பாடம் செய்வதற்காக எழுதப்பட்டுப் பிறகு செவி வழியாகக் கூறப்பட்டு வந்தன. அதன் பிறகு வழக்கில் இருந்த அறிவியல் கருத்துக்களை ஓலைச் சுவடிகளில் தமிழர்கள் பதிவு செய்துள்ளனர். என்றாலும், அவையுள்ள மருத்துவ ஏடுகளை ஒட்டுமொத்தமாகத் தற்பொழுது காண்பது முடியாத செயல்.

உலகில் மற்ற நாடுகளைவிடத் தமிழ்நாட்டில் பனைமரம் மிகுதியாகையால் பழங்காலத் தமிழர்கள் பனையோலைகளில் அதிக அளவில் எழுதி அவற்றைப் பதித்து வந்தனர். ஓலைச் சுவடிகளில் எழுதும் மரபு வளர்ந்து, பின்னரே கல்வெட்டுகள் அதிக அளவில் வெட்டப்படக் காரணமாயிற்று; ஏனெனில் ஓலையில் எழுதியதைப் பார்த்துத்தான் கல்லில் செதுக்கினர். தமிழகத்தில் கிடைத்த சுவடிகளில் மருத்துவச் செய்திகள் பாடல் வடிவிலேயே இடம் பெற்றுள்ளன. தமிழில் மருத்துவ நூல் எழுதுமுறை வரலாற்றை ஓலைச் சுவடிகளிலிருந்தே தொடங்கவேண்டும்.

ஓலைச் சுவடிகள் அதிகக்காலம் இருப்பதில்லை. விரைவில் பூச்சி அரித்துவிடும். ஆகையால் அக்காலப் புலவர்கள் ஓலைச்சுவடிகள் எழுதும் முன் மருந்து கலந்த நீரில் கொதிக்கச் செய்த பிறகே ஓலையில் எழுதத் தொடங்கினர். ஆண்டுக்கு ஒரு முறை ஓலைச் சுவடிகளை எடுத்துக் கிருமி நாசினியான மஞ்சள் பூசிப் பாதுகாத்து வந்தனர். இப்படிப் பாதுகாக்கப்பட்ட ஓலைச்சுவடிகள் சுமார் ஐநூறு ஆண்டுகள் வரை அழியாமல் இருந்தன. ஓலைச்சுவடிகள் பாதுகாத்து வரப்பட்ட போதிலும் பல ஓலைச்சுவடிகள் அழிந்தும் உள்ளன. இப்படி அழிந்த

ஓலைச்சுவடிகளைக் கண்ட தமிழ்ப் பற்றுள்ள அரசர்கள் பல புலவர்களைக் குழுக்களாக அமைத்து அவற்றை மீண்டும் புது ஓலைச் சுவடிகளில் எழுதிப் பாதுகாத்தனர். இங்குக் குறிப்பிட வேண்டிய ஒரு செய்தி என்னவெனில் ஓலைச் சுவடிகளை ஆடிப் பதினெட்டாம் பெருக்கு என்ற குறிப்பிட்ட நாளில் ஆற்றில் போடுவதைத் தமிழ்நாட்டில் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதன் காரணமானது; பழைய சிதிலமான சுவடிகளைப் புதிதாகப் படியெடுத்துக் கொண்டு பழையனவற்றைக் குப்பையிலோ, அடுப்பிலோ போடுவது சுவடிகளை அவமதிப்பதாகும் என்ற எண்ணத்தில் ஆற்றில் வெள்ளம் வரும் நாளான ஆடி 18ஆம் நாளில் குளிர்ந்த ஆற்று நீரில் சுவடிகளைப் போட்டனர். ஆனால், இதன் காரணமறியாத நம் தமிழ் மக்கள் நல்ல சுவடிகளையும் படியெடுக்காமலேயே ஆற்றில் போட்டுக் காணாமல் செய்தனர்.

## சித்த மருத்துவ ஓலைச்சுவடி

உலகம் முழுவதும் உள்ள நூலகங்களில் உள்ள ஓலைச் சுவடிகளின் எண்ணிக்கை சுமார் 65,000. இவற்றில் மருத்துவ ஓலைச் சுவடிகள் 60% இருக்கும் என்று கணக்கீடு குறிப்பிடுகிறது. 1924ஆம் ஆண்டு அக்கால அரசாங்கத்திற்கு இந்திய முறை மருத்துவங்களின் முன்னேற்றத்திற்காக உஸ்மான் என்ற மருத்துவரின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட குழு சமர்ப்பித்த அறிக்கையில் கண்டபடி அகத்தியர் முதல் யூகி முனிவர் ஈறாக உள்ள சித்தர்களின் பெயர்களில் வெளிவந்திருந்த நூல்களின் எண்ணிக்கை 168. சித்தர்கள் பெயர்களைத் தாங்கி நூல்களாக வெளிவராமல் ஓலைச்சுவடியாகவே இருந்தவற்றின் எண்ணிக்கை 532.

## ஆயுர்வேத ஓலைச்சுவடி.

இதுபோல் ஆயுர்வேத முறையில் மக்களுக்குரிய மருத்துவச் சுவடிகளில் இரசவாத முறைகளும், தைல இலக்கிய வகைகளும் கிடைக்கின்றன. மிருகத்திற்கான மருத்துவச் சுவடிகளில் மிருகங்களின் நோய்களுக்கான அறிகுறிகள், அவற்றை நீக்குவதற்கான பச்சிலைகள், மருந்துப் பொருட்கள், அவற்றின் அளவுமுறைகள் கூறப்பட்டுள்ளன. நோயுற்ற விலங்குகளை அறியும் பொருட்டு வண்ண ஓவியமாகத் தீட்டப்பெற்று உரிய குறிப்புக்களுடனும் சுவடிகள் எழுதப்பட்டுள்ளன. இவை இன்றைய புத்தகங்களில் உள்ள கட்டுரைக்கேற்ற புகைப்படங்கள் வெளிவருவதை ஒத்த நிலையில் உள்ளன. அச்சு, காகிதம்

கண்டுபிடிப்புக்கு முன்னரே பனை ஓலையில் தமிழரின் கைவண்ணம் உரிய மருத்துவத்தை விளக்கப் படத்துடன் விளக்கம் அளித்திருப்பது பெரும் வியப்பை அளிப்பதாக உள்ளது.

கால ஓட்டத்தில் வெகுவாக அழிந்து வரும் ஓலைச் சுவடிகளில்தான் மருத்துவம் பற்றிய அரிய கருத்துக்கள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. ஓலைச் சுவடிகளில் இடம் பெற்றுள்ள மரபுசார்ந்த மருத்துவத் தொழில்நுட்பவியல் கருத்துக்களின் அடிப்படையிலும் இலக்கியம், கல்வெட்டைத் தவிர்த்து மருத்துவ வரலாற்றை முழுமையாக அறிய இயலும். தமிழகத்திலுள்ள கையெழுத்துச் சுவடிகளைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்ட லெப்டினன்ட் கவர்னர் காலின் மெக்கன்சியின் (Liet. Col. Colin Mackenzie) தொகுப்பில் தமிழகத்தில் கிடைத்த 192 கையெழுத்துச் சுவடிகளில் மருத்துவச் சுவடிகள் 10 இடம்பெற்றுள்ளன.

# மேலைநாட்டார் தமிழகம் வருகை

வெளிநாட்டார் நமது நாட்டிற்குப் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வந்து சில இடங்களில் தங்கித் தங்களது வாணிகத் தொழிலை மேற்கொண்டு வாழ முற்பட்டனர். அவர்களுள் பதினாறாம் நூற்றாண்டில் நிரந்தரமான இடம் அமைத்து மதபோதனை மற்றும் வாணிகத் தொடர்பு ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள், மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் எனக் குறிக்கலாம். இவர்களுக்கு முன்னரே போர்ச்சுக்கீசியரும், டச்சுக்காரர்களும் இந்தியாவிற்கு வந்து மதமாற்றம் செய்வதில் ஈடுபட்டனர். ஆகவே இவர்கள் தங்கள் மதக் கருத்துக்களைத் தமிழ் மக்களுக்குக் கூறத் தமிழறிந்திருக்கவில்லை. அவர்கள் மொழியில் கூறப்படும் கருத்துக்களை ஏற்கவோ நம் மக்களால் இயலவில்லை. இந்நிலையில் அவர்களுடைய கொள்கை நிறைவேற்றத்திற்கு மொழி தடையாக இருந்ததால் வந்த மறைபோதகர்கள் தமிழ் கற்கத் தொடங்கினர். அது காரணமாகத் தமிழ் எழுத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டு மொழி வளர்ச்சி ஏற்படலாயிற்று.

## சீகன்பால்கு

தமிழகத்திற்கு வந்த டேனிஸ்மிஷனரி பாத்லமேயூ சீகன்பால்கு மதம் சார்ந்த கருத்துக்களை ஓலைச்சுவடிகளில் எழுதியதோடு, தமிழர்களிடம் இருந்த மரபு சார்ந்த மருத்துவத் தொழில்நுட்பத்தையும் ஓலைச் சுவடிகளில் எழுதிச் சேகரித்தார். இவருடைய கூற்றுப்படி இவர் மருத்துவத் தொழில்நுட்பத்தை அறியத் தேடிய அக்காலத்துக் குறிப்புகள் அதற்கு முன்னரே நூலாக்கம் பெற்றுள்ளதையும் பதிவு செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. சீகன்பால்குவிற்குப் பின் வந்த கிரண்டலர் (Gruendler) தரங்கம்பாடிக்கு அருகில் உள்ள பொறையாறு பகுதி பணியாற்றியபோது அந்தப் பகுதிகளில் கிடைத்த மருத்துவ ஓலைச் சுவடிகளில் இருந்த கருத்துக்களைத் திரட்டினார். மேலும் மருத்துவச் சுவடிகளில் இருந்த சுதேசிகளின் மருத்துவ முறைகளையும், மருந்து தயாரிப்பு முறைகளையும் ஜெர்மனியில்

உள்ள தன் நண்பர்களுக்குத் தெரிவிப்பதற்காகத் தமிழ் மருத்துவச் சுவடிகளில் இருந்த கருத்துக்களை ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்து அனுப்பி உள்ளார்.

தமிழகத்தில் கிடைக்கும் மூலிகைகளைப் பற்றிய விவரங்களையும் அவற்றின் மருத்துவப் பயன்பாட்டையும் முழுமையாக அறிந்து கொண்ட அவர் 1711ல் மலபார் மருந்துகள் (Malabar Medicus) பற்றிய குறிப்புகளை ஜெர்மானிய மொழியில் எழுதியதோடு மட்டுமல்லாமல் அவற்றின் மாதிரிகளையும் ஹாலே நகரத்துக்கு அனுப்பி வைத்தார். நமது நாட்டில் வாழ்ந்திருந்த ஐரோப்பியர்கள் தமிழரை மலபாரிகள் என்றும், தமிழ்மொழியை மலபார் மொழி என்றும் வழங்கிவந்தனர் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இதன்படி தமிழ்நாட்டில் சேகரித்த மருந்துகளின் குறிப்புகளே ஜெர்மனியில் மொழி பெயர்க்கப்பட்டு அனுப்பப்பட்டன. தமிழர்களின் மருத்துவ முறைகளைப் பற்றி மிக ஆர்வம் காட்டிய ஜெர்மானியர்கள் 1712இல் கோப்பன் ஹெகனில் தமிழ் மருத்துவத்தைக் கற்பிக்க ஏற்பாடு செய்தனர். இது ஏன்? டேனிஷ் மிசினரிகளுள் தரங்கம்பாடிக்கு மதபோதகர்களாக இங்கு வந்த பலர் சில நாட்களில் அல்லது சில மாதங்களிலேயே நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தனர், என்பதால் இங்கு வரும் மதபோதகர்கள் தமிழ் மருத்துவ முறைகளை அறிந்துகொள்ள எடுத்துக் கொண்ட ஒரு முயற்சியாக இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஓலைச் சுவடிகளில் மரபு சார்ந்த மருத்துவத்தைத் தமிழர்கள் எழுதியது ஒருபுறம் இருக்க, சீகன்பால்கு மருத்துவத்தையும் தாண்டிக் கணித நூலைக்கூட ஓலைச்சுவடிகளில் எழுதியுள்ளார்.

## தமிழ் மருத்துவம் குறித்துச் சீகன்பால்குவின் கருத்து

மருத்துவ ஓலைச் சுவடிகளைத் தேடி மொழிபெயர்த்த சீகன்பால்குவின் வாயிலாக அன்றைய தமிழர்கள் பெற்ற மருத்துவத்துடன் அதன் சிறப்பையும் அறியமுடிகிறது. "மருத்துவப் பயிற்சியில் சுதேசிகள் நல்ல முறையில் பயிற்சியுடையவர் களாயிருக்கிறார்கள்... அவர்களின் மற்ற நூல்களைவிட மருத்துவ நூல்களே சிறப்புத் தன்மையுடையனவாகவே இருந்தன... மருத்துவ நூல்களில் இடம்பெற்ற முக்கியக் கருத்துக்கள் பயன்பாட்டு நிலையில் அமைந்திருந்தன..." என்று கூறுகிறார்.

ஆரம்பக்காலத்தில் மதபோதனைக்கே அச்சகங்கள் தேவைப்பட்டன.

## இரேணியஸ்

சீகன்பால்குவைத் தொடர்ந்து இரேணியஸ் என்ற சீர்திருத்த மதபோதகர் கிருத்துவத்தைப் பரப்ப ஜெர்மனியிலிருந்து 1814இல் சென்னை வந்து பிறகு தரங்கம்பாடியில் ஐந்து மாத காலம் ஊழியப் பயிற்சியும், தமிழ் மொழிப் பயிற்சியும் பெற்றபின், சென்னையில் தங்கித் தன் பணியை ஆரம்பித்தார்.

சிறுசிறு துண்டு அறிக்கைகளின் வழியாக மக்களிடம் சமூக சமயச் செய்திகளைக் கொண்டு செல்ல முடியும் என்பதை முதலில் தமிழர்க்கு அறிமுகப்படுத்தியவர் இவர். இந்த எண்ணத்தைச் செயலாக்க, சென்னை கிருத்துவத் துண்டறிக்கைச் சங்கம் (Madras Christian tract society) என்ற அமைப்பினை 1818 செப்டம்பர் 29ஆம் தேதி நிறுவினார். இதனால் வாசிப்புப் பழக்கம் தமிழ்நாட்டில் பரவலானது.

## சென்னையில் காலரா நோய் தடுப்புக்குத் துண்டறிக்கை

1818 அக்டோபரில் சென்னையில் பயங்கர காலரா நோய் பரவியது. பலர் மாண்டனர். பலர் ஊரைவிட்டு ஓடினர். இரேணியஸ் முதலுதவியைத் தைரியத்துடன் செய்தார். காலரா நோய்த் தடுப்புப் பற்றி ஒரு துண்டறிக்கை எழுதி அச்சிட்டு மக்களுக்கு விநியோகித்தார். பின்வந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் இம்முறை தமிழ்நாட்டுச் சமூக சமய அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தினைப் பெற்றது என்றால் மிகையாகாது. தாம் எழுதிய துண்டறிக்கைகளை எழுத்தறிவில்லாத மக்களிடம் படித்துக் காட்ட கிருஸ்தியான் என்று ஒரு வாசகரையும் (Reader) நியமித்தார். இதன்படி பார்க்கும்பொழுது, முதல் மருத்துவம் சார்ந்த துண்டறிக்கையில் தெய்வ நம்பிக்கைக்கு உட்பட்ட கருத்து நிராகரிக்கப்பட்டுக் காலரா ஒரு நோய் என்பதும் அதன் தடுப்பு முறைகள் எவை என்பதும் தமிழர்களுக்கு அறிமுகமானது. (இரேணியஸ் தமிழியல் ஆய்வின் முன்னோடி, பக்கம். 14).

1820இல் திருநெல்வேலியிலும், 1823இல் யாழ்ப்பாணத்திலும் கிருத்துவத் துண்டறிக்கைச் சங்கங்கள் தொடங்கப்பட்டன.

## தமிழகத்திலும் இலங்கையிலும் இதழ்கள் உதயம்

மக்களிடம் சமயப் பிரச்சாரத்துக்காகச் சமயக் கருத்துக்கள் அடங்கிய சிறு வெளியீடுகளையும் வெளியிட்டு வந்த கிருத்துவச் சமயத்தினர் இதழ்கள் மூலமாகச் சமயப் பிரச்சாரம் செய்ய முயற்சி

எடுத்ததன் விளைவாகச் சென்னை கிருத்துவத் துண்டறிக்கைச் சங்கத்தின் சார்பில் **தமிழ் மேயுகசின்** என்ற இதழும், அமெரிக்க மிஷனின் அச்சகத்தின் சார்பில் இலங்கையில் **உதயதாரகை** என்ற இதழும் வெளிவந்தன.

## நெல்லையில் காலராவிற்குத் துண்டறிக்கை

இரேணியஸ் 1832ஆம் ஆண்டு நெல்லைக்கு மாற்றப்பட்ட பின் அங்கும் மிகவும் கொடியதாய்க் காலரா நோய் பல உயிர்களைக் கொள்ளை கொண்டது. இது தூத்துக்குடி, திருவில்லிப்புத்தூர், தென்காசி, சிவகாசி என்று எங்கும் பரவிப் பல கிராமங்களிலும் கோரத் தாண்டவமாடியது. இந்நோயைத் தடுப்பதில் முக்கிய கவனம் செலுத்திய இரேணியஸ் இங்கும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததன் காரணமாக நல்ல பலனைக் கண்டார்.

இவற்றைத் தவிர இம்மறைபோதகர் 'தமிழர்களுக்கு அறிவுண்டாகும்படி' எனும் வாசகத்துடன் **பூமி சாஸ்திரம்** எனும் முதல் அறிவியல் நூலை 1832இல் 750 பக்கங்களுக்கும் அதிகமாக எழுதினார். தொழிற்புரட்சியின் விளைவாகப் பிறந்த புதிய அறிவொளியினை அந்நூலில் அவர் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தார். உலகம் மாயை என்ற தத்துவத்தை மறுதலித்தார். விக்கிரக வழிபாட்டை எதிர்த்தார். மனிதன் அறிவியலில் தேறவும், இனிதாக வாழவும் கற்றுக் கொடுத்தார்.

1818இல் வெளியான காலராத் துண்டறிக்கை முதற்கொண்டு சற்றேறக் குறைய 1860 வரையில் தமிழில் அறிவியல் நூல்கள், இதழ்கள் பெரும்பாலும் கிருத்துவப் பாதிரியார்களாலேயே அமைந்திருந்தன. மர்டாக்சின் விவரப்பட்டியல்படி 1865ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 12 இதழ்கள் வெளியாயின. அவற்றுள் 10 கிருத்துவர்களால் நடத்தப்பட்டவையாகும் (தமிழ் இதழியல் வரலாறு, மா.சு.ச.). மனிதன் தன் அறிவினால் தன்னை முன்னேற்றிக் கொள்ளவேண்டும் எனக் கிருத்துவ புரெத்தஸ்தான் மற்றும் ஜெசு சபைச் சிந்தனைகள் விளக்கின. இவர்களின் கருத்தில் அறிவியல் மதத்திற்கு முரணானது அல்ல; மாறாகக் கடவுள் சித்தத்தை அறியும் ஒரு வழி முறையே அறிவியல் என விளக்கப்பட்டது. மேலும் ரெமிலாதாப்பர், "இந்தியாவின் தாழ்மைக்கும் பிற்போக்கிற்கும் மிக முக்கிய காரணம் இந்து மதமே என நிரூபிப்பதில் மிசனரிகள் முனைப்பாக இருந்தனர்" எனக் கூறுவது இங்கு நோக்கத்தக்கது. ஆகவேதான் மதபோதனையை ஒரு கையிலும் அறிவியலை மற்றொரு கையிலும் எடுத்துக்

கொண்டு மெய் மதத்தின் சாட்சியாக அறிவியலைப் போதிக்கப் புத்தகங்களையும், இதழ்களையும், பொதுவாக, புரெத்தஸ்தான் மிசினரிகள் பெரும் இடர்ப்பாடுகளுக்கிடையிலும் கூட வெளியிட முனைந்தனர்.

## டாக்டர் ஃபிஷ்கிறீன்

இரேணியசைத் தொடர்ந்து அலோபதி மருத்துவத்தைத் தமிழர்களுக்குத் தமிழில் கொடையாகக் கொடுத்தவர் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு மறைபோதகராக வந்த டாக்டர் ஃபிஷ்கிறீன் ஆவார்.

இவர் 1847இல் வல்வெட்டி என்ற ஊரில் மறைபோதகராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். மருத்துவக் கல்விக்கான பாடத்திட்டத்தை, 1855இல் பாடங்களைத் தமிழில் நடத்த முனைந்தார். முதன்முதலில் 1857இல் **அங்காதிபாதம்** எனும் உடற்கூறியல் மொழிபெயர்க்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 11 மருத்துவ நூல்கள் அச்சிடப்பட்டன. இவற்றைத் தவிர கண், காது, கை, கால், தோல், வாய், வாந்தி பேதி, மற்றும் காலரா போன்ற நோய்களுக்கான உதவிக் குறிப்புகளுடன் சிறு நூல்களும் சிறு வெளியீடுகளும் 110 பக்கங்கள் வெளியிடப்பட்டன.

டாக்டர் கிறீன் இலங்கையில் சேவை புரிந்த காலத்தில், வாந்தி நோய் பெரும் பலி கொண்டது. அதைத் தடுக்கும் பொருட்டுப் பல துண்டுப் பிரசுரங்களை அவர் வெளியிட்டு மக்கள் சுகாதார அறிவு பெற்று நல்வாழ்வு வாழ வழி வகுத்தார். இக்கொடிய நோயைத் தடுப்பதற்கு டாக்டர் கிறீன் ஆற்றிய பணியைப் புகழ்ந்து 'இலங்கை ஓட் சேவர்' பத்திரிகை அன்னாரை வாழ்த்தியது. 1879ஆம் ஆண்டிலே இலங்கை கிழக்குமாகாண அரசாங்க அதிபராகவிருந்த திரு மோறிஸ் என்பவர் டாக்டர் கிறீனின் மருத்துவ நூல்களை வாங்கி மக்களுக்கு வழங்கினார்.

ஆக இலங்கையில் டாக்டர் கிறீனும், இரேணியஸ் மறைபோதகரைப் போலவே அறிவியல் புத்தகங்களை எழுதியது மட்டுமன்றி வாந்தி பேதிக்கான துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டுப் பொதுச் சுகாதாரப் பிரச்சினைகளை இலங்கையில் தீர்க்க முனைந்து வெற்றி பெற்றுள்ளார்.

இதன் தொடர்பான மற்றொரு செய்தி டாக்டர் கிறீன் முதல்முதலில் மொழிபெயர்த்த Anatomy Physiology & Hygiene என்ற நூலின் தமிழாக்கம் 1852ஆம் ஆண்டிலேயே வெளியிடப்

பட்டதோடு 1857இல் இரண்டாவது முறையாக இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்த அமெரிக்க மிஷன்களுக்காகவும் பதிப்பிக்கப் பட்டது. இந்தப் புத்தகங்கள் நெல்லைக்கு அதிகமாக அனுப்பப் பட்டதாகவும் அறியப்படுகிறது. இவருடைய புத்தகத்திலும் இவரைத் தொடர்ந்து எழுதிய மைசூர் ஜர்சன் ஜெகந்நாத நாயுடு புத்தகத்திலும் வடமொழி மிகுந்து காணப்படுகிறது. புத்தகங்களின் தலைப்பே வடமொழி தான். உள்ளே உள்ள உரைநடையில் சமஸ்கிருதக் கலப்பு மிகுந்து காணப்படுகிறது. இக்காலக் கட்டத்தில்தான் அறிவியலைக் கொண்டு கி.பி. நான்காம் நூற்றாண்டுக்குப்பின் புனைந்துவிடப்பட்டு 19ஆம் நூற்றாண்டில் மீண்டும் உறுதி செய்யப்பட்ட இந்திய மொழிக் கொள்கையால் வடமொழி தாய்ப்பீடத்துக்கு உயர்த்தப்பட்டது. இத்தகைய மொழிக் கொள்கை மத்திய காலம் முழுவதும் எதிர்ப்பற்று ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது.

# தமிழில் மருத்துவ இதழியல் வரலாறு

*(தொடக்கக்காலம் 1831–1900)*

தமிழகத்தை ஆட்சி செய்து வந்த காலனிய அரசு-ஆங்கிலேயர்களும், கிருத்துவச் சமயப் பணியாளர்களும் மட்டுமே அச்சகங்களைத் தொடங்க அனுமதி வழங்கியது. இதன் காரணமாக இந்தியர்கள் - தமிழர்களுக்கு அச்சு ஊடகம் எட்டாக்கனியாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் 1835ஆம் ஆண்டு இந்தியர்கள் - தமிழர்கள் அச்சகங்கள் தொடங்க இருந்த தடை நீக்கப்பட்டது. இந்தத் தடை நீக்கத்தைத் தொடர்ந்து அன்றைய சென்னை மாகாணத்தின் பல பகுதிகளில் தமிழர்கள் அச்சகங்களைத் தொடங்கினர்.

அச்சகங்களைத் தொடங்கிய தமிழர்கள் பண்டைய இலக்கிய இலக்கணங்களை அச்சிட்டு வெளியிடுவதில் ஆர்வம் காட்டினர். கிருத்துவச் சமயப்பணியாளர்கள் தங்கள் சமயக் கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொண்டதைப் போல அன்றைய சென்னை மாகாணத்தில் வாழ்ந்த சைவ, வைணவ, பௌத்த, இசுலாமியச் சமயத்தவர்களும் நாத்திகர்களும் தங்களின் கருத்துக்களை அச்சு ஊடகம் மூலம் மக்களிடம் கொண்டு செல்ல முயன்றனர். இதற்காக அச்சகங்களைத் தொடங்கினர். இந்த அச்சகங்கள் மூலம் தங்கள் கருத்துக்களை நூல்களாக வெளியிட்டனர். இதழ்களையும் தொடங்கினர். இவ்வாறாகத் தமிழர்கள் தங்களின் இலக்கியங்களையும், சமயக் கருத்துக்களையும் பரப்ப முயற்சிகள் மேற்கொண்ட காலகட்டத்தில் கிருத்துவச் சமயப் பணியாளர்கள் சமயக் கருத்துக்களுடன் தங்களின் ஐரோப்பிய அறிவுத் துறைகளையும் பரப்ப முயற்சி மேற்கொண்டனர்.

கிருத்துவச் சமயப் பணியாளரான இரேணியஸ் 1818ஆம் ஆண்டு தான் தொடங்கிய கிருத்துவ அறிவு பரப்பும் சங்கம் (Society for propagating christian knowledge) காலரா நோய் பற்றிய

துண்டறிக்கையை வெளியிட்ட 1831ஆம் ஆண்டு 'தமிழ் மேகசின்' என்ற அறிவியல் இதழை வெளியிட்டது. (தமிழில் அறிவியல் இதழ்கள்; பாவேந்தன்).

தமிழ் மேகசின் இதழுக்குப் பிறகு வெளிவந்த பல இதழ்கள் கிருத்துவ, இசுலாமிய, சைவ, வைணவ சமயத் தொடர்பானவை.

தமிழகத்தில் வெளிவந்த தமிழ் மேகசின் இதழைப்போலவே இலங்கையில் பணியாற்றி வந்த சமயப் பணியாளர்களால் 1841ஆம் ஆண்டு 'உதயதாரகை' தொடங்கப் பெற்றது. மாதம் இருமுறையாக வெளிவந்த இந்த இதழில் சமயச் செய்திகளுடன் அறிவியல் கட்டுரைகளும் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளன. ஐரோப்பிய மருத்துவத்தை, குறிப்பாக, ஐரோப்பிய அறிவியலைத் தமிழில் வெளியிட்ட 'உதயதாரகை' தமிழ் மருத்துவத்தை ஆங்கிலத்தில் வெளியிட்டது. தமிழ் மருத்துவச் சுவடிகளில் இருந்த அகத்தியர் மருந்து தயாரிப்பு வகையை ஆங்கிலத்தில் உதயதாரகை வெளியிட்டது. மேலும், இவ்விதழ் வாசகரிடம் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளும் விதமாக வாசகர்கள் கேட்ட அறிவியல் கேள்விகளையும் பதில்களையும் வெளியிட்டது. இதன் மூலம் அறிவியல் உணர்வுமிக்க வாசகர் வட்டத்தை உருவாக்க பத்தொன்பதாம் நூற்றாண்டில் உதயதாரகை பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

உதயதாரகை மூலம் அறிவியல் பரப்பும் பணிகளை இலங்கையில் சமயப் பணியாளர்கள் மேற்கொண்டிருந்த அதே காலகட்டத்தில் பெர்சிவல் பாதிரியார் 1855ஆம் ஆண்டு **தினவர்த்தமானி** இதழைத் தொடங்கினார். தினவர்த்தமானி அறிவியல் கட்டுரைகளையும், சுகாதாரம், பொது மருத்துவம் பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டுவந்தது. தினவர்த்தமானியைத் தொடர்ந்து ஜனவிநோதினி இதழ் 1870ஆம் ஆண்டு வெளிவந்தது. சுமார் இருபது ஆண்டுகள் வெளிவந்த ஜனவிநோதினி இதழில் தொற்று நோய் தடுப்புமுறை, கள்ளுண்ணாமை போன்ற நோய்த் தடுப்புகளைப் பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன. மருத்துவம், சுகாதாரம் பற்றிய அறிவியல் கருத்துக்களை வாழ்வியல் நெறிகளுடன் இணைத்து ஜனவிநோதினி வெளியிட்டுவந்தது.

## தமிழின் முதல் மருத்துவ இதழ்

கிருத்துவ அறிவு பரப்பும் சங்கம் வெளியிட்ட தமிழ்மேகசின், கிருத்தவ சமயப் பணியாளர்களால் தொடங்கப்பட்ட உதயதாரகை,

தினவர்த்தமானி, ஜனவிநோதினி ஆகிய இதழ்கள் வெளிவந்த காலகட்டத்தில் தமிழின் முதல் மருத்துவ இதழான **அகத்தியவர்த்தமானி** சென்னையிலிருந்து வெளிவந்தது (அறிவியல் இதழ்கள், பாவேந்தன்). இவ்விதழின் படிகள் தமிழக நூலகங்களில் இல்லை.

## மருத்துவ இதழ்களின் வளர்ச்சி

அகத்திய வர்த்தமானி வெளிவந்த காலகட்டத்துக்குப் பிறகு 1887ஆம் ஆண்டு **சுகஜீவனி** என்ற இதழ் பெங்களூரிலிருந்து வெளியிடப்பட்டது. இந்த இதழ் மருத்துவ அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. சுகஜீவனி இதழ் சுமார் இரண்டு ஆண்டுக் காலம் வெளிவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து **ஆயுர்வேத பாஸ்கரன்** என்ற இதழ் 1889ஆம் ஆண்டு சென்னையிலிருந்து வெளிவந்தது. இந்த இதழ் தொடர்ந்து வெளி வந்ததா என்பதைப் பற்றிய தகவல்கள் அறிவதற்கில்லை. 1891ஆம் ஆண்டு ஈரோட்டிலிருந்து **சுகாதாரபோதினி** என்ற இதழ் வெளிவந்துள்ளது. சுகாதாரபோதினி எந்த மருத்துவத்துறை தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டது என்பதை அறியப் போதுமான குறிப்புகள் கிடைக்கவில்லை. இதனைத் தொடர்ந்து **வைத்தியபோதினி** என்ற மாத இதழ் பெங்களூரிலிருந்து 1897ஆம் ஆண்டு மே 15ஆம் நாள் வெளிவந்துள்ளது. இந்த இதழ் விரிவான மருத்துவ அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. 1897ஆம் ஆண்டு முத்துத்தம்பிப் பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு **வைத்திய விசயன்** என்னும் மருத்துவ மாத இதழ் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தது. மேற்கண்ட இதழ்கள் தமிழக நூலகங்களில் இல்லை. எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டு மருத்துவ அறிவியல் இதழ்களின் உள்ளடக்கம் பற்றி அறிய இயலவில்லை.

## பத்தொன்பதாம் நூற்றாண்டு பொது இதழ்களில் மருத்துவ அறிவியல்

அகத்தியவர்த்தமானியைத் தொடர்ந்து மருத்துவ அறிவியலுக்கான தனி இதழ்கள் வெளிவந்து கொண்டிருந்த கால கட்டத்தில் வெளிவந்த பொது இதழ்கள் பொதுக் கட்டுரைகளுடன் மருத்துவ அறிவியல் கட்டுரைகளையும் வெளியிட்டு வந்தன. பொது இதழ்களில் அக்காலகட்டத்தில் இலக்கியத்திற்கு முக்கியத்துவம்

கொடுக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டு பொது இதழ்களில் குறிப்பிடத்தக்க இதழ் விவேகசிந்தாமணி ஆகும்.

## இதழியல் சாமிநாதையர் பணியை நினைவுகூர்தல் இன்றியமையாததாகிறது

***விவேகசிந்தாமணி (1892)***

விவேகசிந்தாமணியின் ஆசிரியர் சாமிநாதையர் ஆவார். இவரைப் பற்றி மா.ரா. அரசு கூறுகையில் "சாமிநாதையர் என்றதுமே நினைவுக்கு வருபவர் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர். இலக்கியத் துறையில் சாதனை நிகழ்த்திய சாமிநாதையரைப் போன்று இதழியல் துறையில் வரலாறு படைத்த சாமிநாதையர் உண்டு" என்று கூறுகிறார்.

இவ்விதழ் 'அறிவு பரப்புவதற்கான ஏஜென்சி' என்ற அமைப்புக்காக அதன் கருத்துக்களைப் பரப்புவதற்காக 1892 மே மாதம் தொடங்கப்பட்டது. இதில் சுகாதாரம், இயற்பியல், வேதியியல், தாவரவியல் தொடர்பான பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. சுகாதாரம் தொடர்பான கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்வதை விரிவுபடுத்த விரும்பி 1898ஆம் ஆண்டு முதல் 'அறிவு பரப்புவதற்கான ஏஜென்சியின்' ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது.

இந்த ஏஜென்சியின் பணி "உபயோகமான விஷயங்களைப் பற்றி ஜனங்களுக்கு அறிவுண்டாகும்படி செய்வது". இதன் கிளைகள் தமிழ்நாடெங்கும் தொடங்கப்பட்டுப் பொது மக்களுக்கும், சிறுவர்களுக்கும் அறிவியல் செய்திகளை இரேணியஸ் நெல்லையில் பரப்பியதுபோல் வாசித்துக் காட்டப்பட்டன.

கட்டுரை வாசிக்கும்பொழுது புரியாத இடங்களுக்கு உறுப்பினர்கள் விளக்கம் அளித்துள்ளனர். கூட்டத்திலுள்ள சிறுவர்களிடம் கேள்வி கேட்கப்பட்டுப் பரிசுகளும் கொடுக்கப் பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளை அறிக்கைகளாக விவேகசிந்தாமணி வெளியிட்டுள்ளது.

''விவேகசிந்தாமணி'' வெள்ளிவிழா கண்டாலும், சாமிநாதையருக்குப் பிறகு மூத்த மகன் சதானந்தத்தால் இதழை வெளியிட முடியாமல் போகவே 1920ஆம் ஆண்டு விவேகசிந்தாமணி நின்றுவிட்டது.

விவேகசிந்தாமணி வெளிவந்து கொண்டிருந்த காலகட்டத்தில் **விவேகசுந்தரம்** என்ற இதழ் 1894ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த இதழ் பொதுக் கட்டுரைகளுடன் விவசாயம், மருத்துவம் தொடர்பான கட்டுரைகளும் வெளியிட்டுள்ளது.

சென்னையிலிருந்து 1900ஆம் ஆண்டில் **ஜனப்பிரியன்** என்ற இதழ் வெளி வந்தது. இந்த இதழின் ஆசிரியராக இருந்தவர் கோ. கிருஷ்ணசாமி. இலக்கியத்தையும், அறிவியலையும் மக்களிடம் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்ட வெளி வந்த இவ்விதழில் பல மருத்துவ அறிவியல் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இந்த இதழில் 'சுகாதார மகிமை' என்ற தலைப்பிலான கட்டுரை புதிய உத்தியைப் பின்பற்றி வெளியிடப்பட்டுள்ளது.

பொது இதழ்களில் பிற துறை அறிவியல் கட்டுரைகளுடன் மருத்துவ அறிவியல் கட்டுரைகளும் வெளிவந்த காலகட்டத்தில் மருத்துவ அறிவியலுக்கான சிறப்பு இதழ்களும் வெளிவந்தன. 1900ஆம் ஆண்டில் பாடத்திட்டத்தில் இயற்கை அறிவியல் பாடங்களோடு, பொதுசுகாதாரம் பற்றிய பாடங்களும் இணைக்கப் பட்டன. எனவே இக்காலகட்டத்தில் பொதுசுகாதாரம் பற்றிய பொதுமக்களுக்கான அறிவியல் நூல்கள், துண்டறிக்கைகள், இதழ் கட்டுரைகள் வெளியிடுவதில் கிருத்துவச் சமயப் பணியாளர்கள் ஈடுபட்டனர். சமயப் பணியாளர்கள் ஐரோப்பிய மருத்துவத்தை இதழ்கள் வழிப் பரப்ப முயற்சிகள் மேற்கொண்டதைப் போலத் தமிழர்களும் சித்த மருத்துவத்தைப் பரப்பச் சுவடிகளைத் திரட்டி நூல்களாகப் பதிப்பிக்கும் முயற்சியிலும், சுவடிகளை இதழ்களில் வெளியிடும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

# விடுதலைக்கு முந்தைய மருத்துவ இதழ்கள்

*(1900 – 1947)*

1900ஆம் ஆண்டு முதல் சென்னை மாகாணத்தின் பல பகுதிகளில் ஐரோப்பிய அடிப்படையிலான கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் பல தொடங்கப்பட்டன. இக்கல்வி நிறுவனங்களில் ஐரோப்பிய அறிவியல் பாடங்கள் தமிழ், தெலுங்கு மொழிகளில் கற்பிக்கப்பட்டன. ஐரோப்பிய அறிவியல் பாடநூல்களை எழுதிய ஆசிரியர்கள் இக்காலகட்டத்தில் வெளிவந்த இதழ்களிலும் சுகாதாரம் மற்றும் தொற்றுநோய் குறித்த மருத்துவக் கட்டுரைகள் எழுதினர்.

பொது இதழ்களை நடத்திவந்த ஆசிரியர்கள் மக்களிடம் அறிவியல் அறிவு, குறிப்பாக ஐரோப்பிய அறிவியல் அறிவு பரவ வேண்டும் என்பதில் ஆர்வமுடையவர்களாக இருந்தனர். 'அறிவு விளக்கம்' என்ற பெயரில் 1901ஆம் ஆண்டு திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்த பொது இதழ் அறிவியலுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இதே காலகட்டத்தில் தமிழகத்திலிருந்து வெளிவந்த 'யதார்த்த பாஸ்கரன்' (1902), 'தமிழகம்' (1905) ஆகிய இதழ்கள் பொதுக் கட்டுரைகளுடன் மருத்துவ அறிவியல் தொடர்பான துணுக்குகளையும், மருத்துவ அறிவியல் கண்டுபிடிப்புக்களையும் வெளியிட்டுள்ளன.

சென்னையிலிருந்து 1906ஆம் ஆண்டு 'சுகாதாரபோதினி' என்ற இதழ் வெளி வந்தது. இதனைத் தொடர்ந்து 1908ஆம் ஆண்டு 'ஆரோக்கிய போதினி' என்ற இதழ் வெளிவந்தது. 1910ஆம் ஆண்டு 'வைத்திய போதினி' என்ற இதழ் கும்பகோணத்திலிருந்து வெளிவந்தது. பூனாவில் உள்ள (Oriental watchman) நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்பட்ட இதழ் 'நல்வழி' (1912) ஆகும். இந்த இதழ் இன்னும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. 1913ஆம் ஆண்டு 'வைத்திய கலாநிதி' என்ற ஆயுர்வேத மருத்துவ இதழ் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. 1921ஆம்

ஆண்டு '**தமிழ் வைத்தியக் களஞ்சியம்**' என்ற சித்த மருத்துவ இதழ் வெளி வந்தது. இந்த இதழைத் தொடர்ந்து 1923ஆம் ஆண்டு '**ஆரோக்கியமும் சிசுவின் வாழ்க்கையும்**' என்ற இதழ் திருநெல்வேலியிருந்து வெளிவந்தது. அதே ஆண்டு சென்னை ஆயுர்வேதக் கல்லூரியின் சார்பில் '**தன்வந்த்ரி**' இதழும், வேலூர் தென் இந்திய வைத்திய சங்கத்தின் சார்பில் '**ஆயுள்வேதம்**' (1923) என்ற இதழும் வெளிவந்தன.

1924ஆம் ஆண்டு '**ஆரோக்கிய தீபிகை**' இதழை சென்னையைச் சேர்ந்த யூ. ராமராவ், யூ. கிருஷ்ணராவ் ஆகிய இரு மருத்துவர்கள் தொடங்கினர். '**செல்வக் களஞ்சியம்**' (1926) என்ற மருத்துவ இதழை ஆர்.எஸ். பதி. 1926ஆம் ஆண்டு மதுரையிலிருந்து வெளியிட்டார். இதே ஆண்டு '**இயற்கை**' என்ற இயற்கை மருத்துவ இதழைச் சுவாமி சுத்தானந்த பாரதியார் காஞ்சியிலிருந்து தொடங்கி நடத்தினார். பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் '**மருத்துவன்**' என்ற இதழை 1928ஆம் ஆண்டு தொடங்கினார்.

இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து 1930ஆம் ஆண்டு '**வைத்தியக் களஞ்சியம்**' என்ற இதழ் வெளியிடப்பட்டது. அதே ஆண்டு '**ஆரோக்கிய சிந்தாமணி**' என்ற இதழ் வெளிவந்தது. '**வைத்தியன்**' என்ற இதழ் 1931ஆம் ஆண்டு இலங்கை ஆயுர்வேத வைத்திய சங்கத்தின் சார்பில் வெளிவந்தது. இந்த இதழில் தமிழகத்தைச் சார்ந்த பல ஆயுர்வேத மருத்துவர்கள் கட்டுரைகளை எழுதியுள்ளனர். பண்டிதர் டி.வி. எம். விஸ்வநாதய்யர் 1932ஆம் ஆண்டு '**ஆயுர்வேத சிவரட்சகம்**' என்ற இதழை வெளியிட்டார். 1934ஆம் ஆண்டு திருநெல்வேலியிலிருந்து '**சித்தர் களஞ்சியம்**' என்ற இதழை கே. வேலன் என்பார் நடத்தியுள்ளார்.

பழனியிலிருந்து '**சித்தன்**' என்ற சித்த மருத்துவ இதழ் 1935ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. திராவிட தேசிய ஆயுர்வேத மகாமண்டலம் 1938ஆம் ஆண்டு '**வைத்திய சந்திரிகா**' என்ற இதழைத் தொடங்கிப் பல ஆண்டுகள் தொடர்ந்து நடத்தி வந்தது. '**தமிழ் மருத்துவப் பொழில்**' என்ற சித்த மருத்துவ இதழ் 1941ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. தஞ்சை திருத்துறைப்பூண்டியில் இருந்து '**அகஸ்தியன்**' என்ற இதழ் 1944ஆம் ஆண்டு வெளியிடப் பட்டுள்ளது. '**ஹோமியோபதி**' என்ற இதழ் கும்பகோணம் இந்தியன் ஹோமியோபதி நிறுவனத்தின் சார்பில் 1947ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

# விடுதலைக்குமுன் வெளிவந்த சில சிறப்பு மருத்துவ இதழ்கள்

## கொல்லாமையை ஆதரித்த சிறப்பு ஏடு – ஜீவரக்ஷகன் (1930)

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிரும் தொழும்'

எனும் குறளை வாசகமாகக் கொண்டு புலால் உண்ணாமையை ஆதரித்து வெளிவந்த இவ்விதழ் கா.சா. மல்லிநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு சென்னை வண்ணாரப்பேட்டை கிராம்பால் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. கோவில்களில் பலி, அசைவ உணவு உண்பவருக்கு வரும் கேடுகள், ஜோசியம் ஆகியவற்றுடன் சமையல் பொருளினால் உடலுக்கு ஏற்படும் கேடுகள், மற்றும் அப்பொருள்கள் மருந்தாக உபயோகமாகும் விதம். (எ.கா. இஞ்சி) மற்றும் நோய்களுக்கு எவ்வித சைவ உணவுகள் ஏற்றவை என்பதைக் குறித்த குறிப்புகளும் உள்ளன. இக்குறிப்புகள் இயற்கை முறை, மற்றும் தமிழ் வழி மருத்துவத்தை ஒட்டி உள்ளன.

## மதுவிலக்கை ஆதரித்து வெளிவந்த சிறப்பிதழ்கள்

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தி. மானியல் என்பவர் மதுவின் தீமைகளை எண்ணி, "சென்னை மதுவிலக்குத் தூதன்" எனும் திங்களிதழைத் தொடங்கி வெளியிட்டுள்ளார். தமிழில் தோன்றிய முதல் மதுவிலக்கு இதழ் என்ற பெருமையோடு 1900ஆம் ஆண்டு ஏப்ரலில் அரசாங்க அறிக்கையின்படி ஐந்நூறு படிகள் வெளிவந்துள்ளன.

இதைத் தொடர்ந்து ராஜாஜியின் விமோசனம் 1929இல் வெளிவந்துள்ளது.

'விமோசனம் ஒரு மாதப் பத்திரிகை'. இந்த பத்திரிகை சக்கரவர்த்தி இராஜகோபாலச்சாரியால் நடத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் பூரண மதுவிலக்கு. வருஷசந்தா, தபால் கூலி உட்பட ரூபா ஒன்று. அயல்நாட்டுக்கு ரூ.1.20- தனிப் பிரதிகள் எல்லா காதிவஸ்திராலயங்களிலும் கிடைக்கும். விலை அணா ஒன்று. கள்ளை ஒழிக்கும் கிளர்ச்சியில் சேர்ந்து ஏழைகளைக் காப்பாற்றுங்கள்.

காந்தி ஆசிரமம்
திருச்செங்கோடு

இந்த விளம்பரமே ஆசிரியர் இராஜாஜியின் கள்ளை ஒழிக்கும் நோக்கத்தைப் புலப்படுத்துகிறது.

"ஒரு நாளில் சுமார் 68 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் குடித்தவர் எண்ணிக்கை 1399. இதில் பெண்களும், குழந்தைகளும் அடங்கும்"

"கள்ளுக்கடை காலை ஐந்து முப்பது மணிக்கே திறந்துவிடுவதாலும், இரவு எட்டு முப்பதுக்குப் பிறகும் சிலர் கதவைத் திறந்து உள்ளே சென்று கள் வாங்குவதாலும் மேலே காட்டியிருப்பதைவிட குடிக்காரர்களின் தொகை அதிகமாகவே இருக்கும். பெரும்பாலும் ஏழைக் கூலி ஜனங்களே கடைக்கு வருகிறார்கள். அபூர்வமாக பிராமணர், முகமதியர், ஆங்கிலோ இந்தியர் முதலியவர்கள் சிலரும் காணப்பட்டனர்" என்று இராஜாஜியின் முழுப்பொறுப்பில் வெளிவந்த முதல் இதழ் தெரிவிக்கிறது.

இவ்விதழின் முதற்படி ஆயிரம் அச்சடிக்கப்பட்டுள்ளது. ராஜாஜியைத் தொடர்ந்து கல்கி கடைசி இதழுக்கு ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். மொத்தம் 10 இதழ்கள் வரை வெளிவந்து பின் இவ்விதழ் நின்றுவிட்டது.

# விடுதலைக்குப் பிந்தைய மருத்துவ இதழ்கள்

விடுதலைக்குப் பிந்தைய அறிவியல் இதழ்கள் என்று பட்டியலிட்டுப் பார்க்கும் நிலையில் மருத்துவ இதழ்கள் அதிகமான எண்ணிக்கையில் உள்ளன. இவ்விதழ்கள் ஏறத்தாழ 1970ஆம் ஆண்டு வரை பெரும்பாலும் பொதுச் சுகாதாரம், உடல்நலம், துப்புரவு என்று பொதுமையான கருத்துக்களைச் சொல்லி அவற்றுடன் ஆன்மீகம் மற்றும் மனநலம் குறித்த செய்திகளை அவ்விதழ்கள் தவறாது எழுதி உடலுடன் மனமும் சுற்றுப்புறமும் சீறாக இருக்கப் பாடுபட்டு வந்தன. இக்குறிக்கோளையே இன்றைய நிலையில் உலக சுகாதாரக் கழகமும் நலவாழ்வு என்பது 'நோயற்ற வாழ்வு மட்டுமல்ல என்று கூறி மனமும், சுற்றுப்புறமும் நன்றாக இருக்கவேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்தி வருகிறது என்பதை இங்கு நினைவு கூரவேண்டுவதாய் உள்ளது. மருத்துவ இதழ்களைவிடுத்துப் பொது வார, மாத இதழ்களும்கூடப் பொதுச்சுகாதாரத்தையும், உடல் நலத்தைப் பேணுவதையும் குறித்துக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் காலச் சித்த மருத்துவ இதழ்களில் ஆயுர்வேதம் முறை சார்ந்த கட்டுரைகள் வெளியிடப்படவில்லை. ஆனால் ஆயுர்வேத இதழ்களில் சுசுருதர், சரகர் மந்திரங்களைக் கொண்ட கட்டுரைகள் அதிகம் என்றாலும் அகத்தியர் போன்ற சித்தர்களுடைய பாடல்களைக் கொண்ட கட்டுரைகளும் உள்ளன.

அலோபதி மருத்துவ இதழ்கள் வெளிநாட்டில் வெளியிடப்படும் கட்டுரைகளை மொழிபெயர்த்து முழுவதுமாக அலோபதிச் செய்திகளையே உள்ளடக்கியதாக உள்ளன. மற்றைய முறைகளைத் தழுவிக் கட்டுரைகள் காணப்படவில்லை.

1980க்கு பிறகு 'ஆரோக்கிய மலர்' போன்ற இதழ்களே பல்துறை மருத்துவங்களைக் கொண்ட இதழ்களாக வெளிவர

ஆரம்பித்தன. இதுவே நீடித்துத் தற்பொழுது வரும் ஹெல்த் பியூட்டி, பேமிலி ஹெல்த் போன்ற பல இதழ்கள் ஹோமியோ, அக்குபஞ்சர், சித்த மருத்துவம் போன்ற மருத்துவ முறைக் கட்டுரைகளைப் பெருமளவில் தங்கள் இதழ்களில் வெளியிடுகின்றன. இதன் காரணம் அலோபதி மருத்துவர்களுக்குக் கட்டுரை எழுதுவதில் உள்ள சில சட்டதிட்டங்களினால் ஏற்பட்ட இடைஞ்சல்களே காரணம். இருப்பினும் "அலோபதி மருத்துவங்களை மட்டும் வழங்கும் மாத இதழ்" என்ற நிலையில் **மீனாட்சி மருத்துவ மலர்** மதுரையிலிருந்து வெளிவருகிறது.

ஆரம்பக்காலத்தில் மருத்துவ இதழ்களின் ஆசிரியர்கள் பெரும்பாலும் அத்துறை சார்ந்த மருத்துவர்களாக இருந்தனர். இவ்விதழ் வெளியீட்டாளர்களுக்குத் தங்கள் முறை மருத்துவம் பிரசித்தி பெறத் தன்னலம் கருதாது உழைத்தனர்.

ஆனால், அண்மைக்காலத்தில் வெளிவரும் இதழ்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது என்பது மகிழ்ச்சி தரும் செயலாக இருப்பினும், இவை வாணிப நோக்கில் வரும் இதழ்களாகவே உள்ளன. இவ்விதழ்களின் ஆசிரியர்கள் பெரும்பாலும் மருத்துவர்கள் அல்லர். மாற்று மருத்துவ முறைகளை அறிந்தவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் மருத்துவ இதழ்களில், மருத்துவ ஆலோசனை நடத்தும் இடம், நேரம், தங்கள் கண்டுபிடிப்புகள், தங்கள் மருந்துகளின் விளம்பரம் ஆகியவற்றுடன் தங்களால் எழுதப்படும் கட்டுரைகளையும் வெளியிடுகின்றனர். ஒட்டுமொத்தமாகக் கூறவேண்டுமெனில் ஆசிரியர்கள் தங்களை வெளிச்சத்திற்குக் கொணர ஒரு விளம்பர சாதனமாக இதழ்களையே பெரும்பாலும் உபயோகப்படுத்திக் கொள்கின்றனர்.

தமிழில் வெளிவந்த அறிவியல் இதழ்களில் மருத்துவ இதழ்களே அதிக எண்ணிக்கையில் உள்ளன. இம்மருத்துவ இதழ்களில் அதிக இதழ்கள் சித்த மருத்துவத்தைச் சார்ந்தவையே.

## சித்த மருத்துவ இதழ்கள்

ஞானி வைத்திய செய்தி (1959), நந்தி (1962), மூலிகைமணி (1964), கிராமவைத்தியம் (1965), தமிழ்முனிவன் (1971), சித்தர் கருவூலம் (1981), கற்பக அவிழ்தம் (1986), உலகக்ஷேமம் (1989), வாழ்க நலமுடன் (1989), ஓம் சக்தி மருத்துவ மலர் (1990), தேனமுதம் (1995), ஜீவமூலிகை (1996), மூலிகை மலர் (1997), சித்தர் அறிவியல்

(2000), மூலிகை குழந்தைகள் (2000), தமிழ் வைத்தியம் (2001), உங்கள் ஹெல்த் (2001).

## ஆயுர்வேத மருத்துவ இதழ்கள்

ஆரோக்கியம் (1955)

## அலோபதி இதழ்கள்

(தமிழ் இதழ்) கண் ஒளி (1983), பேதியின் சேதி (1984), ஆரோக்கிய மார்க்கம் (தமிழக அரசு வெளியீடு) (1962), உங்கள் உடல் நலம் (1991), நவீன மருத்துவ மலர் (1993), ஹெல்த் டைம் (2000), மருத்துவ உலகம் (2000).

## பல மருத்துவமுறை இதழ்கள்

ஆரோக்கிய மலர் (1980), இருமலர் (1980), உங்கள் நலம் நாடும் ஹெல்த் (1992), ப்யூட்டி & ஹெல்த் (1992), மருத்துவ அறிவியல் மலர் (1992), தன்வந்திரி (1993), ஆரோக்கியம் & மருத்துவம் (1994), உங்கள் ஆரோக்கியம் (1995), நவபாஷாண மருத்துவம் (1995), ஹலோ டாக்டர் (1996), தெய்வீக மருத்துவம் (1995), ஹலோ டாக்டர் (1996), தெய்வீக மருத்துவம் (1996), ஹெல்த் டாக்டர் (1996), ஹெல்த் லைப், பேமிலி ஹெல்த் (1997), புதிய மருந்து உலகம் (1997), உங்கள் ஹெல்த் (2001), ஹெல்த் பாய்ன்ட் (2002), குமுதம் ஹெல்த் (2002), மெடிகேர் டைஜஸ்ட் (2002), பாடி பில்டிங் (2002), கால்நடைக் கதிர்.

அலோபதி, ஆயுர்வேத, சித்த மருத்துவ இதழ்கள் குறித்த செய்திகள் பிந்தைய இயல்களில் விரிவாக எழுதப்பட்டுள்ளதால் இவ்வியலில் மற்றைய மருத்துவத் துறை இதழ்கள் தனியாகத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

## ஹோமியோ இதழ்கள்

ஹோமியோபதி இதழ்கள் பெரும்பாலும் 'ஹோமியோபதி' (கும்பகோணம்) (1946) எனும் இதழைத் தவிர மற்ற 13 இதழ்கள் சுதந்திரத்திற்குப் பிறகே வெளிவந்துள்ளன. அவை ஹோமியோபதி மித்தரம் (சென்னை, 1951), தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி (திருச்சி, 1956), ஹோமியோ பிரகடனம் (திருவாரூர், 1958), ஆர்கனான் (மதுரை, 1961), ஹானிமன் (பாண்டிச்சேரி 1962), சுகவழி (செங்காலிபுரம் 1977), ஹோமியோ அறிவியல் தேவபாண்டலம் (1981), ஜுபிடரின் மருத்துவ மஞ்சரி (சேலம் 1982), ஈஸ்டர்ன்

ஹோமியோ ஸ்டார் (நெல்லிக்குப்பம் 1985), ஹோமியோ நண்பன் (காரைக்குடி 1990), உங்கள் ஹோமியோ நண்பன் (மதுரை 1992), ஆரோக்கிய மருத்துவம் (ஈரோடு, 1994), மனிதனை நலமாக்குவது ஹோமியோபதி (மதுரை 1997), ஹோமியோபதிச் சுடர் (சென்னை 2001).

தமிழில் தோன்றிய ஹோமியோ மருத்துவத்தின் முதல் இதழ் "ஹோமியோபதி". இதன் நிர்வாக ஆசிரியர் டாக்டர் வி.ஆர். மூர்த்தி மேலைநாடுகளுக்குச் சென்று மருத்துவம் கற்று வந்த பிறகு, கும்பகோணத்தில் ஹோமியோ மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனத்தை ஆரம்பித்து, ஹோமியோ மருத்துவத்தைப் பரப்பும் பொருட்டு தான்நிறுவிய ஹோமியோ இன்ஸ்டிடியூட் எனும் கல்விக்கூடத்தின் மூலம் பலருக்கு ஹோமியோ மருத்துவத்தைக் கற்றுக் கொடுக்கத் தொடர் வகுப்புகள் நடத்தியுள்ளார். இவர் நடத்திய இவ்விதழ் 'சுகத்திற்கும் வாழ்க்கைக்கும்' என்ற வாசகத்தோடு "ஹோமியோ டாக்டர்களுக்கும் மற்றும் மருத்துவம் சார்ந்த பரிசோதனைக் கூடங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதன்பிறகு வெளிவந்த ஹோமியோ மித்திரன் (1951) அலோபதி மருத்துவத்தைக் குறை கூறும் விதமாக, அலோபதி மருந்துகளால் ஏற்பட்ட பக்க விளைவுகளைச் சுட்டிக் காட்டியுள்ளது. இவ்விதழும் டாக்டருக்கு மட்டும் பயன்படக் கூடியது.

இதற்கு அடுத்ததாக ஹோமியோ பிரகடனம் (1958) எனும் இதழ் திருவாரூர் டாக்டர் சீனிவாசனை ஆசிரியராகக் கொண்டு ஹோமியோ இன்ஸ்டிடியூட்டின் சார்பில் வெளிவந்துள்ளது. இவரும் கும்பகோணம் டாக்டர் மூர்த்தியைப் போலவே ஹோமியோ மருத்துவப் படிப்பை மற்றவர்கள் கற்றுக்கொள்ளத் தன் கல்விக்கூடத்தின் வழியாக மருத்துவத்தைக் கற்பித்துள்ளார். இவர்கள் இப்பள்ளியில் ஸ்டெதாஸ்கோப், இரத்த அழுத்தமானி, சிரிஞ்சி, இரத்த சோதனை போன்றவற்றின் உபயோகங்களையும் அவற்றை எப்படி உபயோகிப்பது என்ற விபரங்களையும் தங்கள் வகுப்புகளில் சொல்லித் தருவதாகவும் விளம்பரம் செய்துள்ளனர். இதன் மூலம் அலோபதி சோதனை முறைகளைத் தங்கள் மருத்துவ முறையுடன் கலந்து செய்ய முனைந்துள்ளது தெரிய வருகிறது. ஆர்கனான் (1961), சுகவழி (1980), ஆரோக்கிய மலர் (1980) போன்ற

இதழ்களில் ஹோமியாவைத் தவிர மற்றைய அறிவியல் செய்திகளும் இடம் பெற்றுள்ளன. ஹோமியோ மித்திரன், ஹோமியோபதிச் சுடர் இதழ்கள் சென்னையிலிருந்தும் மற்றைய ஹோமியோபதி இதழ்கள் தமிழகத்தில் எல்லாப் பகுதியிலிருந்தும் வெளிவந்துள்ளன.

'மனிதனை நலமாக்குவது ஹோமியோபதி' எனும் இதழ் மட்டும் கிரெவுன் அளவில் உள்ளது. இதைத்தவிர மற்றைய இதழ்கள் அனைத்தும் குமுதம் அளவிலேயே உள்ளன. ஹோமியோபதி சுடர், ஹெல்த் இதழ்கள் அளவு.

ஈஸ்டர்ன் ஹோமியோ ஸ்டார் ஆசிரியர் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினரானதற்கு நன்றியும் (99 பிப்.), 'B' பிரிவு டாக்டர்களை 'A' பிரிவாக உயர்த்தியதற்கு முதலமைச்சருக்கு நன்றியும் (85, ஜூன்), சுகவழியில் (83, பிப்.) திண்டுக்கல் மாநாட்டின் செய்தியும், மற்றும் ஹோமியோபதி, ஹோமியோ மித்திரன், ஹோமியோ நண்பன் இதழில் சங்கச் செய்திகளையும், கருத்தரங்குகளைக் குறித்துச் செய்திகளையும் வெளியிட்டுத் தங்கள் மருத்துவத் துறையை ஒருங்கிணைக்கவும், ஹோமியோ மருத்துவத்தைப் பரப்பவும் பாடுபட்டுள்ளன. இதுதவிர தங்களால் தயாரிக்கப்படும் மருந்துகளை விளம்பரம் செய்யவும், ஹோமியோ பிரகடனம் ஆசிரியர் தன்னால் நடத்தப்படும் ஆலோசனை இடங்கள் போன்றவற்றையும் பிரசுரிக்க சுயவிளம்பரத்திற்கும் இவ்விதழ்கள் உதவியுள்ளன. ஹோமியோ மருத்துவ இதழ்கள் என்று தங்களைப் பறைசாற்றிக் கொள்ளும் இதழ்கள் கூட மற்ற மாற்று மருத்துவச் செய்திகளை வெளியிடத் தயக்கம் காட்டவில்லை. முதன்முதலில் ஹோமியோ மருத்துவ முறைக்காக வெளிவந்த ஹோமியோபதி இதழில் தங்கள் மருத்துவ முறைகளைக் கூறுவதுடன் யோகாசன முறைகள் குறித்த கட்டுரையையும் (1955) வெளியிட்டுள்ளது. இதுபோல் ஹோமியோ நண்பன் (1990, அக்.) செயற்கை சிறுநீரகம், ஆர்கனான், தமிழகத்து மருத்துவப் பழமொழிகள், மருத்துவ மஞ்சரி (87, பிப்.) பக்திக்குச் சில வழிமுறைகள், தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி (1959, ஜன.) சித்த வைத்திய பகுதி, உடற்கூறு சாஸ்திரம் உங்கள் ஹோமியோ நண்பன், உயிராற்றல் என்றால் என்ன என்பதைப் போன்ற பலதரப்பட்ட செய்திகள் கொண்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இவற்றைப் பார்க்கும்போது அலோபதி மருத்துவத்தைத் தவிர மற்றைய மருத்துவத்தைப் பரப்பவும் இவ்விதழ்கள் உதவியுள்ளன என்பதை அறிய முடிகின்றது.

## பாலியல் இதழ்கள்

வெளிவந்துள்ள பாலியல் தொடர்புள்ள இதழ்களை அவற்றின் மறைமுகமான நோக்கங்களைக் கொண்டு இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று உடற்கூறு, உடலியக்கம் பற்றிய பாலியல் கல்வியை அதிகமாகவும் மற்றொரு வகையில் உணர்வைத் தூண்டும் செய்திகள் அதிகமாகவும் பாலியல் கல்வி குறைவாகவும் காணப்படுபவை. இரண்டாவது வகை இதழில் பாலியல் கல்வியுடன் காம இச்சையைத் தணித்துக் கொள்ளும் செய்திகளுடனும் நம் நாட்டின் நடிகைகள் மற்றும் மேலைநாட்டு அழகிய பெண்களின் முழு நிர்வாண அல்லது அரை நிர்வாண படங்களுடனும் காணப்படுபவை.

பாலியல் தொடர்பாக அதிக ஆண்டுகள் வெளிவந்த இதழ் காதல் (1947), ஆரம்பக் காலத்தில் திருச்சியில் வெளியிடப்பட்டுப் பின்னர்ச் சென்னையிலிருந்து வெளிவந்துள்ளது. இவ்விதழில் உடலுறுப்புகள் பற்றிய செய்திகளுடன் நீரிழிவு (1969) போன்ற நோய்கள் குறித்த செய்திகளும் வெளிவந்துள்ளன. மொத்தத்தில் இஃது ஓர் இலக்கிய இதழாகும்.

சென்னையிலிருந்து வெளிவந்த மானிட இன்பம் (1948) என்ற இதழ் தேக தத்துவ மனோதத்துவ ஆராய்ச்சி இதழ் என்ற முழக்கத்துடன், பாலியல் தொடர்பான பல அரிய நூல்களைத் தமிழில் எழுதிய கே. வெங்கட்ராவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

இவ்விதழின் நோக்கங்களை,

"மானிட இன்பம் நுண் கலை ஆராய்ச்சிப் பத்திரிகையாக அமைந்துள்ளது என்பதை நண்பர்கள் அறிவார்கள். ஆண், பெண் தேக தத்துவ மனோ தத்துவ ஆராய்ச்சிகளை முதன்முதலாக நமது பத்திரிகையே தமிழ் மக்களுக்கு போதிக்க முன் வந்தது என்பதையும் அறிவர். இப்போது தேக தத்துவ ஆராய்ச்சிகளை விளக்கமாகவும், தெளிவாகவும், எளியதாகவும் எடுத்துரைத்து வருவது மானிட இன்பம் ஒன்றேயென்று தைரியமாகக் கூறலாம்'' என்று தலையங்கத்தில் கூறும் இவ்வாசிரியர், மேலும் "மேல்நாட்டு ஆய்வு உண்மைகளுடன் நம் நாட்டு கலாச்சார வழக்கங்கள், புராதனக்கலை, பண்பு, நாகரிகம், இவற்றுடன் தற்கால நிலையையும் இணைத்து வழிகாட்டியதாக இவ்விதழ் வெளிவரும்" என்றும் கூறுகிறார். இவ்விதழில் பாலியல் குறித்த உடற்கூறு

செய்திகளுக்கு வரைபடங்களும் சிறப்பான அலோபதி முறைப்படி மருந்துக் குறிப்புகளும் உள்ளன.

## உணர்வைத் தூண்டும் இதழ்கள்

லைஃப் (1986), நடந்த கதை (1986), மறைமுக பிரச்சனைகள் (1994), மருத்துவ 'A' இதழ் (1971), காமசூத்ரா (1994), வாலிப மருத்துவம் (2000), புதிரா புனிதமா (2000) ஆகிய இதழ்களில் உணர்வைத் தூண்டும் கட்டுரைகள் மிகுந்து காணப்படுகின்றன. இவ்விதழ்கள் பெரும்பாலும் சில மாதங்களிலிருந்து சில ஆண்டுகள் வரை வெளிவந்து நின்றுவிடுகின்றன. இவ்விதழ்களின் ஆசிரியர்கள் மீண்டும் புதிய இதழ்களில் தங்களை ஆசிரியர்களாகக் காட்டிக் கொள்கின்றனர்.

காமசூத்ரா இதழில் வழக்கமான பாலியல் கட்டுரைகளைத் தாண்டி வள்ளுவத்தின் காமத்துப்பால் விளக்க உரை மற்றும் காதலை மையமாகக் கொண்ட புஷ்பா தங்கதுரை கதையும் இடம் பெற்றுள்ளது.

# தனிப்பட்ட நோய்க்கான இதழ்கள்

## நீரிழிவு

டாக்டர் கே. தர்மகிருஷ்ணராஜாவையும் (ராஜபாளையம்) டாக்டர் ஜி. சந்தானத்தையும் (மயிலாடுதுறை) ஆசிரியர்களாகக் கொண்டு முறையே இனிப்பு மலர் (1999), டயாபடிஸ்டுடே (2000) எனும் நீரிழிவு நோய்க்கான இதழ்கள் அலோபதி முறைப்படி விழிப்புணர்வுக் கட்டுரைகள், உணவுமுறை, சமையல் குறிப்பு மற்றும் அவர்கள் நடத்தக்கூடிய மருத்துவக் கூட்டங்கள் குறித்த செய்திகளுடன் வந்து கொண்டிருக்கின்றன. இவ்விதழ்கள் சந்தாதாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன.

இதுபோலவே 2002இல் 'கசக்கும் இனிப்பு' என்ற மாத இதழ் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையால் வெளியிடப் பட்டுள்ளது.

## பேதி (1984)

பேதியைச் சார்ந்த நோய்களைத் தவிர்க்க RUHSA என்ற அமைப்பிலிருந்து Dialogue on Diarrhoea என்ற லண்டன் இதழின் மொழிபெயர்ப்பாக ருதா என்ற ஊரிலிருந்து (வட ஆற்காட்டு மாவட்டம்) தனிச்சுற்றுக்கு மட்டும் ஓர் சர்வதேச மடல் வெளி வந்துள்ளது. இவ்விதழ் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இலவசமாக அனுப்பப்படுகிறது.

## கண் ஒளி (1984)

அரவிந்த மருத்துவமனை கண் வங்கிச் சங்கத்தின் வெளியீடாக இம்மாத இதழ் வெளிவருகிறது. இதில் அம்மருத்துவமனைச் செய்திகளுடன் கண் நோய்களைப் பற்றியும் சத்தான உணவுகள் குறித்தும் கட்டுரைகள் காணப்படுகின்றன.

## எய்ட்ஸ் செய்திக் கதிர் (1996)

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் வெளியீடாக 1996லிருந்து தனிச்சுற்றுக்காக மட்டும் எய்ட்ஸ் பிரச்சினைகளைக் குறித்த மாநாட்டுச் செய்திகளோடு விழிப்புணர்வூட்டும் செய்திகளையும் தொகுத்து வழங்கியுள்ளது.

# யோகாசன இதழ்கள்

*நல்வாழ்வு*

*முதன்முதலில் 1936ஆம் ஆண்டில் பெங்களூர் திரு. எஸ். சுந்தரம் ஆனந்த விகடனில் 'ஆனந்த ரகசியம்' என்ற தலைப்பில் ஆசனங்களைப் பற்றி எழுதித் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தினார். இத்தொடர் 1950ஆம் ஆண்டு வரை நீடித்து நின்றுவிட்டது. இதன் பின்னரே கல்கியில் குமாரஸ்வாமியின் ஆசனம் பற்றிய கட்டுரைகள் வெளியாயின.*

*கல்கி ஓர் இலக்கிய இதழாக இருப்பினும் இதில் 1952 முதல் சுமார் இரண்டரை ஆண்டுகள் தொடர்ந்து 'ஆரோக்கிய ரகசியம்' எனும் தலைப்பில் ஆசனங்களைப் பற்றிய கட்டுரைகள் வந்துள்ளன. இதழில் இந்தக் கட்டுரை ஆரம்பமானதற்கு முன் ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி 'உபயகுசலோபரி' என்ற தலைப்பில் குமாரசாமியைப் பற்றியும் அவர் எழுதப்போகும் ஆசன முறைகளைப் பற்றிய கட்டுரையைக் குறித்தும் விளம்பரப்படுத்தி அறிக்கை வெளியிட்டார். ஆசனம் குறித்த கட்டுரை வெளிவந்த சில மாதங்களில் ஆசிரியர் கல்கி மறைந்தார். ஆனாலும் இத்தொடர் அதன் பிறகும் வெளிவந்து பின்னர் சில காரணங்களால் நின்றுபோனது.*

*இதைத் தொடர்ந்து குமாரசாமியும் காலமானார். பின்னர்க் குமாரசாமியின் துணைவியார் திருமதி சீதாலெட்சுமி நல்வாழ்வு எனும் ஆசனம் குறித்த இதழைத் தன் கணவரின் கால்தடத்தைப் பின்பற்றி நடத்தி வந்துள்ளார்.*

*இவர் ஆசனப் பயிற்சியையும், அதன் குணப்பாடுகளைப் பற்றிய செய்திகளையும் சந்தேகமற அறிந்திருந்ததால் குமாரசாமி அதை வெளிப்படுத்திக்காட்டப் பல ஊர்களில் ஆசனங்களைச் செய்துகாட்டும் பொழுது திருமதி சீதாலெட்சுமியே அதைப் பற்றி விளக்கம் கூறிக் கூட்டத்தை நடத்துவது வழக்கம்; ஆகவே இதழில்*

ஆசிரியர் பொறுப்பேற்ற பின் ஆசனத்தைப் பற்றி எழுதுவது எளிதாக அமைந்தது.

இதன் வெளிப்பாடாகச் சத்தான உணவு, யோகாசனக் கலை (நல்வாழ்வு 1956 ஜூன்) மற்றும் சந்தேகங்களுக்குப் பதில் போன்ற கட்டுரை மற்றும் வினாவிடைகளுக்குப் பதில் ஆகியவற்றைத் தொடர்ந்து எழுதிவந்துள்ளார்.

## யோகாசன ஆலய விஜயம்

சென்னையிலிருந்து ஆசிரியர் ஜெயராமைக் கொண்டு 1942ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது ஆசனத்திற்கான முதல் இதழான யோகாசன ஆலய விஜயம். இதில் ஆசன விளக்கம், உடலியக்கம், ஒழிக ஊளைச்சதை (1948, பிப்.) போன்ற கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவ்விதழ் 1997இல் தன் பொன்விழாவைக் கொண்டாடி, ஆசனங்களை வெளிப்படுத்தியதுடன் ஆரம்பத்திலிருந்தே தாயுமானவர் பாடல்களைப் போற்றிப் புகழ்ந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவதோடு இயற்கை உணவு மற்றும் இந்து மதக் கருத்துக்களைக் குறித்த கட்டுரைகளையும் வெளியிட்டு 2000ஆம் ஆண்டில் வைர விழா ஆண்டாகக் கொண்டாடித் தொடர்ந்து இப்பொழுதும் வெளிவருகிறது.

## யோகக்கலை

ஆசனத்தைத் தெரியப்படுத்தும் இதழாக (1996) கடந்த ஏழு ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் மற்றோர் இதழ் 'யோகக்கலை'. இதன் ஆசிரியர் யோகாசனப் பேராசிரியர் ஆசனா இரா. ஆண்டியப்பன். இவ்விதழ் யோகத்துடன் தியான, இயற்கை மருத்துவத்தையும் போதிக்கும் இதழ் என்ற அறிவிப்புடன் வெளிவருகிறது.

## ஏழைகளுக்கான இலவசக் கையேடு

50 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் உட்பட 3 மொழிகளில் மருத்துவத்திற்கு என்று வெளியிடப்பட்ட 'ஆரோக்கிய தீபிகை' எனும் இதழைப்போல்,

"அனைத்து இந்தியர்களுக்கும் கல்வியளிக்கும் பத்திரிகை "நான்வாணி" (1989) 'சாரிட்டபிள் ட்ரஸ்ட் மகஸின்' ஆகும். இந்தியாவில் மிக அதிக அளவில் வாசிக்கப்பட்ட இம்மாதமிரு

முறை இதழ்" தமிழ்மொழி உள்ளிட்ட ஆங்கிலம், இந்தி போன்ற மற்றைய 8 இந்திய மொழிகளில் பெங்களூரிலிருந்து வெளியிடப் பட்டுள்ளது.

இவ்விதழில் அலோபதி மருத்துவத்தை ஒட்டி உடற்பயிற்சி மற்றும் மருத்துவம் சார்பான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவ்விதழை விற்கவோ, விரயம் செய்யவோ வேண்டாம் என்ற வேண்டுகோளுடன், 'பத்திரிகையைப் படித்து முடித்ததும், மற்றவர்களுக்கும் கொடுங்கள்' என்ற அறிவிப்புடன் ஏழைகளுக்கான இலவசக் கையேடு என்ற வாசகத்துடன் வெளி வந்துள்ளது. இவ்விதழ் நிறுவனங்களுக்கும் மற்றும் நூலகங்களுக்கும் இலவசமாக அனுப்பி வைக்கப்படுகிறது.

## கால்நடைக் கதிர்

மக்களுக்கான மருத்துவ இதழ்களைப் போல் கால்நடைகளுக்காக மட்டும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வெளியீடாக 1880லிருந்து சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியிலிருந்து 'கால்நடைக் கதிர்' வெளிவருகிறது. இவ்விதழ் தீவனத்தில் நச்சூட்டு உள்ளதா என்பதை அறியச் செய்யவேண்டிய செயல்களை எடுத்துக்கூறி மற்றும், கோழிகளின் இரத்தக்கழிச்சல் நோய் போன்ற கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளது.

இப்பொழுது பேமிலி ஹெல்த் மற்றும் ஹெல்த் & பியூட்டி ஆகிய இதழ்களிலும் கால்நடை குறித்த கட்டுரைகள் வெளி வருகின்றன.

# மருத்துவ இதழ்களின் வடிவம்

## அட்டை

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இதழ்களின் அட்டைகள் வண்ணமின்றி மெல்லிய தாளிலே அச்சடிக்கப்பட்டுள்ளன. 1930க்கு பிறகு ஒரே வண்ணத்துடன் அதாவது வெள்ளைக் காகிதத்தில் மஞ்சள், சிகப்பு, நீலம் போன்றவற்றுள் ஒரு வண்ணத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளன. ஆனால் 1980க்கு பிறகு நவீன ஆப்செட், ஸ்கான் வரவுக்குப்பிறகு, வண்ண அச்சுக்களுடன், நினைத்தபடி வடிவமைத்து வண்ணப்படத்துடன் காணப்படுகின்றன. இப்பொழுது "ஹெல்த்" போன்ற இதழ்களின் அட்டை மெருகூட்டப்பட்டு (லேமினேசன் செய்யப்பட்டு) பளீரென்று கண்ணைப் பறிக்கும் விதத்தில் கடைகளில் விற்பனைக்குத் தொங்குவதே வாசகர்களை வாங்கத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

## பக்கங்கள்

மருத்துவ இதழ்களில் அதிகப் பக்கங்களுடன் தமிழில் வெளிவந்துள்ள இதழ் "நல்வாழ்வு" ஆகும். கிரௌன் அளவில் 60 பக்கங்களுடன் வெளி வந்துள்ளது. இதற்கடுத்து "ஆரோக்கிய தீபிகை" 44 பக்கங்கள், "மருத்துவன்" 40 பக்கங்கள், "சித்தன்" 32 பக்கங்கள், டபுள் கிரௌன் அளவு, மற்றைய இதழ்கள் 24 பக்கங்கள் அளவில் இன்றைய குமுதம் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. "ஹெல்த்" இதழ்கள் வண்ணக் கலரில் கண்ணைக் கவரும் விதத்தில் ஏ8 அளவில் உள்ளது. இதுபோலவே "நல்வழி" அன்றிலிருந்து இன்றுவரை "ஹெல்த்" அளவிலேயே வெளிவருகிறது.

"அகஸ்தியன்" மற்றும் "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்", "ஆரோக்கியம்" பக்கங்களின் எண்கள் தொடர்ச்சியாக வந்துள்ளன.

ஓர் ஆண்டின் பொருளடக்கம் "ஆரோக்கிய தீபிகை" மற்றும் "ஆரோக்கியம் ஆகிய இதழ்களில் ஆண்டுக் கடைசி இதழில் வரிசைப்படி உள்ளது. இதன்மூலம் வாசகர்களுக்கு அந்த ஆண்டில் வெளிவந்த கட்டுரைகளைச் சுலபமாகத் தேடிக்கண்டுபிடித்து ஆய்வுகள் செய்ய முடிகிறது. இம்மாதிரியான ஒரு ஆண்டு பொருளடக்கத்தை இப்பொழுது வெளிவரும் அத்துணை அலோபதி மருத்துவ ஆய்வு இதழ்களும் மற்றும் மற்றைய அறிவியல் ஆய்வு இதழ்களும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றன.

## பெயர் – ஆங்கிலத்திலும் தமிழிலும்

"ஜனவிநோதினி" போன்ற 19ஆம் நூற்றாண்டு அறிவியல் இதழ்களின் தலைப்பு தமிழில் மட்டும் இருக்கும் நிலையில் அதைத் தொடர்ந்து 20 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வெளிவந்த மருத்துவ இதழ்களின் பெயர்கள் இரு மொழிகளிலும் அச்சடிக்கப்பட்டுள்ளன. "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்" மற்றும் "ஆரோக்கிய போதினி"யின் பெயர்கள் தமிழில் சிறிதாகவும், ஆங்கிலத்தில் பெரிதாகவும் தமிழ்ப் பெயருக்கு மேலே பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் 'வைத்தியகலாநிதி' தமிழை மேலே பெரிதாக அச்சிட்டுக் கீழே சிறியதாக ஆங்கிலப்பெயரை அச்சிட்டுள்ளது. 'ஆரோக்கிய தீபிகை' இதழில் ஆங்கிலத்தில் சிறிதாக மேலேயும் தமிழில் பெரிதாகவும் இதழின் பெயர் அச்சடிக்கப்பட்டுள்ளது.

'வைத்திய கலாநிதி', 'ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்", 'ஆயுள்வேதம்', ஆரோக்கியம்', 'வாய்ஸ் ஆப் ஹோமியோபதி', 'ஹோமியோபதி' போன்ற இதழ்கள் உள்ளே உள்ள கட்டுரைகளை வாசகர்களுக்குத் தெரிவிக்கும் விதமாக அட்டையின் முகப்பிலேயே 'விஷய அட்டவணை', 'பொருளடக்கம்' (Content) என்ற தலைப்புகளின் கீழ்க் கட்டுரையின் பெயர்கள் அதன் பக்க எண்களுடன் உள்ளன. இன்றும் 'சித்தர் கருவூலம்' மற்றும் 'சித்த மருத்துவம்' ஆகிய இதழ்கள் அதன் பொருளடக்கத்தை அட்டையிலேயே வெளியிட்டு வருகின்றன.

ஒரு குறிப்பிட்ட இதழுக்கு வயது என்ன என்பதை அறிந்து கொள்ள ஒவ்வோர் இதழும், இதழ் ஆரம்பமான ஆண்டு, மாதங்களை அறிந்துகொள்ள இதழின் முதல் பக்கத்திலேயே சில

குறியீடுகளைக் கொடுத்துள்ளன. அவற்றுள் சில இதழ்களின் பெயரை நினைவூட்டும் விதமாக அமைந்துள்ளன. மற்றும் சில பொதுவாக உள்ளன.

## பெயரை நினைவூட்டும் குறியீடுகள்

| பெயர் | ஆண்டு | மாதம் |
|---|---|---|
| சித்தர் களஞ்சியம் | கதிர் | கலை |
| வைத்தியமலர் | மலர் | இதழ் |
| சித்தர் செயல் | சித்தர் | செயல் |
| ஜீவன் மூலிகை | ஜீவன் | மூலிகை |
| ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும் | பகுதி | தொகுதி |

## பொதுவான குறியீடு

| | | |
|---|---|---|
| ஆயுள் வேதம் | தொகுதி | பகுதி |
| ஆரோக்கிய தீபிகை | தொகுதி | பகுதி |
| வைத்திய கலாநிதி | புஸ்தகம் | சஞ்சிகை |
| ஹோமியோமித்திரன் | மலர் | இதழ் |
| ஸ்நான தர்மம் | மலர் | இதழ் |
| தமிழ் மருத்துவப் பொழில் | மலர் | இதழ் |
| அகத்தியன் | புஸ்தகம் | இலக்கம் |
| ஸ்ரீதன்வந்திரி | புஸ்தகம் | |

ஸஞ்சிகை

### சமயக்குறியீடுகள்

பெயர்களுக்கு மேல் உ, சிவமயம், ஓம் (முதல்சித்தன்) என்றெல்லாம் சில இதழ்களில் காணப்படுகின்றன.

### காலமுறை

இதழ்கள் குறிப்பிட்ட தேதிகளில் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விதழ்கள் அனைத்தும் ஆங்கில மாத தேதிகளின்படி குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. 'வைத்திய சந்திரிகா' மாத முதல் வாரத்திலும், 'ஆரோக்கியம்' 21ஆம் தேதியிலும், 'மானிட இன்பம்' 15ஆம் தேதியிலும், 'ஸ்நானதர்மம்' 20ஆம் தேதியிலும், 'வைத்தியமலர்' ஆங்கில மாதத்தின் கடைசி வாரத்திலும், 'ஓம்சக்தி மருத்துவ மலர்' ஆங்கில மாத முதல் தேதியிலும் வெளியிடப் பட்டுள்ளன.

சில இதழ்கள் மாத இதழ்கள் என அறிவிப்புகள் இருப்பினும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கொருமுறையே வெளியிடப்பட்டுள்ளன. 'அகஸ்தியன்' (1923) ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் சேர்ந்தும், "கல்பதரு, ஆரியவித்யா விமர்சினை" (1922), 5,6,7,8 மாதங்கள் ஒன்றாகவும், "வைத்திய கலாநிதி" (192) 9, 10, 11 மூன்று மாதங்களும், "ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்" (1923) இரண்டு மாதங்களும் (அக். நவம்பர்) சேர்ந்து வெளிவந்துள்ளன.

இவ்வெளியீடுகளைப் பார்க்கும்பொழுது ஒன்று மருத்துவ இதழ்களை வாங்குவோர் அன்றைய நிலையில் குறைவாக இருந்திருக்க வேண்டும். இல்லையேல் தமிழ் படிக்கும் வாசகர்கள் குறைந்தும், ஆங்கிலம் படிக்க விரும்புகிறவர் அதிகமாகவும் இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

இது தவிர சில திடீர் இடையூறுகளும் இரண்டு இதழ்கள் ஒன்றாக வெளிவந்ததற்குக் காரணமாக இருந்திருக்கலாம் (எ.கா.).

"வைத்திய மலர்" 1952ஆம் வருஷம் ஜூன் மாதம் மலர்ந்தது. அப்பொழுது அச்சிட்டுக் கொடுத்த, ஆபீசைவிட்டுப் பல காரணங்களை முன்னிட்டு வேறு அச்சாபீசுக்கு மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டபடியால், டிஸ்டிரீட்டு மாஜிஸ்ரேட்டுக்கு மனுக்கொடுத்திருந்ததில் மாஜிஸ்ரேட் அவர்களின் சர்டிபிகேட் செப்டம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில்தான் கிடைத்தது. அதன் பிறகு ஜூலை மாத மலர் அச்சிட்டு அனுப்பினோம். காலதாமதத்தை உத்தேசிக்க ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்கள் இரண்டிற்கும் சேர்த்து இன்று வெளியாகிறது" என்று கூறியுள்ளது.

## மருத்துவ இதழ்களின் பெயர்கள் மருத்துவ முறையை ஒட்டியதாக உள்ளன

19ஆம் நூற்றாண்டு இறுதி மற்றும் 20ஆம் நூற்றாண்டு ஆரம்பக் காலத்திலிருந்து இடைப்பட்ட காலம்வரை மருத்துவ இதழ்கள் வைத்திய என்று அடைமொழியோடு "வைத்திய விசயின" "வைத்திய போதினி" எனப் பெயரிடப்பட்டுள்ளன. இதன் பின்னர் இதழ்களின் பெயர்கள் அது எந்த மருத்துவமுறையைச் சார்ந்து வருகிறதோ அதை நினைவூட்டும் விதமாக வெளிவந்துள்ளன.

(எ.கா.) ஆயுர்வேத இதழ்கள் "ஸ்ரீதன்வந்திரி", "கல்பதரு ஆரிய வித்தியா விமர்சனை", "ஆயுர்வேத ஜீவரக்ஷகன்", "ஆயுள்வேதம்"; சித்த மருத்துவ இதழ்கள் "சித்தர் களஞ்சியம்", "தமிழ் மருத்துவப் பொழில்", "மூலிகை மணி", "மூலிகை மருத்துவன்" என்றும் வெளிவந்துள்ளன.

மருத்துவன் எனும் சொல் பெரும்பாலும் சித்த மருத்துவர்களுக்கே உரியதாக இருந்தது. ஆயுர்வேத மருத்துவர்கள் இச்சொல்லை உபயோகிக்காமல் இருந்துள்ளனர். இதற்குச் சான்றாக "மருத்துவம்" என்ற சித்த மருத்துவ இதழே (1928) வெளிவந்துள்ளது.

சித்த மருத்துவர்களுக்கு மாறாக ஆயுர்வேத இதழ் ஆசிரியர்கள் பண்டிட் ஸ்ரீராம் வெ.தாஸ் (ஆயுள்வேதம்); வைத்திய வித்யாசாகர பண்டித டி.வி.எம். பில்வநாதய்யர் (ஆயுர்வேத ஜீவரக்ஷகம்), வைத்திய வாசஸ்பதி வி.வி. நடராஜ சாஸ்திரி, பண்டிட் நடராஜ அய்யங்கார் (வைத்தியசந்திரிகா), ஆயுர்வேத ஆசார்யா டாக்டர் கே. வைத்தியநாத சாஸ்திரி (சேஷமநிதி) என்ற உயர்ந்த அடைமொழிகளுடன் இவ்விதழ் ஆசிரியர்கள் தங்களை அழைத்துக் கொண்டுள்ளனர்.

ஹோமியோபதி இதழ்கள் பெரும்பாலும் 'ஹோமியோ' என்று அடைமொழியைச் சேர்த்து "ஹோமியோபதி", "வாய்ஸ்ஆப் ஹோமியோபதி" போன்ற பெயருடன் பல இதழ்கள் வெளிவந்துள்ளன. இவ்வடைமொழி இல்லாத நிலையில் அம்மருத்துவத் தந்தையின் பெயர் ஹானிமேன் போன்ற பெயருடன் அமைந்துள்ளன.

காரணப் பெயரைத்தாங்கி இயற்கை மருத்துவ இதழ்களின் பெயர் "இயற்கை", "இயற்கை மருத்துவம்" என்று உள்ளது.

அலோபதி இதழோ "நல வாழ்வு" (ஹெல்த்) என்பதைக் குறிக்கும் சொல்லான ஆரோக்கியம் என்பதுடன் "ஆரோக்கிய தீபிகை", "ஆரோக்கிய சிசுவும் சுகவாழ்வும்", மற்றும் "நல்வழி" என்ற பெயருடன் வெளிவந்துள்ளன என்றாலும் ஆரோக்கியம் என்பது ஒரு பொதுச் சொல்லாக இருப்பதினால் ஆயுர்வேத இதழும் "ஆரோக்கியம்" என்ற பெயரைத்தாங்கி வெளிவந்துள்ளது.

## அட்டையிலோ அல்லது முதல் பக்கத்திலோ மூதுரை அல்லது நன்னெறிப்பாடல்கள்

'ஆயுர்வேத ஜீவரக்ஷகம்', 'வைத்திய கலாநிதி', 'ஹோமியோ மித்திரன்' ஆகிய இதழ்கள் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற மூதுரையுடனும், 'கல்பதரு ஆரிய வித்யா விமர்சணை' தொட்டனைத்தூறும் மணற்கேணி– என்ற குறளுடனும் ஸ்ரீசத்குரு விதூதி ஆனந்த மானந்த என்ற பாட்டுடனும், 'ஸ்ரீதன்வந்திரி' தன்வந் திரியைப் போற்றி, "ஸ்ரீதன்வந்திரியே நமஹ" என்ற மந்திரம் மற்றும் ஓர் நல்வாழ்வு குறித்த சுலோகத்துடனும், ''ஜீவரக்ஷகன்'' கொல்லாமையை ஆதரிக்கும் வண்ணம் "கொல்லான் புலாலை... என்ற குறளுடனும், "ஆயுர்வேத ஜீவரக்ஷகம்" இதழில் "அகரமுதல யெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றேயுலகு" என்ற குறளுடனும் தன்னுடைய எண்ணங்களை முதல் பக்கத்திலேயே கூறியுள்ளன.

''ஆரோக்கியம்'' அட்டையில் ''நோயற்ற வாழ்வைப் போதிக்கும் மாதப் பத்திரிக்கை" என்று தன் பொதுவான நோக்கை அட்டையில் குறித்து உள்ளே முதல் பக்கத்தில் அறம் பொருளின்பமும், வீடும் பயக்க உறுதுணையாவது ஆரோக்கியமே என்று தமிழிலும், வடமொழியிலும் தன் பொது நோக்கைக் கூறி அதன் கீழ் வாக்படர், சரகர், சுசுருதர், சிவப்பிரகாசர் போன்றோர் அருளமுதமும் உள்ளது. ஆயுர்வேதம் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பொதுவான மூதுரையைக் கூறுவதோடு நமது பிரார்த்தனை என்று "மனதை மலமற மலாமிசை பொழுதரும்" என்ற பாசுரங்களுடன் உள்ளது. இதற்கு மாறாகச் சித்த மருத்துவ இதழான "மூலிகை மணி" சைவத்திருமறையாகிய திருவாசகம், திருப்புகழ் பாடலுடனும், ''தமிழ் முனிவன்'' திருவாசகப் பாடலுடனும் இறைவனைத் துதித்து அமைகின்றன. "சித்தர் செயல்" ஒரு புதிய சித்தாந்தக் கருத்தான "ஒருவனே தேவன் அத்தேவன் காற்றேதான்" என்பதுடன் வெளிவருகிறது. 'சித்த மருத்துவம்', இதழ் ஆசிரியர் டாக்டர் சிற்சபை மறைவிற்குப் பிறகு அவர் பொன்மொழிகளில் சில வரிகள் முதல் பக்கத்தை அலங்கரிக்கின்றன.

''ஹோமியோ தொண்டன் ''நற்செய்திக்கூட்டங்களை நினைவுறுத்தியும், "ஞான வைத்திய செய்தி" தானத்தில் சிறந்தது

வைத்தியதர்மம் என்பதை நினைவூட்டியும் வெளிவந்துள்ளதை நோக்கும்பொழுது, இவ்விதழ்கள் நல்லெண்ணத்தையும், நல்லொழுக்கத்தையும் உருவாக்கத் தன்னால் ஆன முயற்சிகளை எடுத்துக் கொள்வதுடன், சித்த மருத்துவ இதழ்கள் சைவ சித்தாந்தத்திற்கும், ஆயுர்வேத இதழ்கள் வேதாந்தக் கருத்துகளுக்கும் தம்மை உட்படுத்திக் கொண்டுள்ளமை தெரியவருகிறது.

## இதழ்களின் விலை

வெளிவந்த இதழ்களில் 1900-1952 வரை வெளிவந்த இதழ்களுக்கு வாசகர்கள் கையொப்பக்காரர்களாகச் (சந்தாதாரர்) சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பல இதழ்களில் தனி இதழுக்கு விலை குறிப்பிடப்படவில்லை; என்றாலும் "ஆரோக்கியமும் சிசுவும் வாழ்வும்" (6 அணா) "ஆரோக்கிய தீபிகை" (2 அணா), "மருத்துவன்" (4 1/2 அணா), "நல்வாழ்வு" (8 அணா), யோகாசன ஆலய விசய" (2 அணா), "வைத்திய மலர்" (5 அணா) எனத் தங்கள் தனி இதழ் விலைகளைக் கூறியுள்ளன.

இதேபோல் ஆண்டுச் சந்தாவாகப் பெற்றுக் கொண்டும், தபாலிலும், விபியியிலும் இதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன. இப்படி வி.பி.பி.யில் அனுப்பப்பட்ட ''வைத்தியபோதினி'' (1897) திருப்பிவிடப்படுவது குறித்து மனம் நொந்து ஆசிரியர்– "கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் காரணம் சில பத்திரிகாபிமானிகளே! இவர்கள் பத்திரிகையை இலவசமாய் அனுப்புந்தோறும் பெற்றுக் கொள்வதும் வி.பி.பி.யில் அனுப்பும்போது திருப்பிவிட்டு விடுவதுமேயாகும்!" என்று குறைபட்டுக் கொள்கிறார்.

## கையொப்பம் (சந்தா)

### ஆண்டுக்குக் கையொப்பம்

"ஆயுள்வேதம்", "சித்தன்", "அகஸ்தியன்" போன்ற இதழ்கள் ஆண்டுக் கையொப்பம்தான் குறைவானது. ஒரு ரூபாய்க்கு அதிகமான கையொப்பம் ''நல்வாழ்வு'' இதழ் ரூ. 6. 12. 0; "ஸ்ரீதன்வந்திரி"யும் "வைத்திய சந்திரிகா"வும் ரூ. 5 ஆகும்.

அந்நாளில் இலங்கை, பர்மாவிற்கும் இதழ்கள் நம்நாட்டில் ஆண்டுக்கு, எவ்வளவு கையொப்பம் வாங்கினார்களோ, அந்த

விலையை அந்நாடுகளிலிருந்து ரூ. 4.00 "சித்தர் களஞ்சியம்" போன்ற இதழ்களுக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆனால் இதே இதழுக்கு பினாங்கு (மலேயா), சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து ரூ. 5 அல்லது டாலர் 4 என்று சற்றுக் கூடுதலாகத் தொகைக்கு விற்கப்பட்டுள்ளன. இதேபோல் 'ஆயுள்வேதம்' உள்நாட்டைவிட 4 1/2 அணாவும், "வைத்தியமலர்" ரூ. 1.00 கூடுதலாகவும் கையொப்பமாக வெளிநாடுகளிலிருந்து பெற்றுள்ளது.

## மாணவர்களுக்குக் கையொப்பச் சலுகை

பாரதியார் 'இந்தியா' இதழுக்குக் கையொப்பமாக நிர்ணயித்திருந்த விதம் "யாமார்க்கும் குடியல்லோம்" என்ற விதமாக அரசுக்கு ரூ. 50/-, அரசர்கள் சமீன்தார்களுக்கு ரூ. 30, மாதம் 250க்கு மேல் வருமானம் உள்ளவருக்கு ரூ. 15, மற்றவர்களுக்கு ரூ. 3 என்பதுபோல் சாமிநாத ஐயரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "ஆரோக்கியபோதினி" மாணவர்களுக்கு மட்டும் கையொப்பத்திற்குச் சலுகை வழங்கியுள்ளது.

# மருத்துவ இதழ்களின் உள்ளடக்கம்

## மொழிநடையும் கலைச்சொல்லாக்கமும்

### மொழிநடை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் வெளிவந்த தமிழ் மருத்துவ இதழ்கள் ஆயுர்வேத, சித்த மருத்துவம் மற்றும் அலோபதி மருத்துவத் தகவல்களை அளிக்கின்றன என்றாலும் இம்மருத்துவ நூல்கள் அடிப்படையில் எம்மொழியிலிருந்து வந்தனவோ, அம்மொழியின் தாக்கத்திற்கு உட்பட்டுத் தமிழிலும் அம்மொழியின் கலைச் சொற்களையே பயன்படுத்தியுள்ளன. இம்மருத்துவ இதழ்களின் தமிழ் உரைநடைப் போக்கினையும், சொற்பயன்பாட்டினையும் அறிவதன் மூலம் அம்மருத்துவ முறைகளின் அடிப்படையைக் காண முடிகிறது.

### 1921ஆம் ஆண்டில் உரைநடை
### ஆயுர்வேத இதழ்கள்

***1. வைத்திய கலாநிதி (1921, ஆசிரியர்: பண்டிட் எம். துரைசாமி அய்யங்கார்)***

"ஆயுஷ்யரஸாயநம் - இது வெகு சிலாக்யமான விருத்தி மருந்து. ப்ருங்காமலக தைலம் - முதல்தரமான ஸ்நான தைலம். சிரஸ்களையும் கண்களையும் பொதுவாக தேஹத்தையும் குளிரச் செய்வது. இந்த இரண்டு முக்கியமான ஔஷதங்களைப் பற்றி ——

***2. கல் பதரு ஆரிய வித்யா விமர்சனை : (1922, ஆசிரியர்: எம்.வி. கிருஷ்ணசாமி அய்யர்)***

"திருவியா பேஷயின்றி லோகாபகாரமாய் பிரசுரிக்கும் இப்பத்திரிக்கையால் ஜனங்களுக்கு விசேஷ நன்மை உண்டாகுமென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. இதில் பல அருமையான வியாசங்கள் அடங்கி இருக்கின்றன."

இந்த இரண்டு இதழ்களும் ஆயுர்வேத மருத்துவக் கட்டுரைகளை வெளியிட்ட இதழ்களாகும்.

## சித்த மருத்துவ இதழ்கள்

இதே காலத்தில் வெளிவந்த சித்த மருத்துவ இதழின் உரைநடை:

**1. மருத்துவன் (1928, ஆசிரியர்: பண்டித எஸ்.எஸ். ஆனந்தம்)**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கையும் அடைவதற்கு நிலவுலகில் மக்கள் நோயின்றி நெடுநாள் உடல் வன்மையோடு வாழவேண்டுவது இன்றியமையாததாகும். நோயின்றி வாழ்வதற்குரிய விதிவிலக்குகளையும் மருந்துகளையும் கூறுவது மருத்துவமாகும். தவத்தில் சிறந்த சித்தர்கள் இயற்றிய நூல்களே, மருத்துவ நூல்களெனப் பெயர் பெறும்".

## அலோபதி மருத்துவ இதழ்

"ஆரோக்கியமும், சிசுவில் சுகவாழ்வும் (1923, ஆசிரியர்: டாக்டர் அன்னிதாமஸ்).

"தண்ணீரும் தேக ஆரோக்கியமும்" எனும் கட்டுரையில் "அளவுக்கு மிஞ்சியும் பசியில்லாதபோதும் சாப்பிடலாகாது. ஏதாவதொரு ஆகாரத்தை ஆரோக்கியத்திற்குத் தகுந்த, ஆகாரம் என்று சொல்லப்பட்டிருக்கிறதனால் அதைக் கட்டாயப்படுத்தி சாப்பிடாதேயுங்கள். சாப்பாட்டில் மிதமாய் இருக்க வேண்டும்".

இம்மூன்று வகையான இதழ்களின் தமிழ் உரைநடைப் போக்கைக் காணும்பொழுது, ஆயுர்வேத மருத்துவம் பற்றிக்கூறும் கட்டுரையில் 40 விழுக்காடு சமஸ்கிருதச் சொற்களும், கிரந்த எழுத்துக்களும் கலந்துள்ளன. ஏனெனில், ஆயுர்வேத மருத்துவ நூல்கள் சமஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டுள்ளன. எனவே, மொழி மாற்றம் செய்யும்பொழுது ஆயுர்வேத மருத்துவர்களால் மூலமொழியின் தாக்கத்தினை விட முடியவில்லை.

அலோபதி மருத்துவக் கட்டுரையில் வடசொல் மிகுதியாக இல்லை.

மேற்கண்ட இதழ் வெளிவந்த பிறகு 20 ஆண்டுகள் கழித்து, இத்தகு வேறு மருத்துவ இதழ்களின் உரைநடைப் போக்குகளைக் காணும் பொழுதும் அதே போக்கு நீடிப்பது தெரியவருகிறது.

## 1941ஆம் ஆண்டில் உரைநடை ஆயுர்வேத மருத்துவ இதழ்

**க்ஷேமநிதி (1941), ஆசிரியர்: டாக்டர் வெங்கடேசம், டாக்டர் வைத்தியநாத சாஸ்திரி)**

'சிரமமாய் ஆசாரியவிடத்தில் வைத்திய சாஸ்திரத்தை அப்பியாசித்தவனும் அமிருத ஹஸ்தனும், சிகிச்சை செய்வதில் நுட்பமான புத்தியுடையவனும், பேராசையற்றவனும் தேஹ தத்துவ சாஸ்திரம், பதார்த்த சாஸ்திரம், யோக சாஸ்திரம், ரோகியினது சரீர தத்துவங்களை அறிந்து சிகிச்சை பண்ணுகிறவன்தான் மஹா வைத்தியன் அவன்தான் ஈஸ்வரனுக்குச் சமம்".

## சித்த மருத்துவ இதழ்

இதே காலத்தில் வந்த சித்த மருத்துவ ஏடான "தமிழ் மருத்துவப் பொழிலில்" (1941) ஆசிரியர் வடிவேலு முதலியாரின் உரைநடைப் போக்கு:

"எலும்பொட்டி என்றொரு பச்சிலையுண்டு. அடிப்பட்டு முறிந்த எலும்புகளை, தூளாகப் போயிருந்தாலும், ஒன்றாகப் பொருத்தி ஆற்றிவிடுகிறது."

## வடமொழிப் புத்தகங்களே ஆயுர்வேதத்திற்கு ஆணிவேர்

இப்படி உரைநடை மூன்று விதமாக உள்ளதற்குக் காரணங்கள் என்ன என ஆராயும்பொழுது, ஆயுர்வேத மருத்துவத்தைக் கற்க வடமொழி இன்றியமையாது தேவைப்பட்டதையும், மேலும் இம்மருத்துவத் துறையை மேல்குடி மக்களே தொடர்ந்து படித்து மருத்துவம் செய்து வந்ததையும் கருதிப்பார்க்கலாம். பாடப்புத்தகங்களும் வடமொழியிலேயே உள்ளன. அதன் மொழிபெயர்ப்பு, அல்லது கட்டுரைகளில் வடமொழிச் சுலோகங்கள் அப்படியே வடமொழியில் அச்சடிக்கப்பட்டுப் பிறகு கட்டுரை தமிழில் தொடர்கின்றது. 'ஆரோக்கியம்' இதழ், ருக்வேதம், தைத்திரியாரண்யம் போன்றவற்றிலிருந்து எடுத்துரைக்கப்பட்ட வடமொழி வழிபாட்டுச் சுலோகங்களுடனேதான் இதழின் முதல் பக்கம் ஆரம்பமாகிறது. ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகளில் படித்துத் தேற வடமொழி அவசியமாகிறது. இதைத் தொடர்ந்து அம்மருத்துவ இதழ்களைப்

படிக்கவும் அம்மொழியின் துணையின்றி முடியாது என்பது 'வைத்திஃ சந்திரிகா' 'க்ஷேமநிதி' மற்றும் 'கல்பதரு ஆரிய வித்யா விமர்சனை' ஆகியவற்றின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. மொத்தத்தில் வடமொழியை ஆயுர்வேத இதழ்கள் எந்த விதத்திலும் விட்டுக்கொடுக்காது தங்களை அடையாளம் காட்டிக் கொள்கின்றன.

இதைத் தாண்டிச் சித்த மருத்துவ நூல்கள் தமிழிலேயே செய்யுள் வடிவிலே உள்ளதாலும் இம்மருத்துவத்தையே தமிழ் மருத்துவம் என்று கூறுவதாலும் அதை எழுதும் மருத்துவர்களிடம் வடமொழிக் கலப்பு மிகக் குறைவாகவே உள்ளது.

இவ்விரண்டு மருத்துவமுறைகளுக்கும் மாறாக அலோபதி மருத்துவம் ஆங்கிலத்தில் படிக்கப்பட்டுத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுப் பலராலும் எழுதப்படுவதால் ஆயுர்வேத மருத்துவ உரைநடையைப் போல் இல்லாது ஓரளவு வடமொழி கலந்த உரைநடையாகவே உள்ளது.

முடிவாக இம்மூன்று மருத்துவ முறைக்கான இதழ்களின் வாயிலாக நாம் அறிவது, ஆயுர்வேத உரைநடையில் மிகுந்த அளவு கிரந்த எழுத்துக்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன; சித்த மருத்துவத்தில் மருந்துக்கே இவ்வெழுத்துக்கள் உள்ளன; அலோபதி மருத்துவ உரைநடையில் குறைந்த அளவே கிரந்த எழுத்துக்கள் உள்ளன என்பதுதான். தவிர, வடமொழிச் சொற்கலப்பு ஆயுர்வேத மருத்துவத்தில் மிகுந்து காணப்படுவதும் கண்கூடு.

## இன்றைய மருத்துவ இதழ் உரைநடை

இன்றைய காலக்கட்டத்தில் மருத்துவர்கள் இல்லாத ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்படும் புதிய இதழ்களில் ஒரு புதிய நடை தோன்றியுள்ளது.

....இருப்பினும் டிஸ்சார்ஜ் செய்வதற்கு முன் சில கண்டிஷன்களை இவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்'' .... எப்பொழுதும் ஒரு டாக்டரும், அனுபவமிக்க நர்ஸ் ஒருவரும் டூட்டியில் இருப்பார்கள். இவர்களுக்கு உதவியாக வார்டு அட்டண்டரும் இருப்பார்".

(குமுதம் ஹெல்த் ஸ்பெஷல், 2001, நவம்பர், பக்கம் 39)

## உலகமயமாதல் காரணமா?

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பக்காலத்தில் வடமொழி கலந்து எழுதப்பட்ட உரைநடை, தனித்தமிழ் இயக்கத்தினாலும், திராவிட இயக்கங்களின் பேச்சு, எழுத்து வன்மையாலும் மாறியது. இப்பொழுது நல்ல தமிழ் எழுதுவது, பேசுவது என்பது ஒரு மரபாகவே பேணப்பட்டு வருகிறது. இந்த தமிங்கலீஸ் தாக்கம் மருத்துவ இதழ்களிலும், சில நாளேடுகளிலும் மிகவும் போற்றப்படுகிறது. இவற்றைப் பற்றி உலகமயமாதல் என்னும் இன்றைய நிலையில் மொழிப் பயன்பாடு குறித்த போக்கும் செயலும் பலருக்குக் கவலை அளிப்பதாயினும் தவறு என்று ஏற்றுக் கொள்வதில் உடன்பாடு அற்றவர்களாகவே உள்ளனர்.

# மருத்துவ இதழ்களும், கலைச்சொற்களும்

ஆயுர்வேத இதழ்களில் கிரந்த எழுத்துக்கள் மலிந்துள்ளன. ஆங்கில எழுத்தாகிய 'C'க்கு 'ஸி" என்றே எல்லா இடங்களிலும் குறிக்கப் பெறுகிறது. இதுபோலவே சாதாரண சொற்களிலும் கிரந்த எழுத்துக்கள் தாராளமாய் எடுத்தாளப்படுகின்றன. (எ.கா.) ஆஹாரம், (2) ஸுகம், (3) புஷ்டி, (4) ஜீவிதம். இந்தத் தாக்கத்திற்கு ஏன் இம்மருத்துவத்துறையினர் இப்படி ஆட்படுத்தப்பட்டு இருக்கின்றனர் என்பதற்குக் காரணம் அவர்கள் கற்கும் மருத்துவ நூல்களில் உள்ள சமஸ்கிருத சுலோகங்களில் இவ்வார்த்தைகள் உள்ளன. இவை அந்த மொழியின் ஒலியைக் கொண்டு, ஒலி பெயர்ப்பாகச் சொல்லைக் கட்டுரைகளில் எழுதுவதில் மட்டுமின்றிப் பேசும்பொழுதும் கடைப்பிடிக்கின்றனர்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஆரோக்கியம் (1967, பக். 194) இதழில் குழந்தை வளர்ப்பு எனும் கட்டுரையில் உள்ள ஸ்ரீ வாக்படர் எழுதிய சுலோகத்தில்,

> **நித்ராயத்தம் ஸுகம் துக்கம் புஷ்டி சார்ச்யம் பலாபலம்**
> **வ்ருஷதா க்லீபதா ஜ்ஞானம் அஜ்ஞானம் ஜீவிதம் ந.ச.**

என்று உள்ளது. இது எண்ணற்பாலது.

இதே இதழில் "குழந்தையின் நித்திரை" எனும் கிளைத் தலைப்புடன் எழுதப்பட்ட கட்டுரையில்.... தூங்கும்பொழுதும் மத்தியில் தாயின் உடல் ஸ்பரீசம் இல்லாவிட்டால் விழித்துக் கொண்டு அழத்தொடங்கும்" என்ற வாசகம் உள்ளது. இக்கட்டுரையின் தலைப்பு நித்திரை என்று இருந்தாலும் கட்டுரையில் உள்ளே "தூக்கம்" என்ற சொல் உபயோகத்தில் உள்ளதை இத்தொடரின் மூலம் அறிகிறோம். இதுபோலவே ஆயுர்வேத இதழ்களில் (ஆயுள்வேதம் 1967) முறையே

| | | |
|---|---|---|
| ஜீவரசாயனம் | - | Biochemistry |
| க்ஷாரம் | - | Alkaly |
| சல்ய தந்திர பகுதி | - | Surgical Department |

என்ற கலைச்சொற்கள் உள்ளன. இவை இடம்பெறும் இடங்களில் எல்லாம் அடைப்புக் குறிகளுக்குள் ஆங்கிலச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலச் சொல் இல்லாத இடங்களில் வடமொழிச் சொற்கள் இருப்பின் தமிழ்ச்சொற்கள் அடைப்புக் குறிகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

- அஜீரண (செரிமான)
- விஸூசிகை (வாந்திபேதி)
- லிஹாதிஸாரம் (காலரா)
- பரிட்ஷை (சோதனை)

இதுபோலவே க்ஷேமநிதி இதழில் Chemical Energy எனும் சொல்லை அப்படியே ஆங்கிலத்தில் எழுதி அதன் பிறகு ஒலிபெயர்ப்போ அல்லது புதிய சொல்லோ கொடுக்கப்படவில்லை.

மேலும் ஆரோக்கியம் இதழைப் போலவே இவ்விதழிலும் சொற்களும் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. ஸந்தேகம், ஸோப்பு, வஸதி - இக்கட்டுரையில் பெரும்பாலும் 'ச' எழுத்துக்கள் அனைத்திற்கும் 'ஸ' வே உபயோகப்படுத்தப் பட்டுள்ளது.

"ஆயுள்வேத" மாத இதழின் "ஸ்நானமே தேகப்பயிற்சி" எனும் கட்டுரையில் ஒரு கலைச்சொல்லுக்கு வடசொல் உபயோகப்படுத்தப் பட்டாலும் அதன்பின் தமிழ்ச்சொல்லை அடைப்புக்குள் எழுதிய பிறகு ஆங்கிலச் சொல்லும் கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| விஷநாசகாரி (நச்சகற்றி) | - Antidote |
| காமனிவர்த்தினி (காமமுண்டாக்கி) | - Aphordisiac |

சில இடங்களில் நல்ல தமிழ்ச்சொல் கிடைக்காத இடங்களில் நேரடியாகச் சமஸ்கிருதச் சொற்களே கொடுக்கப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| ஔஷதவயஸ்தரவத்ரம் | - | Drescription |
| பலவர்த்திகள் | - | Suppository |
| ரஸக்ரியைகள் | - | Sytracts |

ஆயுர்வேத மருத்துவ இதழ்களுக்கு மாறாகச் சித்த மருத்துவ இதழ்களில் கிரந்த எழுத்துகளைத் தவிர்த்துத் தொடர்கள் எழுதப்பட்டாலும் கலைச் சொற்கள் பெரும்பாலும் வடசொற்களாகவே உள்ளன.

| | | |
|---|---|---|
| Dull | - | மந்த ஒலி |
| Flakes | - | வபாசிம்புகள் |
| Venous Congestion | - | நாளச் சஞ்சயம் |

| | |
|---|---|
| Phymosis | - சிசுன நுனித்தோல் |
| Infection | - நச்சேறி சஞ்சாரம் |
| Resonance | - பிரதி ஒலி |

*முதல் சித்தன் (1966 ஜூன்)*

| | |
|---|---|
| Surgeon | - வற்மானி ரண வைத்தியர் |
| Physician | - வைத்தியர் |
| Remittent Fever | - சந்த சுரம் |

இக்கலைச்சொற்களைக் கண்ணுற்ற பிறகு பலகாலமாகச் சித்த மருத்துவம் ஆயுர்வேதத்தின் ஒரு கிளை மருத்துவம் என்ற ஒரு சாரார் கூற்றுக்கிணங்க இந்தச் சொற்கள் அமைந்துள்ளனவோ என்ற ஓர் ஐயப்பாடு எழுகிறது.

இவ்விரண்டு மருத்துவ இதழ்களைத் தவிர்த்து மருத்துவம் மற்றும் துப்புரவிற்கு என்று வெளிவந்த "வைத்திய கலாநிதி" (1921, செப். அக். நவம்பர்) இதழிலும் கலைச்சொற்கள் வடசொல்லாகவே உள்ளன.

| | |
|---|---|
| Dysmenorrhoea | - ருதுசூலைரோகம் |
| Tumour | - அர்புதம் |
| Uterus | - கர்பாசயம் |
| Constipation | - மலபந்தம் |

ஒட்டுமொத்தமாக ஆயுர்வேத மருத்துவ இதழ்களின் உரைநடையில் உள்ள சொற்களில் கிரந்த எழுத்துக்கள் பெருமளவில் உள்ளதையும், சித்த மருத்துவ இதழ்களின் உரைநடையில் வடசொற்களும் கிரந்த எழுத்துக்களும் தவிர்த்து இருப்பினும் கலைச்சொற்களில் வடசொற்கள் மிகுந்து உள்ளன என்பதையும் இவ்விதழ்கள் வாயிலாக அறியமுடிகிறது.

இதன் காரணம், சித்த மருத்துவம் பரம்பரை பரம்பரையாக நடைமுறைப் பயன்பாட்டு மருத்துவமாக இருந்ததேயன்றி எழுதிக்கற்றுக் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சித்த மருத்துவச் சுவடிகள் பெரும்பாலும் முந்நூறு ஆண்டுகளுக்குள்ளாகவே எழுதப்பட்டுள்ளன. அதாவது, ஆயுர்வேதம் கற்பிக்கப் படுவதைப் பின்பற்றிச் சித்தமருத்துவ நூல்களும் எழுதப்பட்டிருக்க வேண்டும். அப்போது அவர்களுக்குத் தேவைப்பட்ட கலைச்சொற்களை ஆயுர்வேதத்திலிருந்து எடுத்தாண்டிருக்க வாய்ப்புண்டு. தமிழில் பின்னால் அறிமுகப்படுத்தப்பட்ட

அலோபதி நூல்களும் அத்தகு ஆயுர்வேதக் கலைச்சொற்களைப் பயன்படுத்த இரண்டு காரணங்களே உள.

1. அலோபதிக்கு முன்னர் இங்குப் பயன்பாட்டிலிருந்த ஆயுர்வேத மருத்துவக் கலைச்சொற்களை அப்படியே கையாண்டது.

2. அலோபதி மருத்துவத்தை மொழிபெயர்த்தவர்கள் மேற்குல மக்களாக இருந்ததால், அவர்களால் ஆயுர்வேதச் சொற்களை விட முடியாமை.

மருத்துவ இதழ்களைவிடுத்து மருத்துவப் புத்தகங்களிலும், 19ஆம் நூற்றாண்டிலும் (எ.கா.) ஃபிஷ்கிறீனின் (1850) புத்தகத் தலைப்புகள் வடசொற்கள் அல்லதுஆங்கில ஒலிபெயர்ப்புகளுடன் உள்ளன. (எ.கா.) அங்காதிபாதம் கெமிஸ்தம். இதேபோல் கலைச்சொற்களும் 1) இரண வைத்தியம், 2) சடாட்சநரம்பு, 3) கபால நரம்பு, 4) உரோதரித நாத்தொண்டை என வடசொற்களாகவே உள்ளன. இவற்றைக் கண்ணுறும்பொழுது டாக்டர் கிறீனின் மருத்துவப் புத்தகங்கள் ஆயுர்வேத மருத்துவக் கலைச் சொற்களின் துணைக்கொண்டே எழுதப்பட்டுள்ளன என அறியமுடிகிறது.

இவற்றைப் பார்க்கும்பொழுது முதலில் தோன்றியது ஆயுர்வேதமா, சித்த மருத்துவமா என்ற வினாவிற்கான விடையை இந்தக் கலைச்சொற்கள் தருகின்றனவோ என எண்ணத் தோன்றுகின்றது. இக்கருத்துக்கு வலுவூட்டும் விதமாக 'ஆரோக்கியம்' இதழாசிரியர் கூற்றைக் காண்போம்.

## ஆயுர்வேதமே சித்தமருத்துவம்

"ஆயுர்வேதத்தில் விஷபாரத பாஷாணங்கள் சார்ந்த பெரிய பெரிய மருந்து முறைகள் எவளவிருக்கின்றனவோ அதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட தமிழ்மொழியில் இருக்கும் ஸித்த வைத்திய நூல்களில் இல்லையென்பது இரண்டு பாஷையு மறிந்தவர்கட்குப் பிரத்யட்சம்...

சரீர பரிபாஷைகள், குணபாடங்கள், நோய்களின் பெயர்கள், திரவ்யங்களின் பெயர்கள் முதற்கொண்டு ஒவ்வொரு விஷயத்திலும் ஸமஸ்கிருதப் பதங்களே அப்படியப்படியே சித்தர்களால் தங்கள் நூல்களில் சேர்க்கப்பட்டிருப்பதைப் பாருங்கள். 'வடமொழியில்

வகுத்தவாறு உரைக்கிறோம்' என்று சித்தர்களே கூறுகின்றதைக் கவனியுங்கள்....

முற்காலத்தில் திவ் திருஷ்டியுள்ள மஹரிஷிகளின் ஜீவகாருண்யத்தினால் ஆயுள்வேத சாஸ்திரமானது அங்கோ பாகங்களுடன் ஸமஸ்கிருத பாஷையில் முதலில் உபதேசிக்கப்பட்டது. பிறகு ஆப்தர்களான தேரையர், போகர் முதலிய சித்த புருஷர்களில் ஸமஸ்கிருத பாஷையை விசேஷமாய் அறியாத வைத்தியர்கட்கும் வைத்தியம் செய்தற்கு உபகாரமாயிருக்கும் படிக்கும் ஸமஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேதத்தினுடைய தூய சிகித்ஸை முதலிய எல்லா அங்கங்களிலிருந்தும் சிகித்ஸை செய்வதற்கு உபயோகமான மருந்து முறைப் பகுதி மட்டும் தமிழில் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது. ஸூத்ரம், நிதானம், சரீரம், விமானம் முதலிய சாஸ்திர விசாரமான பகுதிகள் தமிழில் முற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டதாகத் தோன்றவில்லை. இதற்குக் காரணங்கள்:- ஸமஸ்கிருதம் தவிர வேறு பாஷைகளில் மேற்படி சாஸ்திர விசாரங்களை வியவதூரம் செய்வது கடினம் ஒன்று. மற்றது முற்காலத்தில் பெரிய வித்வான்கள் சாஸ்திர விசாரம் செய்வதற்கு பாரதத்தில் எல்லா மாகாணங்களுக்கும் பொதுமொழியாக விளங்கியது ஸமஸ்கிருதமே. ஆதலால் மொழிபெயர்க்க வேண்டிய அவசியமில்லாமலுமாயிற்று....

தமிழ்நாட்டில் ஆயுர்வேதம் என்ற பெயரால் முன்பு பிரஸித்தமாயிருந்த வைத்திய சாஸ்த்திரத்திற்கு சித்த வைத்யமென்று புதிய பெயர் மாறினதற்கு காரணம் பிராம்மணர் பிராம்மணரல்லாதார் முதலிய ஜாதிகளுக்குள் பரஸ்பரம் துவேஷத்தையுண்டு பண்ணும் பேதோபாயத்தினால் தங்களுடைய அரசாட்சியை இந்நாட்டில் நிலைநிறுத்தியுள்ள வெளிநாட்டு வெள்ளையர்களுடைய அப்பொழுது இருந்த அரசியல் சூழ்ச்சிதான்." (ராஜமிருங்கம், நடராஜ சாஸ்திரிகள் பக். 10).

# வாசகர்களைப் படிக்கத் தூண்டும் பலவித உத்திகள்

*ரீடர்ஸ் டைஜெஸ்ட்டில்,* I am John's Kidney போன்ற *கட்டுரைகள் உடலுறுப்புகள் தன்னைப் பற்றித் தானே* பேசுவது போல *1980*களில் வெளிவந்த கட்டுரைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. இதைப்போலவே "ஆரோக்கிய தீபிகை"யில் கொக்கிப்புழு தானே தன் கதையைச் சொல்வதைப் போல– "அங்கே (குடலில்) என் வாயினுள் உள் சுவற்றைப் பற்றிக்கொண்டு தொங்குகிறேன்" *(1932-மார்ச், பக். 90)* என்பதும் பிறகு அதே இதழில் **"நாம் வாழும் வாழ்வு"** என்ற கட்டுரை நாடக பாணியில் தொழுநோயைக் கண்டுபிடிக்கும் விதத்தை விளக்கிய பின் அது பாரம்பரிய நோய் அன்று என்று கூறப்பட்டுள்ளதும் சுவையாகவே உள்ளது. அவ் வுரையாடலைக் காண்போம்:

"***மிஸ்டர் ராமானுஜம்:*** *(தனது கோபத்தை அடக்கிக்கொண்டு)* எனது பிள்ளைக்கு பெருவியாதி எவ்வாறு வந்ததென்று எனக்கு ஆச்சிரியமாகவிருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் மூன்று பரம்பரையாய் எனது குடும்பத்தில் ஒருவருக்கும் சர்ம வியாதி வந்ததே கிடையாது. பெருவியாதி என்பது இல்லவே இல்லை.

***டாக்டர் ராமநாத்:*** ஐயா, எனக்கு மிகவும் விசனமாயிருக்கிறது. உமக்கு இந்த விஷயம் செம்மையாய்த் தெரிந்திருக்குமென்று நினைத்தேன். உமது முன்னோர்கள் பெருவியாதியினால் வருந்தியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. உமது பிள்ளைக்குகு பெருவியாதி வந்ததற்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமில்லை. ஜனங்களின் நம்பிக்கை பெருவியாதி பரம்பரையையொட்டியது அன்று. இருந்தபோதிலும் கூட, பெருவியாதி பரம்பரையான வியாதியல்லவென்பது வைத்திய சாஸ்திர துணிவு, என்பது ஒன்று." *(1932, நவம்பர்).*

இதே வடிவில் கொசுக்கள் பேசிக் கொள்வதைப்போல கட்டுரை அமைக்கப்பட்டுக் கொசு முட்டையிலிருந்து கொசுவாக மாறும் பரிணாமத்தை **"மில்லிக் கொசுவின் ஆச்சரியமான**

**வீரச்செயல்கள்"** *(1931, டிசம்பர்)* என்ற கட்டுரையில் விளக்கப் பட்டுள்ளது.

"தாய்க்கொசு – நான் இன்றிரவு உன்னை கிராமத்துக்குள் அழைத்துக் கொண்டு போய் கொசு பார்க்க வேண்டிய விசித்திரங்களையெல்லாம் காட்டுகிறேன்" என்றது. 'ஆஹா, உடனே புறப்படலாமா?' என்று மில்லி கூச்சலிட்டது. "இல்லை, இல்லை நாம் இருட்டுகிறவரைக்கும் காத்திருக்க வேண்டும், இப்போது உறங்கப்போ! இரவெல்லாம் விழித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கும்" என்று தாய் சொல்லிற்று. அப்படியே மில்லிக் கொசு ஒரு இலையின் கீழ் படுத்துக்கொண்டது. "ராத்திரி நமக்கு வேடிக்கைகள் இருக்கின்றனவோ, என்று அதே சிந்தனையாய் இருந்தது. முதல்முதல் ஒரு சிறு முட்டையாய் குட்டைத் தண்ணீரில் நான் மிதந்து கொண்டிருந்ததாக அம்மா சொன்னாள். அது எனக்கு ஞாபகமில்லை. '3' வாரங்களுக்கு முன் நடந்த விஷயம் யாருக்குத்தான் ஞாபகம் இருக்கும்? பிறகு நான் வளர்ந்து ஒரு புழுகு மாதிரி இருந்தேனாம். பிறகு நான் உருண்டை வடிவமாகி இப்போது என் சகோதர சகோதரிகள் செய்வதுபோல் தண்ணீரைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தேனாம்''....! என்று கட்டுரை தொடர்கிறது.

சாதாரண உரைநடையைவிட்டு இதுபோன்ற நாடகம், கதை, தன்னைப் பற்றித் தானே கூறுவது போன்ற உரைநடைகள் படிப்பவருக்கு அலுப்புத் தட்டாமல் இதழ்களைப் படித்துப் புரிந்து கொள்ள வகை செய்துள்ளன.

## இருமொழிக் கட்டுரைகள்

ஒவ்வா உணவு, ஒவ்வா மருந்து ஆகியவற்றால் ஏற்படும் பக்கவிளைவுகள் மற்றும் கேடுகள் குறித்துத் தொடர்ந்து மருத்துவ இதழ்கள் எழுதி வந்துள்ளன. இவற்றிற்கு ஆசிரியரே தக்க கருத்துக்களைக் கட்டுரை வடிவில் கொடுக்காவிடினும், உடலுக்கு ஏற்படும் கேடுகள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் வேற்று மொழி இதழ்களில் வந்திருந்தாலும் அவற்றை மொழிபெயர்த்து அல்லது ஆங்கிலத்தில் இருப்பின் ஆங்கிலத்திலேயே அச்சிட்டு அதன் தொடர்ச்சியாக, விளக்கம் தமிழில் தொடரும்படியான இருமொழிக் கட்டுரைகள் பல இதழ்களில் காணக்கிடக்கின்றன. (எ.கா. ஆரோக்கியம், க்ஷேமநிதி, ஆரோக்கிய தீபிகை).

# தமிழில் முழு மொழிபெயர்ப்புடன் வந்த அலோபதி நலவாழ்வு: ஆராய்ச்சிக் குறிப்புகள்

"குறைந்த வயதில் திருமணம் செய்து கொண்டவர் வாழும் ஆண்டைவிட கூடுதலாக 25 வயதிற்குமேல் திருமணம் செய்து கொள்கிறவர்கள் வாழ்கின்றனர்" என்ற மருத்துவக் கணக்கீட்டை வேத தத்துவ அறிவு எனும் கட்டுரை மூலம் "மானிட இன்பம்" (1948, பிப்.) தெளிவுபடுத்தியுள்ளது.

இதுபோலவே சுவையுள்ள குறிப்பு எனும் தலைப்பில் "அங்கு (பட்டணத்தில்) வாழ்கின்றவர்கள் கிராமப்புற மக்களைவிட சுற்றுச் சூழ்நிலை காரணமாக அதிக விழுக்காடு மரணமடைகின்றனர்" என்னும் கட்டுரையும் வெளியிடப்பட்டுள்ளது.

## இதழில் பல மொழிகளில் பலவிதமான கட்டுரைகள்

'வைத்தியசந்திரிகா" இதழ் ஓர் ஆயுர்வேத மருத்துவ இதழாக இருப்பதால் **ஆயுர்வேத தர்சனம்** எனும் தலைப்பில், சுசுருதர் - சுலோகங்களை அப்படியே வடமொழியில் வெளியிட்டு அதன் கீழே கட்டுரை தமிழில் தொடர்கிறது. ஆனால் சுலோகத்திற்கு உரை கீழே எழுதப்படவில்லை. இதேபோல் **திரிதோஷ சித்தாந்தம்** என்ற கட்டுரை, யோகரத்னாகரம் என்ற நூலின் தொடர், சுசுருதர் சுலோகக் கட்டுரை ஆகியவை இருமொழி வழக்கில் உள்ளன. இவ்விதழைப் பார்க்கும்பொழுது வடமொழி தெரியாதவர்கள் இவ்விதழை வாங்குவது பயனில்லை என்றே தெரிகிறது.

## மருத்துவர்களின் குறைகளை அரசுக்குத் தெரிவிக்க ஆங்கிலத்தில் மட்டும் கட்டுரை

இவ்விதழில் சில கட்டுரைகள் மிகவும் முக்கியமான காலக்கட்டத்தில் அரசு நிர்வாகிகள் மருத்துவர்களின் குறைகளை அறிந்து கொண்டு ஆவன செய்யவேண்டிய காலத்தில்

மருத்துவர்களின் கூட்டறிக்கையை ஆங்கிலத்திலேயே அறிவித்துள்ளது.

(எ.கா.) "அரிஸ்டாக், அசவாஸ்" போன்ற மருந்துகளுக்குப் போதைப் பொருள்களை மருந்துடன் சேர்க்கும் நிலையில் அவற்றிற்குக் கடுமையான நிதிமுறையும் அதிக கலால் வரியும் விதித்திருப்பதைக் குறைக்கச் சொல்லி வேண்டுகோளை ஆங்கிலத்தில் அறிவித்துள்ளது. கட்டுரையை ஆங்கிலத்தில் வெளியிட்டு அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளது.

## ஆங்கிலத்தில் மட்டும் பொதுநலக் கட்டுரைகள்

க்ஷேமநிதி இதழ் வைத்திய சந்திரிகாவைப் போலவே Warning of vital statistics, value of Life Insurance போன்ற சில பொதுநலக் கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் மட்டும் வடித்துள்ளன. ஆரோக்கியம் இதழும் Change a painful process எனும் கட்டுரையைப் போல ஆங்கிலத்திலேயே பல கட்டுரைகளைப் பல தடவைகள் வெளியிட்டுள்ளது. (1967, பக். 58), (1967, ஆகஸ்ட், பக். 128).

ஒட்டுமொத்தமாக வைத்திய சந்திரிகா, ஆரோக்கியம், க்ஷேமநிதி போன்ற ஆயுர்வேத இதழ்களைப் படித்துப் புரிந்துகொள்ள வடமொழியும், ஆங்கிலமும் தேவை. ஆகையால் தமிழை மட்டும் அறிந்தவர்கள் இவ்விதழ்களைப் படிக்க முடியாத நிலையே உள்ளது.

## பண்டைய மருத்துவ நூல்களின் தொடர் கட்டுரைகள்

மருத்துவ இதழ்கள் தங்கள் தங்கள் மருத்துவ முறைகளைத் தூக்கிப் பிடிக்கவும் அம்முறைகளை நாட்டில் பரப்பவும், மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், மருத்துவத்தைப் படித்தவர்களும் தங்களின் அறிவைமேம்படுத்திக் கொள்ளவும் உதவியுள்ளன. எடுத்துக்காட்டாக "வைத்திய சந்திரிகா", யோகரத்னாகரம், சரஹ ஸம்ஹிதா, சுசுருத ஸம்ஹிதா போன்ற நூல்களைத் தமிழ் - வடமொழி ஆகியவற்றில், இதழ்களில் பிரசுரித்து மற்றவர்கள் படிக்க உதவியுள்ளது. இதுபோல் "தமிழ் வைத்தியக் களஞ்கியம் அச்சுக்கு வராத தமிழ் வைத்திய நூல்களையும், சரீரத்துவங்களையும்... வைத்திய நூல்களில் சொல்லப்படும்

அரும்பொருள்களுக்கு விரிவுரையையும்.... தமிழ் மருத்துவ வளர்ச்சிக்குரிய இதர விடயங்களையும் தாங்கி வரும்" என்று கூறி இதழைச் செவ்வனே நடத்தியுள்ளது. சித்த மருத்துவக் கட்டுரைகள் தொடர்கட்டுரைகளாக வந்துள்ளன.

## நூல் மதிப்புரைகள்

இதழ்கள் மற்றும் நூல்களுக்கு மதிப்புரை எழுதி அவற்றின் விற்பனையைக் கூட்ட அப்புத்தகம் மற்றும் இதழின் விலையுடன் விலாசத்தையும் பொதுவாக வெளியிட்டுள்ளன. "க்ஷேமநிதி" (1941 ஜனவரி) இதழின் ஓர் மதிப்புரை மூலம் இதை நாம் நன்குணர முடிகிறது.

"சென்னையிலிருந்து வெளிவரும் 'ஜோதி' என்ற பத்திரிகையின் பொங்கல் மலர் வரப்பெற்றோம். உலகில் கலையின்ப உணர்ச்சிக்கு முக்கிய காரணமாகிய பத்திரிகை மண்டலத்தில் 'ஜோதி' அதன் பெயருக்கேற்ப ஜோதியாக விளங்க அறிகுறியாய் அதன் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. சொல்நயமும், பொருள்நயமும் கொண்ட சிறியவுரைகளே பாமரர்களுக்கும் கலையின்பம் தழைக்கக் காரணமாகுமென "ஜோதி" தனது இனிய உரைமொழிகளால் நிருபிக்கின்றது. நாகரீக வலையில் சிக்கி பல வழிகளிற் பாடுபட்ட பணத்தை விரயமாக்கும் பற்பல நண்பர்களும், யாவரும் இதுபோன்ற கலைக் களஞ்சியமாகும் பத்திரிகைகளையும் சிறிது பொருட் செலவழிப்பின், தமக்கும், தம் நாட்டிற்கும், தமிழன்னைக்கும் சிறந்த தொண்டு செய்தவராவர்" என்று எழுதியுள்ளது.

மருத்துவப் புத்தகங்களுக்கு மட்டுமன்றி அத்வைத விளக்கம் (6 பாகம்) என்ற சமயம் சார்ந்த புத்தகங்களுக்கு மதிப்புரையும் 'வைத்தியம் மலர்' இதழ் எழுதியுள்ளது.

மதிப்புரைகள் ஹெல்த் & பியூட்டி, பெமிலி ஹெல்த் போன்ற இதழ்களில் தற்பொழுது தொடர்ந்து வெளிவருகின்றன

## படங்கள்

மருத்துவக் கட்டுரைகளில் உடலியக்கம், உடற்கூறு அறுவை, மற்றும் பலவிதமான செய்முறை விளக்கங்கள் கட்டுரை வடிவில் இருந்தாலும் இவற்றைப் புரிந்து கொள்ள வரைபடம்,

புகைப்படங்கள் பெரிதும் உதவுவன. இதனை அனுசரித்து "ஆரோக்கியம்" (67 ஜூன்), இதழ் மூச்சுப்பிடிப்பு, தசைப்பிடிப்பு ஆகியவற்றைத் தவிர்க்கச் சில உடற்பயிற்சிகளை எழுதி அதற்குத் தகுந்த மாதிரி கோடு வரைபடங்களும், மூலிகை மணியின் இதழில் மூலிகை குறித்த வரைபடங்களும் வந்துள்ளன. இதுபோலவே "ஆரோக்கிய தீபிகை"யில் வெளிநாட்டு இதழ்களிலிருந்து கட்டுரைகள் மொழிபெயர்த்துத் தமிழில் வரும்பொழுது அதிலிருந்து எடுக்கப்பட்ட படங்களில் உள்ளே உள்ள உட்குறிப்புகள் ஆங்கிலத்திலேயே காணப்படுகின்றன. "மானிட இன்பம்" கட்டுரைகளில் பாலுறுப்புகளின் உடல்கூறை விளக்கும்பொழுது வெறும் வரைபடங்களே உள்ளன. நல்வழியில் புகைப்படம், வரைபடம் ஆகியவை இல்லாத கட்டுரைகளே இல்லை என்ற அளவுக்குப் பக்கத்துக்குப் பக்கம் படங்கள் வெளிவந்துள்ளன. இவை அனைத்தும் 20ஆம் நூற்றாண்டு இதழ்களாகும். ஆனாலும் 'ஜனவிநோதினி'யிலும் 'தமிழர் நேசனி'லும் மருத்துவம் குறித்து வெளிவந்த கட்டுரைகளில் புகைப்படங்களும் 19ஆம் நூற்றாண்டின் கடைசி மாதங்களில் இடம் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் இன்றைய நிலையில் 1990க்குப் பிறகு வரும் இதழ்களில் வண்ணப்படங்கள் எங்கு வேண்டுமானாலும் வரலாம் என்றபடி, படங்கள் ஆண்டு, மாத மலர்களில் பெருமளவில் காணப்படுகின்றன.

## அட்டைப் படம்

'ஆரோக்கியம்' இதழில் தன்வந்திரி போன்ற ஆயுர்வேத மருத்துவத் தொடர்புடையவர்களின் வரைபடங்கள் உள்ளன. "நல்வழி" இதழில் ஆரம்பக்காலங்களில் சிந்தனையைத் தூண்டும் விதமாக முதல் இதழிலேயே "அப்பா பிள்ளாய் நீர் இம்மதுபானத்தை குடித்து என்னைப் போலாகாதிருக்கும்படி அதனைத் தொட்டு ருசியாதே" என்று அறிவுரை கூறும் படம் உள்ளது. "மூலிகை மணி" தவறாது ஒவ்வொரு இதழிலும் ஒரு மூலிகையை அறிமுகம் செய்கிறது. சித்தர் செயலில், (1987) "வேண்டுகோள், தங்கள் இதழால் நடத்தப்பட்ட கூட்டம், மாநாடு அவைகளின் புகைப்படங்களுடன் முக்கிய கட்டுரையின்

தலைப்புகளும் உள்ளன. ஹெல்த் பியூட்டி, பேமிலி ஹெல்த் போன்ற இதழ்களில் இன்றைய நிலையில் பலவிதமான மனதைக் கவரும் வண்ணம் குழந்தை மற்றும் பெண்களின் படங்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காட்சியளிக்கின்றன. மருத்துவன், சித்தமருத்துவம் மற்றும் சித்தர் கருவூலத்தில் அட்டையில் படத்திற்குப் பதிலாக உள்ளடக்கம் உள்ளது. வைத்திய சந்திரிகா, ஆரோக்கிய போதினியில் படத்துடன் பொருளடக்கம் காணப்படுகிறது.

# நிறுவனங்களும் இதழ்களும்

இதழ்களை நிறுவன வெளியீடுகள், தனியார் வெளியீடுகள் எனப் பிரித்துக் கொண்ட நிலையில் ஆயுர்வேதம், சித்த, அலோபதி ஆகிய மூன்று மருத்துவ முறை இதழ்களில் சில நிறுவன வெளியீடுகளாக வந்துள்ளதை அறியமுடிகிறது.

## நிறுவன வெளியீடு

1. ஆயுர்வேதம் - வேலூர் - தென் இந்திய ஆயுள்வேதா வைத்திய சங்கம்
2. க்ஷேமநிதி - யூனிவர்சல் மெடிகல் அசோசியேஷன்
3. சித்தர் களஞ்சியம் - அகில இந்திய சித்த வைத்திய சங்கம்
4. ஆரோக்கிய மார்க்கம்- அரசு சுகாதாரத்துறை
5. குடும்பநலச் செய்திக்கதிர் - அரசு குடும்ப நல இயக்குநரகம்
6. ஸ்ரீ தன்வந்திரி - சென்னை ஆயுர்வேதக் கல்லூரி
7. வைத்திய சந்திரிகா - தமிழ்நாடு ஆயுள்வேத மஹாமண்டலம்
8. வாய்ஸ் ஆப் ஹோமியோபதி - தமிழ்நாடு ஆயுள்வேத மஹாமண்டலம்
9. ஆரோக்கியம் - ஆயுர் வேத ஸேவாசமிதி
10. நல்வழி - செவந்டே- அன்வன்டிஸ் கிருத்துவ மத சபை சார்பாக
11. தமிழ் மருத்துவப் பொழில் - இந்திய மருத்துவப் பாடசாலை வெளியீடு

பண்டிட் நடராஜ சாஸ்திரியால் 1955 ஜுன் மாதம் ஆரம்பிக்கப்பட்டது 'ஆரோக்கியம்' இதழ். 1956 செப்டம்பர் இதழ் வெளியிட இயலாது நிறுத்தப்பட்டுப் பிறகு ஆயுர்வேத சேவாசமிதி மூலம் 1982 வரை வெளிவந்தது. இதனால் அக்காலக் கட்டத்தில் தனிப்பட்டவரைக் காட்டிலும் ஒரு இதழைப் பொது நிறுவனமே சிறப்பாக நடத்த முடியும் என்பதை நிரூபித்துள்ளதை அறிய முடிகிறது.

தனிப்பட்டவர்கள் சிலசமயம் இதழ்கள் தோன்றுவதற்குப் பணம் கொடுத்து உதவியுள்ளனர். இதைப் பற்றிய குறிப்பு 'சித்தர் களஞ்சிய'த்தில், ''இதழ் தோன்றுவதற்கு துணையாக அருந்தொகையுதவிய பெருந்தகைச் செல்வர்கள்" என்று குறிப்பிட்டு 19 பேர்களை வெளியிட்டுள்ளது.

மொத்தத்தில் நிறுவன இதழ்கள் மூலம் சங்க நடவடிக்கைகள், தேர்தல் அறிக்கைகள், மாநாடு நடக்கும் இடம், மற்றும் தலைவர்கள் உரை போன்றவை அந்நாட்களில் மருத்துவர்களின் நடவடிக்கைகளை அறிந்து கொள்ள வசதியாக அமைந்துள்ளன.

## அரசு செய்திகள்

இந்நிறுவன வெளியீடுகளில் இரண்டு, அரசு சார்புடையவை. இதில் "ஆரோக்கிய மார்க்கம்" என்ற இதழ் சுகாதாரம் துப்புரவை போதித்து நோயைத் தடுத்துக் கொள்ளவும்; "குடும்ப நலச் செய்திக் கதிர்" என்ற இதழ் குடும்பக் கட்டுப்பாடு செய்திகளுடன் நலவாழ்வு முறைகளைப் பொதுவாக எடுத்துக்கூறி மொத்தத்தில் அரசு செய்திகளை வெளியிடவும் மக்கள் மற்றும் தொடர்பு இதழாகப் பணியாற்றியுள்ளது.

## சமயக் கட்டுரை

'நல்வழி' - ஓர் மருத்துவ இதழாக இருப்பினும் ஆரம்பக் காலங்களில் நேரடியாகக் கிறித்துவ சமயச் சார்பான கட்டுரைகளுடன் வெளிவந்த இதழாகும். இந்த இதழ், தொடர்ந்து வெளிவருகிறது. இக்கால இதழ்களில் நேரடியாகக் கிறித்துவ சமயம் சார்ந்த கட்டுரைகள் அமையாமல் நல்லொழுக்கத்தைப் போதிக்கும் வகையில் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருகின்றன.

## சங்கச் செய்திகள்

க்ஷேமநிதி இதழை நடத்தும் சங்கத்தின் உறுப்பினராக இருப்பின் அவ்விதழ் இலவசமாக அனுப்பப்படுவதுடன் அச்சங்கச் செய்திகளையும் வெளியிட்டுள்ளது. மேலும் 1941இல் புதுக்கோட்டை தனி சமஸ்தானமாக இருந்தபோது அந்நகரில் நடைபெறும் நிகழ்ச்சிகள், பந்தாட்டம், வங்கிக்கூட்டம், மரணம், தர்பார் விளம்பரம், தேனீர் விருந்து, பத்திரிகைக்காரர்கள் கூட்டம் மற்றும் பொதுக் கூட்டம் பற்றிய செய்திகளும் வெளிவந்துள்ளன.

"வைத்திய சந்திரிகா" இதழ் - ஆயுர்வேத மஹாமண்டல நிர்வாகக்கூட்டம், ஜில்லா கூட்டம், தேர்தல் அறிக்கை மற்றும் அத்துடன் தலைவர் தேர்தலுக்கான ஓட்டுப் போட விண்ணப்பம், வைத்திய செய்தி (கிராம வைத்திய வசதி திட்டம்), தீர்மானம், கிராம வைத்தியர் மாநாட்டு அழைப்பு, இடம், மாநாட்டு நடப்பு, உரைகள், மஹாமண்டலத்தின் புத்தக வெளியீடுகள் ஆகியவை அடங்கியுள்ளன.

'தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி''யில் ''வைத்திய சந்திரிகா''வைபோல் ஹோமியோ சங்கத்தின் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

'ஆரோக்கியம்' இதழ் ஆயுர்வேத சேவாசமிதியினால் வெளியிடப்பட்ட நிலையில் 'வைத்திய சந்திரிகா'வைப்போல் அவ்வளவாகச் சங்கச் செயல்பாடுகளை வெளியிடாவிட்டாலும் சில நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பிடும் செய்திகள் உள்ளன. ஏனெனில் ஆசிரியர் குறிப்புப்படி 'வைத்திய சந்திரிகா' வாசகர்கள் வைத்தியர்கள். ஆனால் 'ஆரோக்கியம்' ஆயுர்வேதத்தை மக்களிடம் பரப்பவே வெளியிடப்பட்டு வருவதாகக் கூறுகிறார் (1953 டிசம்பர்). இதன் காரணமாகத்தான் வைத்திய சந்திரிகாவிற்கு ஆசிரியராகப் பணியாற்றிய பண்டிட் நடராஜ சாஸ்திரி அதிலிருந்து விலக 'ஆரோக்கிய' இதழைத் தொடங்கச் செய்து ஆசிரியராகப் பணியாற்றி யுள்ளார்.

## விளம்பரங்கள்

### 1. இதழ்களின் தேவைக்கான விளம்பரம்

'வைத்திய மலர்' (1952 ஜூன்) 'தமிழ்நாடு இந்திய மருந்து உற்பத்திக் கம்பெனியாரால் வெளியிடப்படும் இதழாகும். இதில் விசேஷ வைத்திய கிரந்தத்தில் உள்ள ஒரு பாட்டைப் பிரசுரித்துத் 'தேவை' என்று விளம்பரம் செய்து அப்பாட்டின் தாத்பரியம், அவுஷத முறை - தேவையென அறிவித்தும் அடுத்த இதழில் வெளியிடப் பதார்த்த விபரம் தேவை என்று மற்றொரு அறிவுப்பும், 'அடுத்த இதழ் விளம்பரம்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளன. இதன் மூலம் வாசகர்களுக்குச் சொல்ல வேண்டிய மருத்துவம் ஆசிரியர் அல்லது ஆசிரியர் குழுவுக்குத் தெரிந்திராத பொழுது தேவையானவற்றை வாசகர் மூலம் அறிந்து வெளியிடுவது என்பது ஒரு புதிய யுத்தி. இதன்மூலம் வாசகர், இதழுடன் நேரடித் தொடர்பு கொண்டு உறவு வலுப்பட ஏதுவாகிறது. இதுதவிர வெளியிட வேண்டிய கட்டுரைக்கு வேண்டிய செய்திகள் இல்லாத பொழுது இதழின் மூலம் என்ன செய்தி தனக்கு வேண்டும் என்று விளம்பரப்படுத்தப் பெறுவதும் இவ்விதழின் பொறுப்புணர்ச்சியைத் தெரிவிக்கிறது.

### 2. இதழ் ஆசிரியரின் விளம்பரத்திற்கு இதழ்கள்

இதற்கு மாறாக "ஹோமியோபதி", மற்றும் "ஹோமியோ பிரகடனமும்" முறையே இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டிலிருந்தும், ஹானிமேன் ஹோமியோ இன்ஸ்டிடியூட்டிலிருந்தும் ஒரு நிறுவனத்தின் மூலம் வெளிவந்ததுபோல் தோன்றினாலும் அவை ஒரு தனியாரை அதாவது அதன் ஆசிரியரான மருத்துவரைச் சார்ந்தவை. இந்த மையங்களின் மூலம் தங்கள் மருந்துகள் மற்றும் ஆலோசனை நேரங்கள், தங்கள் வெளிநாட்டுப் பயணம், தாங்கள் நடத்தும் மாநாடு மற்றும் அதில் நிகழ்த்திய உரை மற்றும் புகைப்படம் ஆகியவற்றை வெளியிடப் பயன்படுத்தியுள்ளனர். இத்துடன் "ஹோமியோ மருத்துவ நேர்முக வகுப்புகள் 'ஸ்டெதாஸ்கோப்' கருவியின் உபயோக முறை, இஞ்சக்ஷன் சிகிச்சை முறை, இரத்த அழுத்த சோதனை, சிறுநீர் பரிசோதனை, மருத்துவமனை பராமரிப்பு, சிறிய அறுவை முறை, மகப்பேறு, தனிமனிதனின்

சுகநலம், சமுதாய சுகாதாரம் ஆகியவைகளுக்கு விசேஷப் பயிற்சி பல ஆண்டுகளாக நடைபெறுவதைப் போல் இவ்வாண்டும் மே மாதம் 2ம் தேதி துவங்கி கும்பகோணத்தில் தொடர்ந்து நடைபெறும்" என்ற அறிவிப்பும் (1960 பிப்ரவரி) வெளிவந்துள்ளது. இவ்விளம்பரங்களின் மூலம் ஹோமியோ மருத்துவர்களும் நோயின் மூலத்தைக் குறுகிய காலத்தில் அறிந்து கொள்ள முயன்றுள்ளனர் என்பது அறியவருகிறது.

ஆனால் இப்பொழுது ஹோமியோ மருத்துவம், ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவம் சென்னையில் முறைப்படி $5\,^1/_2$ ஆண்டுகள் பட்டப்படிப்பாகக் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

### 5. தனியார் விளம்பரம்

'சித்தர் களஞ்சியம்', "ஆரோக்கியம்", "அகஸ்தியன்", இதழ்களில் கட்டுரைகள் முடிந்த பிறகு கடைசிப் பக்கங்களிலே விளம்பரங்கள் வந்துள்ளன. ஆனால் 'வைத்திய மலர்', 'வைத்திய சந்திரிகா', 'க்ஷேமநிதி', 'ஸ்ரீதன்வந்தரி' போன்ற இதழ்களின் ஊடேயும் தனியார் விளம்பரங்கள் உள்ளன. 'ஹெல்த்' என்ற அடைமொழியுடன் கூடிய இதழ்களில் விளம்பரங்கள் அதிகமாக உள்ளன. இவ்விளம்பரங்களே இவ்விதழ்களை வியாபார நோக்கில் நடத்தத் துணை புரிகின்றன.

'குடியரசு' போன்ற அரசியல் வார இதழ்கள் அந்நாள் வழக்கப்படி முதல் பக்கத்தில் முழுபக்க விளம்பரங்களை வெளியிட்டதைப் போன்று 'ஹோமியோபதி', 'வாய்ஸ் ஆப் ஹோமியோபதி' இதழ்களிலும் விளம்பரங்கள் அட்டை அளவில் சரிபாதி இடம்பெற்றுள்ளன.

## உரைநடை பத்தியமைப்பு

'வைத்திய மலர்', 'அகஸ்தியன்' இதழ்கள் ஒரே பத்தியாகவும், 'ஸ்ரீதன்வந்திரி', 'தமிழ் மருத்துவப்பொழில்', 'சித்தர் களஞ்சியம்', இரண்டு பத்திகளாகவும் உள்ளன.

## வாசகர் கேள்வி–பதில்

பல மருத்துவ இதழ்கள் வினாவிடையைத் தொடர்ந்து வெளியிட்டுள்ளன. "வைத்தியமருந்துகள் விஷயமாய் 'வைத்திய

மலரின்' சந்தாதாரர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் 'வைத்திய மலர்' பத்திரிகை மூலமாகவே பதில் அளிக்கப்படும்" என்று அமைந்துள்ளது.

'வைத்திய சந்திரிகாவில்' (1947க்குப் பிறகு) தபால்பெட்டி எனும் தலைப்பில் நோயுற்றவர் தன் நோயின் அறிகுறிகளைக் கூறியெழுதிய கேள்விகளுக்குத் தகுந்த மருத்துவம் கூறப்பட்டுள்ளது.

இதுபோலவே 'நல்வழி' இதழும் "கேள்விக்குப் பதில் என்று சந்தாதாரரின் வைத்திய, சுகாதாரக் கேள்விகளுக்கு டாக்டர் எச்.ஸ். மெங்கல் இந்தப் பகுதியில் பதில் அளிப்பார்" என்று அறிவித்துள்ளது.

இம்மருத்துவருக்குப் பிறகு டாக்டர் ஏசுவடியான் (1950) போன்ற அலோபதி மருத்துவர்களைக் கொண்டு, வைத்திய சந்திரிகாவைப் போலவே நோய் அறிகுறிகளுக்குத் தகுந்த அலோபதி மருந்துகள் கடைகளில் கிடைக்கும் பெயருடன் கூறப்பட்டுள்ளன. இவை ஆங்கில எழுத்துக்களில் அடைப்புக்குறிக்குள் கூறப்பட்டுள்ளன.

ஆசனத்தைச் சிறப்பித்துக் கூறும் இதழான 'நல்வாழ்வு' (1856 ஜுன்) இதழில் "சந்தேகங்களுக்குப் பதில்" எனும் படி ஆசனங்கள் குறித்த கேள்விகளுக்குப் பதிலும், "ஆர்கனான்" ஹோமியோ இதழில் வினாவிடை மற்றும் ஹோமியோபதி மித்திரனில் கேள்வியும் பதிலும் என்ற பகுதிகளும் வெளிவந்துள்ளன. இதுபோலச் "சித்தர் செயல்", "சித்தர் கருவூலம்" ஆகிய இதழ்களிலும் உடல் நலவியல் தொடர்பான வினாக்களுக்கு விடை கூறப்பட்டுள்ளன.

மூலிகைமணியில் 'நோயும் - மருந்தும்' எனும் தலைப்பில் கேள்வி பதில் வந்துள்ளது. இதில் வாசகர் உடல்கோளாறுகளைக் கேள்வியாகக் கேட்க, இவ்விதழ் ஆசிரியர் பதிலைச் சித்த மருத்துவ முறைப்படி கூறியுள்ளார்.

## வினாவிடையால் பயன் யாருக்கு?

இவ்விதழ்களின் வாசகர்களால் கேட்கப்படும் வினா-விடையின் மூலம் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இன்றிச்

செலவின்றி மருத்துவம் கிடைக்கக்கூடும். இத்துடன் நோய்களைக் குறித்த செய்திகளை அறிந்ததன் விளைவாக அவர்கட்கு மருத்துவ விழிப்புணர்வு ஏற்படவாய்ப்பாகவும் மற்றவர்களுக்கு வழிகாட்டுவதாகவும் அமையும்.

## மருத்துவர்களுக்கான பதில்

இதற்கு மாறாகக் கும்பகோணம் டாக்டர் வி.ஆர். மூர்த்தியையும் திருவாரூர் டாக்டர் எஸ். சீனிவாசனையும் கொண்டு முறையே வெளிவந்த 'ஹோமியோபதி' (1946)யும், 'ஹோமியோ பிரகடனமு'ம் (1958) டாக்டர்களின் உபயோகத்திற்கு மாத்திரம் என்ற அறிவிப்புடன், ஹோமியோ மருத்துவம் புரியும் டாக்டர்களிடமிருந்து வரும் இவ்விதழ்கள், கேட்கப்படும் கேள்விகளுக்குத் தகுந்த மருத்துவமும், அம்மருத்துவர்கள் கொடுத்த மருந்துகள் நோயாளிக்குப் பலனளிக்காதபோது எந்தவிதமான மருந்துகள் பலனளிக்கும் என்று பதிலில் கூறிச் சந்தேகத்தை முழுவதுமாக நிவர்த்தி செய்துள்ளன.

புதிதாக மருத்துவத் தொழிலை ஆரம்பிக்கும் மருத்துவர்கள் தங்களால் கொடுக்கப்பட்ட மருந்து சிறப்புற வேலை செய்யாத காலத்தில் இது போன்ற கேள்வி பதில் மூலம் தங்கள் அறிவை வளர்க்கும் விதமாக அனுபவம் வாய்ந்த மருத்துவர் தகுந்த சிகிச்சையைக் கூறுவது, அவர்களை மேலும் வளப்படுத்திக் கொள்ள ஏதுவாக அமைகிறது.

# மருத்துவ இதழ் ஆலோசனைக் குழு

"பேமிலி ஹெல்த்", "ஹெல்த் & பியூட்டி" ஆகிய இதழ்களின் முதல் பக்கத்தில் ஆலோசனைக் குழுவில் உள்ள பல்துறை மருத்துவர்கள் பெயர்கள் 15க்குமேற்பட்டு இடம்பெற்றுள்ளன. இருப்பினும் 'விவேக சிந்தாமணி' மருத்துவம் தொடர்பான கட்டுரைகளை ஆலோசனைக் குழுவிடம் கொடுத்துச் சரிபார்த்து வெளியிட்டதைப் போல இவ்விதழ்கள் பணியாற்றுவதாக அறியப்படவில்லை.

''விவேகசிந்தாமணி''யில் பொதுச்சுகாதாரம் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் 'அறிவு பரப்புவதற்கான பார்வைக்கு அனுப்பப்பெற்று அவர்களின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு வெளியிடப்பட்டுள்ளன. ஆலோசனைக் குழுவில் அப்போதைய ஸானெடரி கமிஷனர், டாக்டர்கள், வித்தியா இலாக்கா தலைவர் போன்றோர் இடம் பெற்றிருந்தனர். இதன் காரணமாகச் சரியான செய்தி மக்களைச் சென்றடைந்துள்ளன என்பது அறியவருகிறது.

## ஆண்டுச் சந்தா புதிய செய்தி

ஐந்து நட்சத்திர தங்கு விடுதிகளில் தங்கிவிட்டு போகும்பொழுது மதியம் 12 மணிக்கு மேல் இருக்கவேண்டிய அவசியம் இருப்பின் மேலும் ஒரு நாள் வாடகை வாங்கும் பழக்கம்போல், "கல்பதரு ஆரிய வித்யா விமர்சனை" இதழ், "இதில் எப்பொழுது சேர்ந்தாலும் அவ்வருட சித்திரமாக சஞ்சிகை முதல் கணக்கிட்டு பணம் அனுப்பவும்" என்று அறிவித்துள்ளது. ஆனால் "சித்தர் களஞ்சியம்" எல்லோரும் வழக்கத்தில் கைக்கொள்வது போலச் "சந்தா செலுத்தியதிலிருந்து ஒரு வருஷத்திற்கு கணக்கு வைக்கப்பட்டு, பத்திரிகை அனுப்பி வைக்கப்படும்" என்று கூறியுள்ளது. "இப்படி அனுப்பப்பட்ட ஆண்டு சந்தா முடிந்த

பின்னர் இதழைத் தொடர்ந்து வி.பி.பி.யில்தான் அனுப்புவோம்" என்ற அறிவிப்புகளும் உள்ளன.

## மாற்றுப் பத்திரிகை

சந்தா கட்டி இதழ்களைப் பெறுவதுபோல் சில இதழ்கள் தங்கள் இதழ்களை மற்றைய இதழ் வெளியீட்டாளர்களுக்கு அனுப்பி "மாற்றுப் பத்திரிகைகளை" (Exchange) பெற்றுள்ளன. "அகஸ்தியன்" (1923, பிப்ரவரி) 13 இதழ்களை உள்நாட்டிலிருந்தும், கொழும்பு (இலங்கை), சிங்கப்பூர், இரங்கூன் போன்ற வெளி நாடுகளிலிருந்து தமிழ் இதழ்களையும் மற்றும் Ideal Teacher, The Muslim போன்ற ஆங்கில இதழ்களையும், பாஷா பிரகாசம், உன்னிரம்பூரி யோகக்ஷேமம் போன்ற மலையாள இதழ்களையும் பெற்றுள்ளது. மேலும் பெற்ற இதழ்கள் குறித்து விமர்சனமும் பெரும்பாலான இதழ்களில் வந்துள்ளன. (எ.கா.) ஆயுள்வேதம் இதழில் 'அகஸ்தியன்' இதழைப் பற்றிய விமர்சனத்துடன் இதழை எப்படிப் பெறவேண்டும் என்பதற்கு அவ்விதழின் விலாசத்தையும் கொடுத்துள்ளது.

இதழின் விமர்சனம், "இஃது வாதம், வைத்தியம், ஞானம், யோகம் முதலான பெரிய விஷயங்களை தன்னுள்ளாக்கிக் கொண்டு, பொதுவாக மக்களுக்கு ஸமரச போதனை செய்யும் ஒரு உயர்ந்த தமிழ் மாதாந்திரப் பத்திரிக்கை".

"இதற்கு சந்தாதாரர்களாகச் சேர விரும்புபவர்கள்

பத்திராதிபர் 'அகஸ்தியன்'
கொட்டாரக்கரை, திருவாங்கூர்.

என்றெழுதுவும்" என்று கூறியுள்ளது.

மாற்றுப் பத்திரிகைகளைப் பெற்றதன் பலனாக ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவரும் மருத்துவ அறிவியல் செய்திகள் தமிழ் இதழ்களில் அவ்வப்பொழுது இடம்பெற்றுள்ளன.

இவ்விதழ்களைப் பெற்ற இதழ்கள் அவ்விதழ்களின் சிறப்புகளைக் குறித்து விமர்சனம் செய்துள்ளன. அகஸ்தியன் (1923, ஜன.) இதழில் 7 இதழ்களுக்கான விமர்சனம் இடம்பெற்றுள்ளது.

அப்படி விமர்சனம் எழுத முடியாத நிலையில் வந்த இதழ்கள் குறித்த விபரம் எழுதி மதிப்புரை முறையே பின்னர் வெளிவரும் என்றும் குறிப்பிட்டுள்ளது. அகஸ்தியனைப் போலவே ஆயுள்வேதம் (1924) இதழ்களிலும் பெறப்பெற்ற இதழ்களுக்கும் விமர்சனம் வந்துள்ளது.

மற்றுமொரு சிறப்பு, சில இதழ்கள் தங்கள் இதழ்களைக் குறித்து மற்றைய இதழ்களில் வெளிவந்த விமர்சனங்களைத் தங்களுடைய இதழ்களிலும் வெளியிட்டுள்ளன. இதுபோல் வெளிவந்த க்ஷேமநிதியைப் பற்றிய மதிப்புரை.

| | | |
|---|---|---|
| **மதிப்புரை** | "ஜோதி" 7.3.1941 க்ஷேமநிதி | *"இது வைத்திய விஷயங்களும், கிராமச் சுகாதார விஷயங்களும் அடங்கிய ஒரு மாதப் பத்திரிகை. எளிய நடை" வருஷ சந்தா ரூ. 1 - 8, க்ஷேமநிதி காரியாலயம், வடக்கு ராஜவீதி, புதுக்கோட்டை.* |

## மாற்றுப்பத்திரிகையைச் சரியாக அனுப்புக

க்ஷேமநிதியில் ஒரு விளம்பரம் (1941 ஆகஸ்ட்) "சகோதர பத்திரிகாசிரியர்கள் கவனிக்க. நாம் நமது பத்திரிகையை பல சகோதரர் பத்திரிகைகளுக்கு மாற்றுப் பத்திரிகையாக வெகுகாலமாக அனுப்பி வருகிறோம். சிலர் தங்களதை சரியாக நமக்கு அனுப்பி வருகிறார்கள். சிலர் அனுப்புவதே இல்லை. ஆசிரியர்கள் தாங்கள் தங்கள் பத்திரிக்கையை தவறாமல் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது பத்திரிக்கை உலக மேம்பாட்டிற்கோர் இன்றியமையாத வழக்கு என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்'' என்று தன் ஆதங்கத்தை வெளியிட்டுள்ளது.

# சித்த மருத்துவத்தைத் தழைத்தோங்காது தடுத்த ஆயுர்வேத, அலோபதி மருத்துவத் துறைகள்

தமிழகத்தில் வெளிவந்த / வெளிவரும் சித்த மருத்துவ இதழ்கள், அலோபதி மருத்துவ இதழ்கள் மற்றும் ஆயுர்வேத மருத்துவ இதழ்களை நடத்தியவர்கள் துறைசார் அறிவு மோதலில் ஈடுபட்டுள்ளனர் என்பதை மருத்துவ இதழ்கள் வழி அறிய முடிகிறது.

## 1. அலோபதியின் அறிமுகம்

தமிழகத்தில் வெளிவந்த 'ஆரோக்கிய போதினி' சுதேச மருத்துவமும், மருந்து தயாரிப்பு முறைகளும் அலோபதி மருத்துவத்தின் அறிமுகத்தால் மாறி வருகின்றன என்பதை எடுத்துக் கூறுகின்றது. "ஆரோக்கிய போதினி" (1908) "மாத இதழ் தன் முதல் இதழிலேயே தமிழக மருத்துவமுறைகள் எப்படி ஆங்கிலேயர்கள் வருகைக்குப் பின் மாறிவிட்டது என்பதனை "சாதாரண வைத்திய ஞானம்" என்ற கட்டுரையில் படம் பிடித்துக் காட்டுகிறது. மருத்துவ அறிவியல் அறிவு மக்களிடம் பரவுவதை இங்கிலீஷ் வைத்தியர்கள் தடுப்பதையும், தாமாகவே மக்கள் நோய்க்கு மருந்து தயாரிக்கும் தன்மையை இழந்து வருவதையும் மக்களிடம் மருத்துவ அறிவியல் அறிவு பரவவேண்டும் என்பதையும் ''அந்தோ முக்கியமான அவயவங்களின் தன்மையையும், அவைகளை உபயோகிக்க வேண்டிய முறைகளையும் பற்றிப் பேசுவதும், எழுதுவதும், மரியாதைக் குறைவென்று ஜனங்கள் மதிப்பதினாலும், டாக்டர்கள் தம் அறிவை ஜனங்களுக்கு போதியாமற்பொதிந்து வைத்துக் கொள்வதினாலும் சகலவிதமான தொல்லைகளும் ஜனங்களுக்கு உண்டாகின்றன. இந்த நிலைமை மாறி ஜனங்கள் நற்போதனை பெற்றுச் சுகமடைந்து திடகாத்திரமாய் வாழ்வார்களாக" என்று கூறுகிறது.

## 2. ஆயுர்வேதத்தின் நுழைவு: வருந்தும் சித்த மருத்துவ இதழ்

ஆயுர்வேதத் தத்துவத்தின் நுழைவு சித்த மருத்துவத்தை வலுவிழக்கச் செய்யும் என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் "தமிழ் வைத்தியக் களஞ்சியம்" கட்டுரை வெளியிட்டுள்ளது. அக்கட்டுரையின் பகுதிகள் வருமாறு:

"நம் சகோதர ஆயுர்வேதத்தை சமஸ்கிருத பாஷையிலுள்ள வைத்தியத்திலிருந்து செய்வோர் வட இந்தியாவிலுள்ள பிரயாசையில் ஸ்தாபித்திருந்ததை இப்போதிரண்டு வருட காலமாய் சமஸ்கிருத பாஷா ஞானமும், தலைநகரமாக சென்னைக்கு மாற்றி ஆயுர்வேத வைத்தியத்தைப் பரப்புவதற்குரிய முயற்சிகளை வெகு பலமாய் செய்து வருகிறார்கள். திராவிட வைத்திய தொழிலாளராகிய நாமோ உள்ள பெருமையைக் கைவிட்டிருப்பது இழிவன்றோ..." என்ற சித்த மருத்துவமுறை ஆதரவாளர்களைத் தட்டி எழுப்பி உண்மையை விளக்கி உள்ளது.

இக்கருத்துக்கு உற்சாகமூட்டும் விதமாகச் சித்த மருத்துவத்தின் பெருமையை, தொன்மையை விளக்க "வைத்தியப் பகுதி" எனும் கட்டுரையில "சித்த வைத்தியத் தொன்மையும் வடநூல் ஆயுர்வேதத்தின் தற்காலிகமும்" என்ற தலைப்பில் "சித்தர் களஞ்சியம்" (1936, அக்.) "வடநாடு ஒரு காலத்தில் சமுத்திரமாக இருந்ததென்றும் திருப்பதிக்கும் குமரிக்குமிடையேயிருக்கும் நிலப் பரப்பு மற்ற நிலங்களைவிட 300 மைல் கனமுடையதாக விருந்ததனால், அந்நிலம் சுமார் 40 கோடி ஆண்டுகளுக்கு முன்னேயே ஆக்கப்பட்டதெனக் கூறுவர்" என்று எழுதி தமிழகத்தில் தோன்றிய சித்த மருத்துவமே தொன்மை வாய்ந்தது எனத் தன் தொடர் கட்டுரையில் விளக்கியுள்ளது.

## 3. சித்த மருத்துவம் புறக்கணிப்பு: சித்த மருத்துவ இதழின் கண்டனம்

"அகிலத்துக்கே தாயகமான தமிழ் சித்த வைத்தியமும் தமிழ்நாட்டில் தனித்து வளர்ந்துவரவேண்டும். இனியும் எவர் தயவுக்கோ தாட்சண்யத்துக்கோ இதர வைத்தியத்தையும் குறிப்பாக

வடமொழி வைத்தியத்தையும் தமிழ்நாட்டில் கலந்து தமிழ் சித்த வைத்தியத்தை பறிமுதல் செய்யக்கூடாது. தமிழ் மாகாணத்திலமையும் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடங்களும் தனித்தமிழ் சித்த வைத்தியப் பாடசாலையாகவே ஏற்படவேண்டும். ஏனெனில் இன்றைய சென்னை இந்திய மெடிக்கல் ஸ்கூலிலேயே ஆரம்பித்த கால முதல் தமிழ் சித்த வைத்திய தொகுதிக்குச் சலுகையும் ஆதரவுமில்லை. தாயில்லாப் பிள்ளையை மனமில்லாத மாற்றாந்தாய் வளர்த்த மாதிரி இந்திய வைத்தியத்தின் வளர்ச்சியிலும் குறிப்பாக வடமொழி ஆந்திர ஆயுர்வேத வைத்திய வளர்ச்சியில் அந்தரங்க அபிமானமுள்ள பேராசிரியர்களின் அதிகாரத்திற்கும், கீழே தாயற்ற சலுகையற்று தமிழ் சித்தவைத்தியம் அங்கு ஒரு மூலையில் உறங்குகிறது. ஸ்கூலை அமைத்த பனங்கல் அவர்களை வாய் ஓயாது வசை பாடியவர்கள்தான் அதை பெரும்பகுதி செல்வாக்குடன் அனுபவிக்கிறார்கள்" என்று "வைத்திய மலர்' (1952, ஆகஸ்ட், செப். பக். 15), கூறுவது அன்றைய சித்த மருத்துவர்கள் எப்படி இந்திய மருத்துவக் கல்லூரியில் தகுந்த ஆதரவு இன்றி இருந்தனர் என்பதனைப் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

## 4. வீழ்ச்சியை நோக்கிச் சித்தமருத்துவம்: வருந்தும் 'சித்தன்' இதழ்

சித்த மருத்துவத்துறை வளர்ச்சிப் பாதையில் செல்லாமல் வீழ்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லுவதைத் தடுக்கும் முறைகள் என்ன என்பதைப்பற்றி சித்தமருத்துவ இதழ்கள் செய்திக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன.

சித்த மருத்துவத்தைப் பரப்ப, முன்னேற்றத் தடைகள் என்ன என்பதை விளக்குகிறது 'சித்தன்' (1966) இதழ்.

"நமது ஒற்றுமைக்குறைவினாலும் இடைப்பட்ட ஆங்கிலேயரின் ஆட்சிக்கால அடக்குமுறைகளினாலும் நமது வரையறுக்கப்பெற்ற மருத்துவச் சிறப்பினை வெளி உலகம் அறிந்து அதற்கு தலை சாய்க்காத நிலை ஏற்பட்டுவிட்டது... தன்னால் இயன்ற அளவு நம் தமிழ் முன்னேற்றத்திற்கென பாடுபடுவதற்

கென்று இன்று ‘முதல் சித்தன்’ தோன்றியுள்ளான்” என்று தன் முதல் இதழில் சுதந்திரத்தினால் மாறுதல் ஏற்படப் போகும் வாய்ப்பினைக் கூறுகிறது. இரண்டாவது தடையாகக் கூறப்படுவது (நந்தி, 1962) “சித்த மருத்துவம் ஆயுள்வேதத்தின் பகுதி என்று நிலவியுள்ள தவறான கருத்தை மாற்றும் தீவிர முயற்சி செய்ய வேண்டும்” என்பது ஆகும்.

இவ்விதழ்கள் அனைத்தும் உள்நாட்டு மருத்துவம் ஏன் சிறப்படையவில்லை என்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்த காலக் கட்டத்தில் சித்த மருத்துவம் படிக்கும் எல்.ஐ.எம். (LIM) என்ற 3 ஆண்டுப் படிப்பை அரசு நிறுத்திவிட்டது.

இந்த நிலையில் (LIM சித்தா) சார்பாக நடந்த மாநாடு குறித்த செய்தி வைத்திய சந்திரிகா (1953, ஜனவரி) இதழில் வெளிவந்துள்ளது.

“ராஜ்யத்தில் 12,000 பேர் எஸ்.ஐ.எம் பதிவு செய்துள்ளனர். அவசியமானால் ஞாபகமூட்டும் பயிற்சிகளை அளித்து அவர்களைக் கிராமத் திட்டங்களில் சேர்த்துக் கொண்டால் ராஜ்யத்தின் சுகாதாரத்துக்குத் திட்டமிடுவதில் அதிக முன்னேற்றம் காணப்படும்” என்று தலைமை உரை நிகழ்த்திய மாயூரம் டாக்டர் எஸ்.ஸ்ரீனிவாசன் வலியுறுத்திப் பேசியுள்ளார்.

இப்படி வேலையற்று ஏன் உள்ளார்கள் என்பதற்கு ‘வைத்தியமலர்” (1952) தன் தலையங்கத்தில்,

“சென்னை இந்திய மெடிக்கல் ஸ்கூல் பனங்கல் அரசர் ஏற்படுத்திய ஆயுர்வேத டிஸ்பென்சரிகளிலும் ஆயுர்வேத எல்ஐஎம் களால்தான் நிறைக்கப்பட்டிருக்கிறது. இப்போதே எல்.ஐ.எம். சித்தா வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது. ஆகவே ஆயுர்வேத டிஸ்பென்சரியை சித்தா டிஸ்பென்சரிகளாக மாற்றி சித்தா எம்ஐஎம்களுக்கும் பிஐஎம்களுக்கும் இடமளிக்க வேண்டும். ஆரியர்க்கடிமையாயிருப்பதைக் காட்டிலும் எந்தவகையாலும் பிரசனம் தேடுவது அல்லது மடிவது மேலாகும்” என்று எழுதியுள்ளது.

## 5. சித்த மருந்துகள் விலை குறைவு

இதைத் தொடர்ந்து எல்ஜஎம் (சித்தா) மருத்துவர்களுக்கு ஏன் வேலை கொடுக்கவேண்டும் என்பதை, 'நம் மருந்து நமக்கு உதவும், சித்த மருந்து நபர் 1க்கு 3பைசா - 6 பைசா வரையே ஆகும். மேலும் அலோபதி மருத்துவர்களுக்கும் சம்பளம் அதிகம்" என்று கூறுகிறது.

சித்த மருத்துவர் எவ்வளவு சம்பளம் வாங்கினார்கள் என்பதைத் "தமிழ் மருத்துவப் பொழில்" (1941) மூலம் அறியமுடிகிறது. "எல்ஜஎம் மருத்துவர்க்கு ரூ. 60 சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது" என்று கூறியுள்ளது.

# LIM (சித்தா)களுக்கு யார் இடைஞ்சல்

டாக்டர் குருசாமி முதலியார் இந்திய வைத்திய LIM மாநாட்டினைத் தொடங்கி வைத்து உரையாற்றியபொழுது "LIMகளுக்கு பரம்பரை வைத்தியர்களே இடைஞ்சல். இத்துடன் மேநாட்டு முறையை அப்பியாசிப்பவர்களும் உங்களைக் குறைகூறி வருகின்றனர். இதற்கு நீங்கள் ஆராய்ச்சி அடிப்படையில் ஈடுபட இந்திய முறையை வெகு சீக்கிரம் விஞ்ஞான உலகம் வியக்கும்' என்று கூறுகிறார். (வைத்திய சந்திரிகா, 1952).

இம்மாநாட்டிற்குப் பின்னர் பண்டித பி.எஸ். ராமசர்மா தலைமையில் தமிழ்நாடு ஆயுர்வேத மஹாசம்மேளனம் நடைபெற்றது. அதில் இந்திய வைத்திய LIM மாநாட்டுத் திறப்பாளர் டாக்டர் குருசாமி முதலியார் பேச்சுக்குப் பதில் அளித்துத் தன் தலைமை உரையில்,

"(சித்தா) மருத்துவர் ஏன் அவர்கள் மருத்துவ முறையைக் கையாள்வதில்லை. மேலும் பரம்பரை வைத்தியர்களுக்கு எந்தவித செல்வாக்கும் இல்லை. இத்துடன் சித்த மருத்துவர்கள் LIM (சித்தா) அம்மருத்துவம் தழைக்க ஏன் தங்கள் மருந்துகளையே கையாள்வதில்லை" என்று கேட்டு அவர்களைக் குறை கூறிப்பேசிய பின், தொடர்ந்து ஆங்கில மருத்துவத்திற்கும், ஆயுர்வேதத்திற்கும் உள்ள தன்மைகளைக் கூறி எது உடலுக்கு உகந்தது என்று மேலும் தன் உரையில் கூறுகிறார்.

"சிலர் இந்திய வைத்தியம் எதற்காக? ஆங்கில வைத்தியமே போதுமே என்று கூட வீண் வம்பு பேசுகிறார்கள். வம்பளக்கிறவர்களுக்கு தத்துவம் அறிய வேண்டிய அவசியம் இல்லை. தினந்தோறும் ஹோட்டல் ஆகாரம் உண்டே பழகிய இந்நாட்களில் அன்புடன் சுத்தமான முறையில் தயார் செய்து

ஆரோக்கியத்திற்கு உகந்தபடி அளிக்கப்படும் வீட்டுச் சாப்பாட்டில் ருசி குன்றிப் போவது சகஜந்தானே. மனிதன் கூடிய வரையில் இயற்கைப் பொருள்களை நம்பியிருப்பதுதான் என்றைக்கும் பாதுகாப்பான முயற்சியாகும். முற்றிலும் செயற்கை முறையிலேயே தயார் செய்யப்படும் மேநாட்டு வைத்திய முறைகளை அநேகமாக பெரிய இயந்திரங்களின் உதவியில்லாமல் கடவுளால் அளிக்கப்பட்ட இயற்கைப் பொருள்களாலேயே நோய் நீக்கும் வழியில் செல்லும் நித்யமான ஆயுர்வேதத்திற்கு எவ்விதம் சமமாக கருத முடியும்?" என்று கூறியபின்,

உரையில் முடிவாக,

"அரசு டாக்டர்களை எடுத்துவிட்டு ஆங்கில வைத்தியம் சிலகாலம் பழகிய டாக்டர்களை தயார் செய்யும் யோசனையையும் கைவிட்டு விட வேண்டும்" என்று கூறி இக்கருத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக இவ்வுரைகளின் மூலம் சித்த மருத்துவர்களுக்கும் ஆயுர்வேத மருத்துவர்களுக்கும் உள்ள வேலைவாய்ப்புப் பிரச்சினைகளையும் சுதேசி மருத்துவத்தைத் தழைக்கவிடாது எப்படி ஆங்கில மருத்துவம் நுழைந்தது என்பதையும் இவ்விதழ்கள் மூலம் அறியமுடிகிறது.

## அலோபதி மருத்துவ எதிர்ப்பு

அலோபதி மருத்துவ எதிர்ப்புக் கருத்துக்களைச் சித்த, ஹோமியோ மருத்துவ இதழ்கள் வெளியிட்டுள்ளன.

"வைத்தியமலரில்" (1952 ஆகஸ்ட்) "ஏ.டி.எஸ். (ATS) ஊசி போட்டு எம்.எல்.ஏ. மரணம்" என்ற பெட்டிச் செய்தியில் "இவ்வூசியைப் போட்டபின் அம்மருந்தினால் ஏற்பட்ட அதிர்வு (shock) சாவுக்குக் காரணமாக அமைந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளது.

இதுபோல அலோபதியில் ஆன்டிபயாடிக் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்திற்கு வந்த நிலையில் "எல்லா வியாதிகளையும் குணப்படுத்த முடியாத மருந்தாக உள்ளது. இது

ஓர் சிறந்த மருந்தல்ல, மருத்துவமுமல்ல" என்பதை "'ஹோமியோ மித்திரன்" (1957) ஆர்யோமைசின், பென்சிலின் அவ்வளவு அபூர்வமானதல்ல; நிமோனியா வியாதி உள்ள பலருக்கு ஸல்பனாமைடுகளாலோ, பென்சிலினாலோ ஒரு குணமும் ஏற்படவில்லை" என்று எழுதியுள்ளது.

மேலும் அலோபதி மருத்துவத்தில் எக்ஸ்ரே எடுக்கும் வழக்கம் தீமையானது எனச் சுட்டிக்காட்டும் ஆயுர்வேத இதழின் கருத்து வருமாறு:

ஆண்டிற்கு இருபத்தொன்பதாயிரம் மக்கள் எக்ஸ்ரே எடுப்பதன் காரணமாக உயிர் இழக்கிறார்கள். "அவசியமில்லை என்றால் எக்ஸ்ரே எடுத்துக் கொள்ளாதே.... ஜலமும், காற்றும் தூய்மை கெட்டுப் பரவலாக நோயுண்டாக்குவதுபோல பல ஆண்டுகளில் நம்மிடம் சிறுகச் சிறுகப் பாயும் இக்கதிரும் பேராபத்தை விளைவிக்கலாம்" என்று வாசகர்களை 'எக்ஸ்ரே அவசியமா' எனும் கட்டுரை மூலம் "ஆரோக்கியம்" எனும் ஆயுர்வேத இதழ் (1967 நவம்பர்) எக்ஸ்ரேயினால் ஏற்படும் பக்கவிளைவுகள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் அலோபதி மருத்துவத்தில் மிகக் குறைந்த அளவு சில பக்கவிளைவுகள் ஏற்படுவது உண்டு. இதன் காரணமாகச் சில உயிர்ச் சேதங்களும் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவற்றை ஆங்கில முறை தவிர்த்த மற்றைய மருத்துவ இதழ்கள் குறை கூறிச் சாடி உள்ளன.

# சித்தமருத்துவத்தில் மேலைமருத்துவம்

அலோபதி மருத்துவம் தமிழகத்தில் காலூன்றியபின் ஒவ்வொரு துறைக்கும் ஆங்கிலப் புத்தகங்கள் வெளிவந்து எம்.பி.,பி.எஸ். படிக்கும் மாணவர்களுக்கு அம்மருத்துவத்தைக் கற்றுணர உதவின. இதில் உள்ள நோய்களின் அறிகுறிகள் சித்த மருத்துவ நூல்களில் உள்ளனவா? என்று செய்யுள் வடிவில் உள்ள சித்த மருத்துவ நூல்களில் குறிப்பிடுவனவற்றைக் கண்டறிந்து அவற்றின் ஒற்றுமையை விளக்கி உள்ள "தமிழ் மருத்துவப் பொழில்" (1943, பிப்.) என்ற இதழில் உள்ள கட்டுரை, சித்த மருத்துவத்தின் தொன்மையை விளக்குவதாக உள்ளது.

ஒப்புநோக்கு என்ற கட்டுரையில் இதுவும் அதுவா? என்ற கேள்விக்குறியிட்டுக் கண் மருத்துவ மாணவர்கள் படிக்கும் "பார்சன்" எனும் கண் மருத்துவப் புத்தகத்தில் உள்ள அறிவியல் உண்மை, எப்படி "அகஸ்தியர் நயனவிதி ஐந்நூறு" என்ற நூலில் உள்ளது என்பதை எதிரும் புதிருமாகச் செய்யுளின் பொழிப்புரையுடன் சுழல் வண்டெரிதல் (Vitreous Opacites) விளக்கப்பட்டுள்ளது. இவ்வொப்பு நோக்கு ஒரே இதழின் (9 1943, பிப்ரவரி) முதல் பக்கத்திலும், மற்றும் எட்டாம் பக்கத்திலும் உள்ளது.

இது, 'அகத்தியர் நயனவிதி ஐந்நூறு' என்னும் நூலினை செய்யுள் வழியாக விளக்கப்பட்டுள்ளது.

பறக்கும் கண்ணில் பூச்சிபோல்
பார்க்கு மிடங்க ளிற்றோற்றும்
உறக்கந் தனிலு மவ்வடைவே
ஓடித் திரிதல் போல்காணும்
துறக்குங் கூசம் புகைத்திருக்கும்

சுடரைப் பார்க்கில் பலவிதமாம்
பிறக்குஞ் சுழல்வண் டெரிதலென்று
பேசி யிருப்பார் பெரியோரே.

(பொ.ரை) பார்க்கின்ற இடங்களிலெல்லாம் பூச்சி பறக்கிறது போலத் தோன்றும். கண் கூசும், பார்வை புகைச்சலாம்; விளக்கைப் பார்த்தால் பலவிதமாய்த் தோன்றும். இக்குணங்கள் கண்டால் சுழல் வண்டெரிதல் என்று பெரியோர் சொல்வர் என்று ஒரு பக்கத்திலும் அதற்கு எதிர் பக்கத்தில் ஆங்கில வடிவமும் உள்ளது.

இதன் மூலம் இன்றைய அலோபதி சார்ந்த குறிப்புகள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது. இதன் மூலம் நம் மருத்துவ முறையின் தொன்மையையும், ஏற்றத்தையும் நினைத்துப் பார்க்க வியப்பாக உள்ளது.

# சித்தர் பாடல்களில் உடற்கூறு கருத்துக்கள்

"புவ மையம் ஆக்கினையாகும்" (வைத்தியசதகம்)

"உச்சிக்குக் கீழே உண்ணாவுக்கு
மேல் நிதம் வைத்த விளக்கு...."
(சித்தர் வாலைக்கும்மி)

"கண்ணுக்கு மூக்கடியோ காதோர
மத்தியத்தில் உண்ணாக்கு மேலேறி
(அழுகிணிசித்தர்)

'அவியாமல் அணையாமல் மரணத்தின் பிடியில் சிக்காமல் ஆக்கினையிலிட்ட விளக்கு ஏற்றிய தீபம்'

"உண்ணாவுக்கு மேல் நிதம்
வைத்த விளக்கு எரியுதடி; அவியாமல்
எரியுது ஞானப் பெண்ணே. (வாலைக்கும்மி)

இவையனைத்தும் பிட்டியூட்டரி சுரப்பியைக் குறிப்பதாகக் கூறி இதற்குத் தகுந்த கலைச்சொல்லாக **ஆக்கினைச் சுரப்பி** என்று 'முதல் சித்தன்' (1966 ஜுன்) இதழ் பாட்டுக்கள் வாயிலாகத் தெளிவுபடுத்தியுள்ளது.

இக்கட்டுரையின் மூலம் உடற்கூறு இயல் அலோபதி மருத்துவ முறைப்படி பிட்டியூட்டரி எனும் நாளமில்லாச் சுரப்பி எங்கு உள்ளது என்பதைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ் நூல்களில் சித்தர்கள் கூறியுள்ளது வியப்பாக உள்ளது.

## மறைபொருளாக இருந்த சித்தமருத்துவம்

'சித்தர் களஞ்சியம்' (1934, அக்டோபர்) "நூற்கள் வெளியீடு" என்னும் தலைப்பில் போகர்இரத்தின வைப்பு 36, திருவள்ளுவர்

ஏணியேற்றம் 200 மற்றும் சத்துரு சம்மாரம் ஆகியவற்றின் பகுதிகள் தொடராக வெளியிடப்பட்டு அவற்றில் எவ்வளவு பாட்டுக்கள் கிடைத்துள்ளன, இக்கையேடுகளைக் கொடுத்து உதவியவர் யார் என்ற விபரத்துடன், செய்திகள் இடம்பெற்றுள்ளன. "திருவள்ளுவர் ஏணியேற்றம் 200, இது 110 பாட்டுகள் மாத்திரம் கிடைத்திருக்கின்றன. கையேடு உதவியவர் வைத்திய ரத்தினம் சி.ச. முருகேச முதலியாரவர்கள். "சென்னை" என்று எழுதி, அதன்கீழ் குறிப்பு என்பதில் ''ஏணியேற்றம் இருநூறாயிருந்தாலும் நூத்திப்பத்துப் பாட்டே கிடைத்திருப்பதால், இதனுடைய வேறு பிரதி யாரிடமிருந்தாலும், உதவலின் அவர் பெயரோடே வெளியிடப்படும்" என்று விளம்பரம் செய்துள்ளது. "இவ்வேடுகள் பரம்பரையாக இரகசியமாக வைக்கப்பட்ட போதிலும் மகா சித்தர்கள் கருணை கொண்டே வெளிப்படுத்தப் பட்டது. இதை ஓதுவார் நற்பேறெய்துவ ரென்பது உண்மை'' என்ற வாக்கியங்களுடனும், அருணகிரிநாதரின் 'ஓம் அரகர நமசிவாயாய....' என்ற தொடருடனும் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சித்த மருத்துவத் திங்களிதழ் மறைபொருளாக உள்ள சித்த மருத்துவச் செய்திகளை உலகறிய வெளிக்கொணர வைத்து அதன் மூலம் பாமரரும் பயனடைய வழி வகுத்துள்ளது. இதன் மூலம் "பரிபாஷையில்தான் சித்த மருத்துவம் கற்றுக்கொள்ள முடியும்" என்ற கொள்கை தகர்க்கப்பட்டுள்ளது.

## திருத்திய சித்த மருத்துவச் சுவடிப் பதிப்பு – வெளியீடு

"தமிழ் மருத்துவப் பொழிலில்" (1941, ஜனவரி, பிப்ரவரி) பல சித்த மருத்துவச் சுவடிகளின் திருத்திய பதிப்புகள் ஒவ்வோர் இதழிலும் தொடராக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை வைத்திய ரத்தினச் சுருக்கம், தேரையர் பொருட்பண்பு, கவுசிகர் குழம்பு ஆகியவை.

# அறுவைச் சிகிச்சையின்றி உடலைக் காக்கும் சுதேசி மருந்துகள்

## பவுத்திரம் (Fistula)

பவுத்திரம் எனும் புரைக்கு அலோபதி முறையில் அறுவைச் சிகிச்சைதான் மருத்துவமாகும். ஆனால் இதற்குச் 'சரபேந்திர வைத்திய முறை' கூறும் (வைத்திய சந்திரிகா, 1952, பக். 11) பவுத்திர ரோக சிகிச்சை எனும் கட்டுரையில்,

"சீழ் வற்றிய பின் புங்கம் வேர்பட்டையைத் தண்ணீருடன் இழைத்துப் பவுத்திர புண்ணில் போடவும், புரைகளினுள்ளேயும் செலுத்திவிடவும். அவ்விடத்தில் புங்கங்காயை நறுக்கி வைத்தும் ஒரு துணியினால் கட்டிவிடவும் பவுத்திரம் தீரும்" இதுபோன்ற 4 வித சிகிச்சை முறைகள் கூறப்பட்டுள்ளன.

## ராஜப்பிளவை (Carbuncle)

"பிளவை கொல்லி என்றொரு பச்சிலை உண்டு. மிக பயங்கரமானதும் மனிதனுடைய முடிவிற்கே அநேகமாய் உண்டாகும் பக்கப்பிளவை, உச்சிப்பிளவை, ராஜப்பிளவை முதலிய பிளவைகளை உபத்திரமின்றிச் சௌக்கியப்படுத்துகின்றன" (தமிழ் மருத்துவப்பொழில், 1943, ஜனவரி பக். 7).

# அலோபதி மருத்துவத்தினால் தீராத நோய்க்கு சுதேசி மருந்து

### புற்றுநோய்

குடல்புற்றிற்கு: "சிவனார்வேம்பு மெழுகினுள் துணை மருந்தாகத் தாமிர செந்தூரம் கலந்த ஆறுமுகச் செந்தூரம் தாளரச சம்பந்தமான பதங்கள் வைத்துக் கொடுக்கலாம்."

### குடும்பக் கட்டுப்பாடு

"செம்பருத்தம்பூவை எலுமிச்சம் பழத்து விதையுடன் கலந்து அரைத்து உண்டுவர மலடியாவாள். இதைக் காணும் பொழுது இதுபோன்ற மருத்துவம் சிறப்பாக அமையும்பொழுது நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு எவ்வளவு உதவக்கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது". (நந்தி 1973, டிசம்பர்)

இது தவிர சித்த மருத்துவம் மணி மந்திரத்தையும் மருந்துடன் உள்ளடக்கியது என்பதற்கொப்பக் கட்டிகள் முதலியவற்றிற்குக் கை கண்ட மந்திரம் சொல்லப்பட்டுள்ளது.

### காலரா

காலரா நோய்க்கு Musta kadivadi என்ற மருந்து விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது. (தன்வந்திரி, 1923).

இதுபோல இந்நோய்க்கு மருத்துவம் வைத்திய மலரில் (1952 ஜுன்) கூறப்பட்டுள்ளது. மற்றும் 'உதயதாரகை'யில் அகஸ்தியர் வைத்தியமுறையில் காலராவிற்குச் சொல்லப்பட்ட மருந்தைப் பற்றிய ஆங்கில வடிவம் வெளிவந்துள்ளது. ஆரோக்கியத்தில் (1967, பிப்.) காலராவிற்கு மருத்துவம் குறித்த கட்டுரையில் விளக்கமறக் கூறப்பட்டிருந்த நிலையில் மார்ச் இதழில் ஒரு வாசகர் கடிதம் காலராவிற்குக் கை கண்ட மருந்து எனும் மருத்துவத்தைக் கூறியுள்ளார். இதுவும் மாந்தருக்கு மருத்துவம் அளிக்க

உதவியுள்ளது. மேலும் இதுபோன்ற பழகு மருத்துவம் எவ்வளவிற்கு ஓர் உயிர்க் கொல்லி நோய்க்குக் கை கொடுத்துள்ளது என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

## நாய்க்கடி

'வெறிநாய்க்கடி' எனும் கட்டுரையில் வெறிநாய் எப்படி இருக்கும் என்று கூறி அந்நாய் 10-15 நாட்களுக்குள் இறந்துவிட்டால் உடன் சிகிச்சை செய்யவேண்டும் என்றும், சந்தேகமிருந்தாலும் சிகிச்சை செய்து கொள்வது நல்லது என்றும் கட்டுரையில் விளக்கியபின், மருத்துவமாக, "எருக்கு வேர் சிகிச்சையாக"க் கூறப்பட்டு அனுபவத்தில் நல்ல குணம் தெரிய வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே சமயம் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளவும் ஜூலை இதழ் வற்புறுத்துகிறது. வாசகர் கேள்விக்குப் பச்சிலை முறை ரகசியமாகப் பாதுகாக்க வேண்டியவை என்று கூறிய இதே இதழ் ஆகஸ்டில் வெட்டவெளிச்சமாக, நாய்க்கடிக்கு மருந்துடன் செய்முறையையும் கூறியுள்ளது.

## ஆயுர்வேத மருந்துகளும் – அறிவியல்பூர்வமான ஆய்வுகளும்

ஆயுர்வேதமும், சித்த மருத்துவமும் ஆராய்ச்சி செய்யாது அனுபவபூர்வமாகவே செய்யப்படுகின்றன என்ற கூற்றை 'மறுக்கும் நிலையில் ஆயுர்வேத மருந்துகள் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டதையும் அதன் முடிவுகளையும் "ஆரோக்கியம்" (1967 பக். 16) இதழ் மூலம் அறியமுடிகிறது. இதன்மூலம் ஆய்வுபூர்வமாகச் சுதேச மருந்துகளின் குணப்பாட்டை அறிய முயன்றிருப்பது அறியப்பட்டுள்ளது.

வாரணாசி ஹிந்து பல்கலைக்கழக ஆயுர்வேத உயர்தரப் படிப்புத் திட்டத்தின்கீழ் சில ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இரண்டு திரவியங்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. ஒன்று "ரோகிணி"; மற்றது "அஸ்திசம்ஹாரி". ரோகிணி என்ற பதத்திற்கு வளர்ச்சியைக் கொடுப்பது என்பது பொருள். இதைக்கொண்டு முறிந்த எலும்பு, அறுந்த தசை பிளவுபட்ட தோல் முதலியவற்றை வளரச் செய்வதாக மருத்துவத்தில் குறிப்பிடுகின்றனர்.

முயல்களுக்கு ரணங்களை உண்டு பண்ணி இம்மருந்தின் துணையுடன் மாமிசத்தினாலேயோ அல்லது ஃபைபரினாலேயோ ரணங்கள் ஆறுகின்றனவா என்று நிர்ணயிக்கப்பட்டு ஆய்வுகள் நடைபெறுகின்றன. இதுபோலவே உடைந்த எலும்பைக் கூடச் செய்ய "பிரண்டை"யை உபயோகித்தால் உடைந்த எலும்புகள் இயற்கையினால் கூடுவதைவிடச் சீக்கிரமாகக் கூடுமா என்ற அறிய முயல்களின் எலும்பைச் செயற்கையாக முறித்து இம்மருந்தின் மூலம் ஆயுர்வேத வைத்தியர்களும் அறுவைச் சிகிச்சைச் செய்பவர்களும் சேர்ந்து நிரூபிக்க எடுத்துக்கொண்ட முயற்சி வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் "மூக்கரட்டை", "வல்லாரை" ஆகிய மூலிகைகள் வயோதிகத்தன்மை அதிகமாகாதிருப்பதற்கு உபயோகப்படுபவை என்பதில் எது சிறந்தது என்று ஆய்வு செய்து, கொலஸ்டிரால் அளவு குறைவும், சீரம் ஆசிட் பாஸ்பட்டேஸ் குறைவும். பிராணவாயுவை இயக்கும் சக்தி அதிகரிப்பும் வல்லாரையில் இருப்பதை அறிந்து, மூக்கரட்டையில் சில நல்ல குணங்கள் இருந்தாலும் வல்லாரைக்குச் சமமாகத் தேகத்தில் மாறுதல்களைக் காணமுடியவில்லை என்பது ஆய்வின் முடிவாகக் கூறப்பட்டுள்ளது. வேதியியல் சோதனை மூலம் மேலும் ஆராய்ச்சி செய்தால் இவற்றை மருந்தாக உபயோகிக்க முடியும் என்று ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

மேலும் டிராப்பிகல் இயோசினோபிலியா (Tropical Eosinophelia) என்ற நோய்க்கு ஆயுர்வேத மருந்துகளும் ஆயுர்வேத மருத்துவமும் எப்படி உதவும் என்று ஆராய்ச்சி செய்யப்படுவதாகவும் காப்டன் சீனிவாசமூர்த்தி ஆராய்ச்சி சாலையில் சுதாகல்பம் (Calcium therapy) என்பது சங்கு, பவழம், சிப்பி, சோழி முதலியவற்றின் பஸ்பங்கள் மற்றும் மான் கொம்பு, தந்தம், கபால எலும்பு, ஆமை ஓடு போன்றவற்றின் பஸ்பங்களையும் ரசாயன முறைப்படி ஆராய்ந்து இவற்றின் மூலப்பொருள்களைக் கண்டுபிடிக்க ஆய்வுகள் நடத்தப் படுவதாகவும் (1967, பக். 29) செய்திக் குறிப்புகள் காணப்படுகின்றன.

# 1970 வரை நோய்த் தடுப்புக் கட்டுரைகள்

ஒரு நோய் வருவதற்குரிய மூலகாரணத்தை அறிந்த பிறகே தடுப்பு ஊசி மற்றும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. (எ.கா.) பெரியம்மைக்குக் காரணம் வைரஸ். இதற்குத் தடுப்பு மருத்துவம் அம்மைப் பால் குத்திக் கொள்ளுதல். இதைப்போல் தொண்டை அடைப்பானுக்குக் காரணம் டிப்தீரியா என்ற பாக்டீரியா. இதற்குத் தடுப்பு முத்தடுப்பு ஊசி; ஆனால் நோயின் காரணத்தை அறியாத பொழுது அல்லது கண்டுபிடித்த பிறகும் தக்க மருந்துகளை அந்நோய்க்கு என்று குறிப்பிட்டுத் தயாரிக்க முடியாதபொழுது நோயிலிருந்து தப்பித்துக் கொள்ள வரும்முன் காக்க எடுத்துக்கொள்ளும் முயற்சியே உதவும். இதையொட்டி 20ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் வரை சுகாதாரத் தடுப்பு முறைகளும் சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு மற்றும் துப்புரவு குறித்த கட்டுரைகளும் தமிழகத்தில் வெளிவந்த பல மருத்துவ இதழ்களிலும் மற்றைய பொது அறிவியல் இதழ்களிலும் இடம்பெற்றுள்ளன.

அறிவியல் இதழ் ஜனவிநோதினியில் சுகாதாரம், தொற்றுநோய் மற்றும் மரபு வழிப் பண்புகள் குறித்த கட்டுரைகள் பல காணப்படுகின்றன.

– "தொற்று நோயாளிகள் படுத்திருக்கும் இடத்திலிருந்து விஷக் காத்து வெளிப்படுகிறதென்றும், அந்த கெட்ட காற்றைச் சுவாசம் வாங்கிவிடுவது அபாயத்திற்கு இடம்" என்ற செய்தி நல்லோரிணக்கம் என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. நல்லோரிணக்கத்திற்கும் தொற்றுநோய்க்கும் என்ன தொடர்பு? இதை அடுத்துக் கூறப்படும் செய்தியோடு தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ளலாம்.

'மனித ஜாதியில் சகல விதமான நன்மை, அழகு, சாமர்த்தியம் முதலியவைகள் எல்லாம் தொடருந்தன்மை யுடையனவென்பதற்கு சந்தேகமேயில்லை; வேண்டுமென்று நாம் முயன்று பயிற்றுவதனால் மாத்திரமல்ல நேராக சம்பந்தப்படுவதனாலேயும் தொடருகின்றன என்கிறது இக்கட்டுரை. அதாவது தொற்றுவியாதி தொடர்பினால் பரவுவதுபோல அழகு, நன்மை, சாமர்த்தியம் முதலியவை தொடருந்தன்மையுடையன என்பதால் சுற்றமும் நட்பும் அவர்களது பண்புகளும் நம்மைப்பாதிக்கும். ஆகவேதான் நல்லோரிணக்கம் என்பதை நமது முன்னோர்கள் வலியுறுத்தினார்கள்.

இதுபோலவே பெரியம்மை என்ற வைசூரிக்குத் தடுப்பு ஊசிபோட்டுக் கொள்வது வற்புறுத்தப்படுகிறது.

நாம் குணமது கைவிடேல் என்ற பழமொழியைக் கொள்ளாமல்— நமது மூடத்தனத்தால் வைசூரிக்கு ஊசி குத்திக் கொள்வதில்லை என்று தடுப்புமுறை பேசப்படுகின்றது. மேலும் உலகத்தில் வழங்கும் பான வகைகள் என்ற கட்டுரையில் தீமையை விளைவிக்கும் பானவகைகளைக் குறித்துக் கூறும்பொழுது,

'—ஆனது பற்றியே தீமை விளைவிக்கத்தக்க பானங்களை முற்றுமொழித்தல் வேண்டுமென்று தோன்ற நாயனாரும் உட்கப்படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றும் கட்காதல் கொண்டொழுகுவார்... உண்ணற்க கள்ளை யுண்ணுங்கால் சான்றோரால் எண்ணப்பட வேண்டாதார்— (ஜன விநோதினி 1886 பக். 190-192) என்று கூறுவார்.

## காசநோய்

1935க்கு பிறகே ஸ்டெப்டோமைசின் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுக் காசநோய் குணமாக்க வழியறியப்பட்டது. அதற்குமுன் நல்ல காற்று, நல்ல உணவு என்ற முறையில் கடற்கரை வாழ்க்கை, சானிடோரிய மருத்துவம் என நேரடி மருந்து என்று இல்லாத சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இக்கருத்துக்களை உள்ளடக்கிப் பல இதழ்களில் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

சளி பால் மற்றும் காற்றினால் காசநோய் பரவக்கூடிய அபாயம் உள்ளதால் ஆரோக்கிய தீபிகையில் மட்டும் (19/34 ஜனவரி) ஓர் ஆண்டில் காசநோய் குறித்து (1) ஏன் குடும்பங்களில் காசநோய் காண்கிறது (2) காசநோய் (3) காசநோயின் உண்மைக்காரணங்கள் (4) காசநோயைத் தடுப்பதற்குக் குழந்தை சம்ரக்ஷணை அவசியம் (5) காசநோய் தீர்ப்பதெவ்விதம் (6) குடும்பங்களில் ஏன் காசநோய் காண்கிறது (7) பால்ய விவாகமும் க்ஷய ரோகமும் ஆகிய ஏழு கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

## காசநோய் ஏற்படுவது தெய்வத்தின் கோளாறா?

க்ஷேமநிதி (1941, பிப்.) க்ஷய நோயின் குறிகள் என்னும் கட்டுரையில் "எச்சிலை லைசால் (Lysol) உள்ள பாத்திரத்தில் துப்ப வேண்டும்" என்றும், பாலால் காசநோய் கிருமி தொற்றுகிறது.... ஆகவே 'பசுவிற்கு பச்சரிசி, பச்சைப்பயிறு, தொவரம்பருப்பு பொட்டு, அம்மான் பச்சரிசியுடன் தும்பையிலை, கரிசிலாங் கண்ணி, கீழாநெல்லி, இவைகளை கொடுக்கவேண்டுமென்று கூறி, நமது சாஸ்திரத்தின்படி இது தெய்வத்தின் கோளாரென்று சொல்லப்படுகிறது.... இவற்றிற்கு மாறாக தொற்று வியாதிகள் சம்பந்தப்பட்டது என்று கூறுபவர்கள் பிராசீன முறையை ஆதரித்தவர்கள் கொள்கையாகின்றது" என்றும் கூறுகிறது.

காலராவிற்குக் காளியையும், அம்மைக்கு மாரியம்மாவையும் காரணமாகக் குறிப்பிட்டதுபோல், காசநோய் தொற்றையும் தெய்வத்தின் கோளாறு என்று இக்கட்டுரையில் சொல்லப் பட்டுள்ளது. இது அக்காலச் சமூக விழிப்புணர்வு இன்மை மற்றும் அல்லது கட்டுரை எழுதும் அறிஞர்களை ஒட்டியே அமைந்துள்ளதை உணர்த்துகின்றது.

## அம்மை பிசாசினால் வருவது இல்லை

இதோ ஒரு மாறான கருத்தை அறிவியல் இதழான "தமிழர் நேசனில்" (1941) ஆசிரியை முத்துலெட்சுமி எழுதிய வைசூரி அல்லது பெரியம்மை எனும் கட்டுரையின் மூலம் காணலாம். "அம்மை வியாதியை மற்ற வியாதிகளைப் போல் பாவித்தே வைத்தியம் செய்யவேண்டும். இது விஷசுரம், க்ஷயரோகம் போன்ற வியாதியே

தவிர வேறொன்றுமில்லை. அந்த வியாதிக்கு வைத்தியம் செய்து அநேகம் நபர் பிழைத்துக் கொள்ளவில்லையா? அதுபோலவே வியாதியையும் நோயாளியின் இம்சையைக் குறைக்கக்கூடிய மருந்து கொடுத்து கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது குணப்படுத்தலாம். அம்மைக்கு வைத்தியம் செய்தால் தெய்வம் கோபித்துக்கொள்ளும் என தப்பெண்ணம் கொண்டு நோயாளியை சொல்ல முடியாத இம்சைக்கு ஆளாக்குகின்றார்கள். இதை வாசிக்கும் எல்லோரும் இந்த வியாதி பிசாசினாலாவது, பூதத்தினாலாவது வருவதென்று பொய் நம்பிக்கையை விட்டுவிட்டு மேற்சொன்ன முறைகளைத் தழுவி சுகம் பெறுவார்களென்று நம்புகின்றேன்" என்று அறிவியல் பூர்வமாக எழுதியுள்ளார்.

## சுகாதாரம், துப்புரவிற்குத் தனிஇதழ்

பொது மருத்துவம் மற்றும் துப்புரவிற்காக மட்டும் வைத்திய கலாநிதி (1921) என்ற இதழ் (A Tamil monthly journal of Medicine & Sanitation) ஒரு தனி முத்திரையுடன் வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் 'எஸ்.கேபிடி ஆஸ்பத்திரியின் பிரதான டாக்டர் (Senior Physician) ஆயுர்வேத பூக்ஷண பண்டிட் எம். துரைசாமி ஐயங்கார் என்றாலும் இதழில் "ஐயமும் அதன் உபயோகமும்", "வியாதியைப் பரவச் செய்யும் ஈ", "அழுக்கடைந்த நாக்கு", "நரம்புச் சிலந்தி" (தண்ணீரில் பரவுவது) போன்ற பொதுச் சுகாதாரத்தைக் குறித்த கட்டுரைகளையே எழுதியுள்ளார்.

இக்கட்டுரைக் கருத்துக்களை ஒட்டியே "ஆயுள்வேத" இதழும் நோக்கத்தைக் கூறுகிறது. "வைத்தியம் சுகாதாரம் முதலியவைகளில் அவர்களுக்கு ஆற்றலை உண்டாக்க மாதம் தோறும்" என்று, "வியாதி வருமுன் தம்மைக் காத்துக் கொள்வதே புத்தியுடையான் இயல்பென்பதேல்" என்ற பாட்டுடன் தடுப்பு முறையைத் தன்னுடன் இணைத்துக் கொண்டதை விளக்குமுகமாக இவ்விதழில் நாய், பூனை வளர்ப்பதால் ஏற்படும் சுவாச ரோகம், கொக்கிப்புழு (1923, செப்டம்பர்) ஆகிய கட்டுரைகளும் காணக் கிடக்கின்றன.

ஆயுர்வேத இதழ், தடுப்புமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்ததுபோல், அலோபதி இதழான 'ஆரோக்கியமும் சிசுவும்

சுகவாழ்வு', 'குழந்தை சாவுக்கு காரணம் அறியாமையும் சமுதாயப் பழக்கமும்', 'புகையிலையின் கேடு', மற்றும் ஈக்களினால் உண்டாகும் கேடுகள் போன்ற நோய்த் தடுப்பு முறைக்கான கட்டுரைகளுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதே காலத்தில் வெளிவந்த ஸ்ரீதன்வந்திரி (1923, ஜுன்)யிலும் காலராவிற்கான தடுப்பு முறைகளும் மற்றும் மருந்துகளைப் பற்றிய குறிப்புகளும் அடிக்கடி வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

மலேரியா ஒழிப்பு இயக்கம் தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு முன் மலேரியா தமிழ்நாட்டில் அதிக விழுக்காட்டில் இருந்தது. இதற்குக் காரணம் அனாபிலஸ் கொசுவே. ஆகவே இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் வண்ணம் (ஆரோக்கிய தீபிகை, 1933, ஜனவரி), "ஈ, கொசு முதலிய பூச்சிகள் வியாதியைப் பரப்புவது எப்படி?", "இந்தியாவில் சாக்கடையைக் கொண்டு பயிரிடுதல்" போன்ற கட்டுரைகள் காணப்படுகின்றன. இதுபோலவே பேய்களும் மனிதர்களும் (1934, செப்டம்பர்), பெரியம்மை (1933, ஜனவரி) போன்ற தடுப்புமுறைக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

சித்த மருத்துவ இதழான "வைத்திய மலரி"லும் (1952 ஆகஸ்ட்), காசநோயின் பல்வேறு பிரிவுகளான கோழைக்காசம், இழுப்புக் காசம், இரத்தக்காசம் என்ற நோய்களைக் குறித்த கட்டுரையும் வைசூரிக்கு வீட்டு மருத்துவமும் சொல்லப் பட்டுள்ளது.

தடுப்புமுறையைப் போதிக்கும் விதமாக மற்றொரு இதழ் புதுவையிலிருந்து வெளிவந்த க்ஷேமநிதி (1942) "வைத்திய விஷயங்களையும் அடக்கிய ஒரு இதழ்" என்று தன்னை அறிவித்துக் கொள்கிறது.

மருத்துவத்திற்கான இதழ்களைத் தவிர்த்து மகளிர் முன்னேற்றத்திற்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இதழான "சிந்தாமணியும்" பொதுச் சுகாதாரத்தைக் குறித்த கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளது.

1934 ஆரோக்கிய தீபிகையின் ஆண்டு அட்டவணைப்படி மொத்தம் வெளிவந்த கட்டுரைகளில் பொதுச்சுகாதாரம் மற்றும் துப்புரவு குறித்த கட்டுரைகள் சுமார் 65 விழுக்காடுகள் உள்ளன.

ஆக இவ்விதழ்களின் போக்கைப் பார்க்கும்பொழுது பொதுச் சுகாதாரம் துப்புரவு என்பது இரேணியசினால் வெளியிடப்பட்ட துண்டுப் பத்திரிகையின் செயல்பாடு நீட்டித்து 20ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலம் வரை தொடர்ந்து பெருமளவில் கட்டுரைகள் எல்லா மருத்துவமுறை இதழ்களிலும் தடுப்புமுறைக் கட்டுரைகளாக அதிகம் வந்துள்ளன. ஏனெனில் முத்தடுப்பு ஊசி மற்றும் போலியோ சொட்டு மூலமும் இன்றைய காலக்கட்டத்தில் தான் முழுஅளவு இளம்பிள்ளைவாதம், தொண்டை அடைப்பான், கக்குவான், வாய்ப்பூட்டு நோய்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. 1975இல்தான் பெரியம்மை இல்லை என்ற நிலை ஏற்பட்டது. மலேரியாவை ஒழித்த பிறகு துப்புரவைக் கடைப்பிடிக்காததாலே மீண்டும் தமிழகத்தில் இந்நோய் தலைதூக்கி உள்ளது. இதுபோலவே யானைக்கால் நோயுடனும் தொடர்போராட்டம் நடந்து வருகிறது.

# நலக்கல்வி

## புலால் மறுப்பு

'பத்துவித ஆட்சேபனைகள்' என்ற கட்டுரை மாமிச உணவினால் ஏற்படும் கேடுகளை விவரிக்கின்றது. "ஆரோக்கிய தீபிகை" (1931 நவம்பர்) இதையும் தாண்டிக் 'கொல்லாமை'யை ஆதரிப்பதற்கு ஒரு தனி இதழ் "ஜீவரக்ஷகனும்", புலால், புகை, மது ஆகியவற்றிற்கு முற்றிலும் எதிர்ப்பு தெரிவிக்கும் வண்ணம் "நல்வழி"யும் மருத்துவக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டுள்ளன.

இவ்விதழில் "நெய்யில் கலப்படம்" மற்றும் "ஆரோக்கிய வர்தமானங்களும் குறிப்புகளும்" எனும் பகுதியில் புரதச்சத்திற்கு சோயாபீன் மாற்றாகச் சொல்லப்பட்டுள்ளது. 1946லேயே சோயாபீன் மாற்றாகச் சொல்லப்பட்டுக் குறைந்த செலவில் புரதம் என்ற ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றும் இன்றுவரை சோயாபீன் தமிழ்நாட்டில் ஒரு தனி இடத்தை உணவில் பெறாதது பெருங்குறையேயாகும்.

## குழந்தைக்குப் பால் கொடுக்க எந்தவிதப் பாட்டில் சிறந்தது

மற்றுமொரு எடுத்துக்காட்டாகக் குழந்தைக்குப் பால்கொடுக்க எவ்விதமான பாட்டில் சிறந்தது என்பதற்குப் படகு போன்ற பாட்டிலே சிறந்தது என்று விளக்கியுள்ளது.

## விளக்கெண்ணெய்

இதுபோலவே பேதிக்கு விளக்கெண்ணெய் கொடுத்தால் கெடுதல் என்று எழுதிய பிறகு அதற்கு மாற்றாக மலச்சிக்கலுக்கு என்ன மருத்துவம் என்பதற்கு "இசுபகோல் விதைகள்

மலச்சிக்கலைப் போக்கும் மருந்து" என்று விடையளிக்கப் பட்டுள்ளது. இவ்விதையை அலோபதி மருத்துவர்களும் இப்பொழுது மலமிளக்கியாக உபயோகப்படுத்தி வருகின்றனர்.

## குழந்தையும் தூளியும்

'தூளியில் தூங்கினால் கெடுதலா?' எனும் கேள்வி 'ஆரோக்கியம்' (1967, நவம்பர்) இதழில் வாசகர் கடிதம் மூலமாகக் கேட்கப்பட்டதற்குச் "சுவாசாசயம் நன்கு விரிந்து சுருங்கவும் நல்ல காற்றை சுவாசிக்கவும் தூளியில் வசதிக் குறைவு, புழுக்கமும் அதிகம், இதன் பயனாக மார்புச்சளியும் கணையும் அடிக்கடி ஏற்படக்கூடும்' என்பது ஓர் உடலியக்க விழிப்புணர்வுப் பதிலாக உள்ளது.

## கேடான பானங்களுக்கு எதிர்ப்பு

'ஆயுர்வேத' இதழில் (1974, ஏப்ரல், பக். 6) 'டீ' (தேநீர்) குடிப்பதால் விளையும் கேடுகளைப் பற்றி..." தேயிலை இதுவே டானிக் ஆசிட்; பல கெடுதலான வஸ்துக்கள் உள்ளன. இன்னும் பல வஸ்துக்களும், தேயிலையில் கொதிக்கும் தண்ணீர்பட்டதும் கரைந்து இன்னும் பல வஸ்துக்களும் அதே தேயிலையில் கஷாயத்தில் இறங்கி விடுகின்றன. இதை நாம் யாரும் யோசிக்காமல் அதிக அவாவுடன் முன்பின் யோசிக்காமல் ஆபத்துக்களையடைந்து அவைகளை அனுபவிக்கவும் உட்படுகிறோம்......". என்று அதனால் ஏற்படும் கேட்டைக் கூறுகிறது.

இதுபோலவே ஆரோக்கியமும் சிசுவும் சுகவாழ்வும் (1923) இதழ் புகையிலையின் கேட்டைப் பற்றியும், மதுவிலக்கைத் தளர்த்தக்கூடாது என்றும் மற்ற மாநிலங்களில் தளர்த்தியதைக் கண்டு (ஆரோக்கியம், டிசம்பர் பக். 271) மனம்வெதும்பியும் கண்ணீர் வடித்துள்ளது.

## கண்நோய் தடுப்புமுறை

"பற்களைத் தினந்தோறும் காலையில் ஆல்யூலா (ஆலவிழுது) வேல் முதலிய குச்சிகள் ஒன்றால் துலக்கவேண்டும். முதலில் இடது

பக்கத்தில் தொடங்கி பிறகு வலது பக்கத்தில் தேய்த்து, நாக்கை வழித்து முறைப்படி வாய்க்கொப்பளித்து சுத்தஞ்செய்யவும்..... இரவில் சாப்பிட்டு கை, வாய் இவைகளைக் கழுவிய பின் ஒவ்வொரு கண்ணிலும் மும்மூன்று துளி சுத்த நீர் விட்டு இமைகளைத் தேய்த்து சந்திர தரிசனம் செய்வது மிகவும் நன்று...

தரிசனம் செய்த பிறகும் கண்களில் சுத்தநீர்விட்டு அலம்பிச் சற்று இமைகளைப் பிசைந்துவிட வேண்டும். மூன்று தினங்களுக்கு ஒரு முறை கண்களுக்கு மை அல்லது அஞ்சனம் தீட்ட வேண்டும். பழக்கிராம்பு பக்குவ வெண்ணெய் மிகவும் நன்று. வாரத்திற்கு இருமுறை எண்ணெய் முழுக்கு நெறியாகச் செய்ய வேண்டும். தலைப்பாகை, செருப்பு இவைகளையணிந்து நடக்கவேண்டும்.... மத்தியான உணவில் பண்ணெய்க்கீரை, சிறுகீரை, பொன்னாங்கண்ணிகீரை இவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இரவில் பால் அன்னமோ தனிப் பாலையோ முறைப்படி உட்கொள்ளவேண்டும். இரு வேளையும் நெய் கலந்து உண்ண வேண்டும்." என்று அகத்தியர் நயனவிதி ஐந்நூற்றிலிருந்து பாட்டும் சுருத்துரையும் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. கண் நோய் பாதுகாக்க ஒரு கட்டுரையும், பல்நோய் என்ற கட்டுரையில் "எதிராக்காத்தல்" என்ற செய்யுளுடன் பல் வியாதிகள் 10 என்று சொல்லி அதற்கான தடுப்புமுறைகளைக் குறிப்பிட்டுப் பல்லை நன்றாகப் பராமரிக்காவிட்டால் "வாயுடன், மூக்கு, கண், காதுகளும் கெட்டுவிடும்'' என்று அறிவுறுத்துவதோடு சில தற்காப்பு முறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

# முன்னோர் வழக்கம் மூடத்தனமன்று

நம் முன்னோர் செய்யும் மருத்துவப் பழக்கவழக்கங்கள் மூடப்பழக்கங்கள் அல்ல என்பதை 'நந்தி' (1974 மார்ச்) இதழ் எடுத்துக் கூறுகின்றது. பசுஞ்சாணத்தில் மருத்துவப் பயன் எனும் கட்டுரையில் "பசுஞ்சாணைத்தைச் சுத்தித்து வைத்தால் கரைபிடிப்பதில்லை. பொருள்கள் கெடுவதில்லை என்பதும், அதே ஒரு மருந்து என்பதும் நம் நாட்டு மக்கள் அறிந்ததே. மேலும் நெல் போன்ற தானியங்களைச் சேமித்து வைக்கும் இடங்களில் பூச்சி அறிக்காமல் இருப்பதற்கு பசுஞ்சாணமும் மண்ணும் குழைத்து பூசுவது தொன்றுதொட்டு நம் நாட்டிலுள்ள பழக்கம். சாப்பிட்ட எச்சிலை எடுத்த இடத்தைச் சாணத்தைக் கொண்டு துடைப்பதில் ஈ, கொசு, எறும்பு போன்றவைகளால் தொந்தரவு இருப்பதில்லை என்பது நாம் உணர்ந்தது" என்று கூறி அயல்நாடுகளில் இச்சாணத்தால் காயத்தை ஆற்றிய நிகழ்வுகளையும் விவரித்துள்ளது.

இதேபோல் 'சித்த மருத்துவம்' (1982, அக்டோபர்) "அதிகாலையில் தங்கள் வீடுகளுக்கு முன்பாக தெருவில் 10-20 அடி சதுரத்திற்குப் பசுஞ்சாணத்தைத் தண்ணீரில் கரைத்துத் தெளிப்பது பூச்சிகளை அழிப்பதற்கே என்றும், தரையில் இலைபோட்டு உண்டபின் இலையை எடுத்துவிட்டு அந்த இடத்தைப் பசுஞ்சாணத்தைக் கரைத்து தெளித்து மெழுகுவதும், சாப்பிட்ட இடத்தில் எச்சில் சிந்தியிருக்கலாம் அதிலிருந்து நச்சு நுண்மங்கள் பரவாமல் இருக்கவே இவ்வாறு செய்கிறார்கள்" என்று கூறியுள்ளதைக் காணமுடிகின்றது.

# மூடநம்பிக்கை தகர்ப்பில் இலக்கிய இதழ்களும், மருத்துவ இதழ்களும்

'தமிழர் நேசன்' (1917) வைசூரி அல்லது பெரியம்மை எனும் கட்டுரையில் –"இந்த வியாதி பிசாசினாலாவது, பூதத்தினாலாவது வருவதென்ற பொய் நம்பிக்கையை விட்டு மேற்சொன்ன முறைகளைத் தழுவி சுகம் பெறுவார்களென்று நம்புகின்றேன்" என்று வியாதிக்குக் காரணம் என்ன என்பதை அறிவுறுத்துகிறது.

இதேபோல் 'ஜீவரக்ஷகன்' எனும் இதழ் (1932) "அம்மை பேய் பிசாசுகளால் வருவதில்லை" என இடித்துக் கூறுகின்றது.

1928இல் வெளிவந்த சித்த மருத்துவ இதழான 'மருத்துவ'னில் பண்டித எஸ்.எஸ். ஆனந்தம் தன் முதல் இதழின் குறிக்கோளாகக் கூறும்போது நோய்வராமல் தடுத்துக் கொள்ளப் பலியிடல், பூசை போடல், மொட்டை அடித்தல் போன்ற அறிவற்ற கொள்கைகள் ஒழியவேண்டும்" என்ற அறைகூவலுடனே தொடங்கப்பட்டுள்ளது.

"ஆரோக்கிய மார்க்கங்களைப் போதிக்கும் பத்திரிகை" என்ற வாசகத்துடன் சென்னையிலிருந்து வெளிவந்த 'ஆரோக்கிய தீபிகை" (1924) இதழின் நோக்கம் 'நமது பத்திரிகை' என்ற தலைப்பில் "தற்காலத்தில் இந்தியாவில் அறியாமை, ஏழ்மைத்தனம், மூடபக்தி ஆகிய இவை மூன்றும் குடி கொண்டிருக்கின்றன. ஆனது பற்றி முழுவதிலும் தடுக்கக் கூடிய அநேக பயங்கரமான வியாதிகளுக்கு இந்தியா இரையாகிக் கொண்டு வருகிறது. தொத்து வியாதியை எதிர்க்கும் சக்தியோ மிகக் கம்மியாய் நிற்கிறது. பொதுமக்களின் மூடத்தன்மையையும் மூடபக்தியையும் துரத்தியோட்டவும், ஆரோக்கியமான பழக்கங்களை அவர்களுக்குப் போதிக்கவும், சுகாதார விஷயங்களில் அவர்கள் உணர்ச்சியைத் தூண்டுவதும் ஆரோக்கிய தீபிகையின் முக்கியக் கருத்தாகும். உங்களுடைய

நலத்தைக் கருதியே செய்யப்படும் இப்பிரச்சாரத் தொழிலில் உங்களுடைய ஒத்தாசையும், ஒத்துழைப்பும் வேண்டியதவசியம்" என்று கூறிய இவ்விதழ் இங்கிலீஷ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளிலும் பிரசுரமாகி உள்ளது.

## இதழ்கள் – சமூக நிலையை அறிவிக்கும் கண்ணாடி

ஆயுர்வேதம் (1923 மார்ச்) இதழில் பிரசவமாகும் நிலையில் கருவுற்றவள் என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட கட்டுரையில் மருத்துவச்சிமார்களை குறிப்பிடும் ஆசிரியர்.

''எக்காலத்திலும் இவர்களையே நாம் நாடிச் செல்ல வேண்டியவர்களேயாவோம்; பிரசவமான ஆறுநாட்கள் வரையில் மருத்துவச்சி பிரசவ வீட்டை விட்டு விலகக்கூடாது'' என்று கருவுற்றவருக்கு அறிவுறுத்துகிறார். இதிலிருந்து நாம் அறிவது 1923 வரை நம் மருத்துவமனைகளில் அல்லது மகப்பேறு மருத்துவர் துணையுடன் பிரசவிப்பது என்பது போன்ற வசதிகள் அற்ற காலம் என்றே நாம் அறிந்து கொள்கிறோம்.

இப்படிப் படித்திராத நபர்களின் மூலம் மகப்பேறு மருத்துவம் பெறும்பொழுது தாய்க்கும், சேய்க்கும் பல கேடு நிகழ்வதால் மருத்துவச்சிமார்களுக்கே அலோபதி முறையில் அண்மைக் காலங்களில் தூய்மையான முறையில் மருத்துவம் பார்க்கப் பல சலுகைகள் அவர்களுக்குக் கொடுத்துக் கற்றும் கொடுக்கப்பட்டதால் பிரசவிக்கும் தாய் மற்றும் சிசுவின் இறப்பு விகிதம் பல மடங்கு குறைந்துள்ளது.

## மருத்துவத்தை நாட்டுமொழியில் கற்றுத்தர வேண்டும்

'வைத்திய வித்யாப்யாஸமும் தேச பாஷையும்' எனும் தலையங்கக் கட்டுரையில் "பிரிட்டிஷ் அரசாட்சி நமது பாரத நாட்டில் ஆரம்பித்த பிற்பாடு இதுகாறும் எக்காரணம் பற்றியோ தேசீய வைத்தியமானது க்ஷீணதிசையை அடைந்துவந்தது. சுமார் 1880ஆம் ஆண்டு மேலைநாட்டு வைத்திய 'பாடசாலைகள் ஏற்பட்டு டிரஸ்ஸர் எனப்படும் 3வது வகுப்பு வைத்தியர்களைத் தயார் செய்து வந்த காலத்தில் தேசபாஷையின் மூலமாய் வைத்து வைத்திய வித்தையை கற்பிக்கத் தொடங்கினார்கள். இந்த ப்ரயத்தினம்

எல்லா மாகாணங்களிலும் உண்டாயிற்று. ஆனால் பின்னிட்டு இந்த முறையானது நிறுத்தப்பட்டது.

ஐந்து வருட காலம் ஆங்கிலத்தில் வாசித்திருந்த போதிலும் சுக்கு, திப்பிலி, மிளகின் குணங்கள் கூட அவர்களுக்கு தெரியாமல் போயிற்று. தேசபாஷைகளைவிட்டு அந்நிய பாஷையில் தேசீய ஸம்பிரதாயங்களையும், பாஷையையும் முற்றிலும் அறியாத குருமார்களிடம் வைத்யவித்யாப்பியாசம் செய்து வந்த காரணம் பற்றி ஒருவொருக்கொருவர் பரஸ்பர ஸம்மந்தமில்லாமல் போய்விட்டது. இரண்டு மூன்று வருஷங்களுக்குமுன் வங்காள தேச சட்ட நிரூபண ஸபை அங்கத்தினர்களில் ஒருவர் பிராந்திய பாஷையில் வைத்திய வித்தையை விருத்தி செய்து வைத்தியர்களுடைய ஸங்கியை அதிகப்படுத்த வேண்டுமென்ற தீர்மானத்தை முன் வைக்க அது நிஷ்மலமாய் போயிற்று. அது விஷயமாய் திரும்பவும் பிரயத்தனப் படவேண்டுமென்று எங்கள் அபிப்பிராயம்".

ஆங்கில மருத்துவத்திற்கு எதிராகச் சுதேசி மருத்துவர்கள் போர்க்கொடி தூக்கிய நிலைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகவும் மேலும் நம்நாட்டு மொழியிலேயே மருத்துவ அறிவியலை நம் நாட்டு அறிஞர்கள் மூலம் படிக்க ஒருவொருக்கொருவர் உள்ள நட்பும், நம் சுதேச மருத்துவமும் மறையாதுபோக வசதி செய்ய உதவியாய் இருக்கும் என்ற நோக்கில் ஸ்ரீ தன்வந்திரி (1923, ஆகஸ்ட்)யில் இத்தலையங்கம் வந்துள்ளது.

# தென்னாட்டு மொழியில் (தமிழ், தெலுங்கில்) ஆயுர்வேதக் கல்வி

"சென்னை ஆயுர்வேத கலாசாலையானது காலஞ்சென்ற வைத்திய ரத்ன பண்டித வி. கோபாலசார்யார் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு அதில் ஸமஸ்கிருத கிளை மாத்திரம் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வந்தது. பிறகு தேச பாஷையிலும் கற்பிப்பது நலமென்றெண்ணி தெலுங்கு பாஷையில் ஓர் கிளையை ஏற்படுத்தினார்.... கலாசாலை தென்னாட்டில் இருப்பதினால் மாணவர்கள் அதிகம் சேர்ந்து படிப்பதற்கும் அதனால் இந்நாட்டுக்கும் ஆயுர்வேதத்தின் வளர்ச்சிக்கும் அதிக பயன் உண்டாகுமென்றெண்ணி தமிழ் கிளையையும் ஏற்படுத்தினார்.

வடமொழி நூல்களை போதிப்பதெல்லாம் தென்மொழியில் உள்ள நூல்களையும் தமிழ் வைத்தியபண்டிதர்கள் ஆதரவுடன் போதித்து வருகின்றார்கள். தவிர மேல்நாட்டு வைத்தியமும் போதிக்கப்படுகிறது... மாணவர் சங்க சார்பில் தமிழ், தெலுங்கு, ஸமஸ்கிருத பாஷைகளில் சிரமமாக கட்டடங்களைக்கட்டி.... கற்றறிந்த வைத்திய பண்டிதர்களை தலைமை வகிக்கச் செய்து அவர்களை கொண்டும் பல விஷயங்களை ஆராய்ச்சி செய்கின்றனர்".

இக்கல்லூரியின் போக்கை அறியும் நிலையில் ஆயுர்வேதம் முழுக்கமுழுக்க சரஹர், சுசுருதர் சம்ஹிதைகள் வடமொழியில் உள்ளதால் இம்மருத்துவம் அம்மொழியிலேயே கற்றுக் கொடுக்கும் வழக்கத்தை மாற்றி அமைத்துத் தென்னாட்டு மாணவர்கள் தங்கள் மொழியில் மருத்துவத்தைப் படிப்பதோடு அத்துடன் இங்குள்ள மற்றைய மருத்துவர்களையும் கொண்டு கூட்டம் நடத்தி மாணவர்களின் ஆய்வுக்கு உதவியுள்ளது.

இன்றைய அலோபதி மருத்துவப் படிப்பு முறையை அன்றே ஆயுர்வேத மருத்துவப் படிப்பிற்குப் பயன்படுத்தி உள்ளதை இக்கட்டுரை மூலம் அறியமுடிகின்றது. மேலும் மேல்நாட்டு மருத்துவமும், அக்காலக்கட்டத்தில் தென்னாட்டில் நடைமுறைக்கு வந்த நிலையில் அதையும் போதித்து எந்நிலையிலும் முழுமையாக ஒரு மருத்துவர் தன்னை தயார்படுத்திக்கொண்டு மருத்துவம் புரியத் தேர்ச்சியடைய வேண்டியதற்கு அத்துணை முயற்சிகளும் நடைபெற்றுள்ளன என்பதும் 'கலாசாலை' (ஸ்ரீதன்வந்திரி 1923, ஆகஸ்ட்) என்ற கட்டுரை மூலம் தெரியவருகிறது.

# சமூக விழிப்புணர்வில் இதழ்களின் பங்கு

மருத்துவர் அறிந்திருக்க வேண்டிய சட்டதிட்டங்களைச் சரிவர அறிந்து முறைப்படி நடக்க வைத்திய மலர் (1952 ஜூன்) எனும் இதழ், இந்திய வைத்தியர்கள் அனுசரிக்கவேண்டிய சர்க்கார் சட்டங்கள் எனும் கட்டுரையில்,

"ஒரு வைத்தியர் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு கேஸை தான் சிகிச்சை அல்லது தான் அங்கு ஆஜரில்லாதபொழுது வந்து கவனித்துக் கொள்ளும்படி மற்றொரு வைத்தியரை அமர்த்திக் கொண்டால் அவ்விரு வைத்தியர்களுக்குள்ளும் அதாகிலும் ஸ்பெஷல் ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட்டிருந்தாலன்றி, பின்னவர் நோயாளியிடமோ அல்லது ஆஜராகாதிருக்க, வைத்தியரிடமோ தான் செய்த வேலைக்காக சார்ஜ் கேட்கக் கூடாது" என்று சென்ட்ரல் போர்ட் ஆப் இண்டியன் மெடிஸன் பிரசுரித்திருக்கிறது என்று வெளியிட்டுள்ளது.

தவிர வைத்திய கட்டண விகித நிர்ணயம் பகிரங்கமாகக் காட்டப்படக் கூடாது என்றும், வைத்தியத் தொழிலில் கறாரான பீஸ் நிர்ணயம் கிடையாது என்பது போன்ற சட்டங்களையும் இம்மலர் நினைவுபடுத்திக் கொள்ள உதவியுள்ளது. இதேபோல் "விவேக சிந்தாமணி" அறிவியல் இதழிலும் துப்புரவு, சுகாதாரம் என்பவை மக்களுக்கு எவ்வளவு முக்கியம் என்று முனிசபல் சட்டங்கள் மூலம் கூறப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் மக்கள் நல்வாழ்வு வாழ ஒரு கழிவறை எப்படி இருக்கவேண்டும், அதனால் விளையும் நன்மைகள் என்ன என்பதை நினைவூட்டும் விதமாகவும், இதனால் நோய் பரவுவது எப்படித் தடுக்கப்படுகிறது என்ற பொதுச் சுகாதாரச் செய்தியை அளிக்கும் வண்ணமும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

—"இதை முனிசபல் சட்டம் 217 பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஒருவாறு சீர்திருத்தலாம். மலம் வெறுந்தரையில் விழுந்து அதிலிருந்து சுரண்டி அப்புறப்படுத்துவதை விட துவாரத்தின் கீழே அப்போதைக்கப்போது எடுத்து சுத்தம் செய்யத்தக்க இருப்பு அல்லது துத்தநாகத் தொட்டிகள் வைத்தால் மலத்தை யதிலிருந்து சுலபமாய் சுத்தப்படுத்தக்கூடிய தாயிருக்கிறது" என்றும், ஒரு கழிவறை "சுண்ணாம்பினால் கட்டப்பட்டு, தாரினால் பூசப் பட்டிருக்க வேண்டும்" என்றும் ஒரு கழிவறை எப்படி இருத்தல் வேண்டும் என்றும் விளக்கமான சட்டத்துடன் கூறியுள்ளது.; இக்கட்டுரை மக்களுக்கு நலவாழ்வுக்கான துப்புரவு குறித்த ஒரு விழிப்புணர்வுச் செய்தியாகும். இவற்றை நோக்கும்பொழுது மருத்துவ இதழானாலும் அறிவியல் இதழானாலும் மக்கள் சட்டதிட்டத்தை அறிந்து தெரிந்து கடைப்பிடிக்க உதவியுள்ளது என்பது தெளிவாகிறது.

# அலோபதி மருத்துவர்கள் கட்டுரை எழுதத் தடை

மருத்துவர்கள் மருத்துவ இதழ்களுக்குக் கட்டுரைகளை எழுதி வெளியிடச் சட்ட திட்டங்கள் இடையூறாக இருந்துள்ளன. 1966ஆம் ஆண்டு வெளியான 'குணம்' மாத இதழ் "மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் அடுத்த இதழிலிருந்து கட்டுரைகள் வெளியிடப் போவதாக அறிவித்திருந்தது".

ஆனால் அடுத்த இதழில் கட்டுரைகள் வெளியாகவில்லை. அதற்குப் பதிலாக இதழாசிரியர் பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்.

...."சாதாரண மருத்துவர்களே மருத்துவ அதிகாரியின் அனுமதி பெற்று எழுத வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரி ஆசிரியர்களின் கட்டுரை எமக்கு கிடைத்தாலும் அதை வெளியிடுவதினால் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்பதினால் மருத்துவ மாணவர்களுக்கென்றே வெளியிடவிருந்த கட்டுரைகளை வெளியிடாமலேயே இருக்க முடிவு செய்து விட்டோம்". இதனால் மருத்துவக் கட்டுரைகள் வெளிவரத் தடங்கல் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து இன்றைய நிலையில் அரசு கட்டுரைகளை எழுத அனுமதித்தாலும் அரசு திட்ட முடிவுகளைக் குறை கூறி எழுதக்கூடாது என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தமிழகப் பிரிவான இந்திய மருத்துவக் கழகம் 1975இல் ஒரு சிறப்புக் கூட்டத்தின் முடிவாக அலோபதி டாக்டர்கள் இதழ்களில் நோய்களைக் குறித்து அறிகுறிகளை எழுதும் பொழுது பெயருடன் அவர்கள் பட்டம், விலாசம் மற்றும் புகைப்படங்கள் இருக்கக் கூடாது என்றும் அப்படி இருப்பின் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறுகிறது. இதையே இதழ்

ஆசிரியர்களுக்குத் தன் கண்காணிப்பாளரின் வழியாகத் தெரிவிக்கச் சொல்லி அப்படி மீறும் நிலையில் அது ஒரு விளம்பரத்திற்கு ஒத்ததாக அமையும் என்றும் கூறியுள்ளது. இதன் பொருள் டாக்டர் மீது இக்கழகம் நடவடிக்கை எடுக்கும் நிலையையே அது உணர்த்தியுள்ளது என்பதுதான்.

இதைப் பார்க்கும்பொழுது அலோபதி படித்துப் பட்டம் பெற்றவர்களும் 1966லிருந்து கட்டுரைகளை இதழ்களில் வெளியிடுவது என்பது மிகுந்த சங்கடங்களை ஏற்படுத்தி யுள்ளதை நாம் அறிய முடிகிறது.

இதன் காரணமாக இப்பொழுது மருத்துவ இதழ்களில் அலோபதி டாக்டர்கள் எழுதும் கட்டுரைகள் மிகவும் குறைந்து விட்டன. தாங்கள் படித்த பட்டங்களைக் கூடப் போடக் கூடாத நிலையில் இதழ்களில் இப்பொழுது அலோபதி மருத்துவர்கள் தங்கள் கட்டுரைகளை எழுதத் தயங்குகின்றனர். ஆனால் எந்த ஆய்வு அறிக்கைகளும் இல்லாமல் மருந்துகளைச் சோதனைகளுக்கு உட்படுத்தாது 'எய்ட்சுக்குத் தீர்வான மருத்துவம்', 'நீரிழிவுக்கு முழுச் சுகம்' என்று விளம்பரம் மற்றும் கட்டுரைகள் அலோபதி மருத்துவர்களைத் தவிர்த்து மற்றைய மாற்று மருத்துவம் செய்பவர்களால் வெளியிடப்படுகிறது.

இப்பொழுது ஹெல்த் பெயரைக் கொண்டு வரும் மருத்துவ இதழ்களில் எழுதி வந்த அலோபதி மருத்துவர்களின் கட்டுரைகள் இல்லாத நிலையில்; அக்குபஞ்சர், ஹோமியோ, சித்த மருத்துவக் கட்டுரைகளே மிகுந்து காணப்படுகின்றன.

அலோபதி மருத்துவர்கள் எழுதும் கட்டுரைகளில் பெயர்கள் மட்டும் கொடுக்கப்பட்டுச் சில இதழ்களில் கட்டுரைகள் வெளிவந்தாலும் தேவையான தொடர்புகளுக்கு என்று மருத்துவரின் முகவரி கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு வேடிக்கையான செயலாகும்.

**இதழ்கள் தொழில்முறையில் பணம் ஈட்ட உதவவில்லை..... 1970 வரை**

ஒவ்வொரு மருத்துவ இதழ்களும் தங்கள் துறைசார்ந்த மருத்துவம் சிறக்க முழுமனதுடன் அவற்றிற்கு ஒரே நோக்கமாக

நோயற்ற வாழ்வை குறைவற்று மக்களுக்கு அளிக்க முனைந்துள்ளன. இதைப் பெரும் தொழிலாகச் செய்தார்களா என்றால் அப்படிச் சொல்வதற்கில்லை. இதழ்கள் 'தினம் தினம் தோன்றுவதும் கிருஷ்ண பக்ஷத்து சந்திரன்போல் மங்குவதுமாய் இருக்கிறது என்று "வைத்திய போதினி" (1910) கூறி ஒப்பந்தக்காரர்கள் (சந்தாதாரர்) பணம் ஒழுங்காக அனுப்பாமையை விளக்கி எழுதியுள்ளது இங்கு நினைவுகூர வேண்டியதாக உள்ளது.

இக்குறை விளம்பரங்கள் இதழ்களில் வரும் இன்றைய நிலையில் மருத்துவ இதழ்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவதோடு மருத்துவ விழிப்புணர்வும் பெருகி வருகிறது.

◆◆◆◆◆

# துணை நூல்கள்


1. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தம், தமிழர் பதிப்பகம் முதல் பதிப்பு, சென்னை. (1980).
2. அச்சுக்கலை, மா.சு. சம்பந்தம், தமிழர் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, சென்னை (1976).
3. அறிவியல் கட்டுரைகள், பெநா. அப்புசுவாமி, தொகுதி 2, மு. வளர்மதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை (2000).
4. ஆரோக்கிய ரகசியம், வி.என். குமாரசாமி, சுந்தர் பப்ளிகேஷன், மூன்றாம் பதிப்பு, சென்னை (1978).
5. இதழாளர் இராஜாஜி, சு. திரிபுரசுந்தரி, டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம், சென்னை.
6. இந்தியாவின் விடிவெள்ளி சீகன்பால்கு, எஸ். லாரன்ஸ், டி அருள்தாஸ் கிருஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை (1997).
7. இதழியல் கலை, டாக்டர் மாபா. குருசாமி, ஏழாம் பதிப்பு, குரு தேன்மொழி, திண்டுக்கல் (2001).

8. இரேனியஸ் தமிழியல் ஆய்வின் முன்னோடி, தொகுப்பாசிரியர் தொ. பரமசிவம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி.

9. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமும் தமிழகத்தில் அறிவியல் புரிதல்களும் போக்குகளும், த.வி. வெங்கடேசுவரன் (முனைவர் பட்ட ஆய்வேடு) (2001).

10. எண்பத்திரண்டில் தமிழ்ப் பதிப்பாசிரியர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை (1985).

11. கலைக் களஞ்சியம் தொகுதி எட்டு, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை (1961).

12. சுவடிச் சுடர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை (2001).

13. கிருத்தவமும் தமிழும், மயிலை சீனிவேங்கடசாமி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

14. தரங்கைத் தாரகை, ஜெ.ஜி. ஜேக்கப் சுந்தர்சிங். தமிழ் சுவிசேஷலுத்திரன் திருச்சபை, சென்னை (2002).

15. தமிழ் இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும், அ.மா. சாமி நவமணி பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை (187)

16. தமிழ் இதழியல் களஞ்சியம், மா.சு. சம்பந்தம், தமிழர் பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை (1900).

17. தமிழ் இதழியல் வரலாறு, மா.சு. சம்பந்தம், தமிழர் பதிப்பகம், முதல் பதிப்பு சென்னை (1987)

18. தமிழும் கணிப்பொறியும், மா. ஆண்ட்ரோ பீட்டர், கற்பகம் புத்தகாலயம், சென்னை (2002).

19. தமிழில் அறிவியல் இதழ்கள், இரா. பாவேந்தன், சாமுவேல் ஃபிஷ்கிறீன் பதிப்பகம், முதற்பதிப்பு, கோவை (1998).

20. மதுரை தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர் (1956).

21. மருத்துவத் தமிழ் முன்னோடி டாக்டர் கிறீன், அம்பி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

22. ராஜ மிருங்கம், வி.பி. நடராஜ சாஸ்திரி (பதிப்பாசிரியர்), சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சை (1951).

23. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், அ.மா. சாமி, நவமணி பதிப்பகம் முதற்பதிப்பு, சென்னை (1993).

24. ஸுசுருத ஸம்ஹிதை முதற்பகுதி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், சென்னை - 16 (1991).


◆◆◆◆◆

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| உ. வே. சா. பதிப்புப் பணியும் பன்முக மாட்சியும் | 35.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| மிருச்சகடிகம் | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| பெரியாரின்பண்பாட்டுப்புரட்சி | 25.00 |
| வ. உ. சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள் | 30.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| பாரதி இந்தியா | 40.00 |

**Pub.No. 452** **தமிழில் மருத்துவ இதழ்கள்** **35.00**